ஜேர்மனியிலும் வன்னியன்
தொலைபேசி அட்டைகள்


தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067
Pub.


1.50 Euro ஜேர்மனி

# ஈழமுரசு

ஐரோப்பா
POOBALAM WEEKLY
2004 09 - 15 Juin 2004 17

சம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)

# மூதாளர் தங்ககம் தேசியத் தலைவரால் திறந்துவைப்பு



தாயக விடுதலைப் போருக்கு தங்களை ஆகுதியாக்கிய மாவீரர்களின் பெற்றோர்களை பராமரிப்பதற்கென்று கிளிநொச்சியில் இயங்கிவரும் அன்புச்சோலை மூதாளர் பேணகத்தின் புதிய தங்ககக்கட்டடம் தேசியத் தலைவரால் கடந்த 5ம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

(விபரமான செய்தி 11 பக்கம்)

அம்மா உன் பிள்ளை உயிரோடு இல்லை என்றே நினைக்காதே..




# சிறீலங்காவில் ஆட்சி கவிழுமா ?



(08.06.2004)

சிறீலங்காவின் நடாளுமன்றம் இன்று கூடும் நிலையில், சுதந்திர ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனக்கு 113 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதை நிரூபிக்கவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கு பெரும்பான்மை நிரூபிப்பதற்கு அரசுத் தலைவர் சந்திரிக்கா தீவிர முயற்சி எடுத்து வருகின்றார். இன்று நாடாளுமன்றம் கூடும்போது பெரும்பான்மை நிரூபிக்குமாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தால் வாக்கெடுப்பின் மூலம் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டும். அதற்காகவே நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற சிறிய கட்சிகளுடன் அரசுத் தலைவர் இரகசியமான முறையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகின்றார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைய மறுத்துவிட்ட நிலையில், அதன் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுடன் சந்திரிகா இன்று காலை தொலைபேசியில் உரையாடியிருக்கின்றார்.

3 ▷

Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்


உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்

**V.T.Cash & Carry**

900g யாழ்ப்பாணம் மிளகாய்தூள் ஒரு போத்தல் 1Euro - மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro - 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord


## பிந்துனுவெவ படுகொலைகள்:

# குற்றவாளிகளின் மேன்முறையீட்டை விசாரிக்க நீதியரசர் குழு நியமனம்

(07.06.04)

பிந்துனுவெவ படுகொலைச் சம்பவம் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரணை செய்வதற்காக நீதியரசர்கள் 5 பேரைக் கொண்ட உயர்நீதி மன்றக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவினால் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவிற்கு உயர் நீதிமன்ற நீதியரசர் ஜே.ஏ.என். சில்வா தலைமை வகிப்பார். மேன்முறையீட்டு மனு எதிர்வரும் 10ம், 11ம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

2000ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ம் திகதி பண்டாரவளையில் அமைந்துள்ள பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமுக்குள் புகுந்து அங்கு தங்கவைக்கப்பட்டிருந்தவர்களில் 27 தமிழர்களைப் படுகொலை செய்த சம்பவம் தொடர்பாக 41 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டதும், 3 நீதியரசர்கள் முன்னிலையில் மேல்நீதிமன்றில் வழக்கு விசாரிக்கப்பட்டு, இந்த விசாரணை முடிவில் 5 பேருக்கு மட்டுமே மரண தண்டனை விதிக்கப்பட்டதும் தெரிந்ததே. இவர்கள் ஐவருமே தமக்கான தண்டனையை நீக்கித் தம்மை நிரபராதி என அறிவிக்குமாறு கோரி மேன்முறையீடு செய்திருக்கிறார்கள். இவர்களில் 3 பேர் பிந்துனுவெவ கிராமவாசிகள் இருவர் பொலீஸ் அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.



# இலங்கையில் மூத்த எழுத்தாளர் கே.கணேஷ் காலமானார்

(07.06.04)

இலங்கையின் மூத்த தமிழ் எழுத்தாளரும் மலையய இலக்கிய முன்னோடிகளில் ஒருவருமான கே. கணேஷ் அவர்கள் தனது எண்பத்து நான்காவது வயதில் கடந்த 5ம் திகதி கண்டியில் காலமானார். இந்தியாவில் உருவாகிய முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போல் இலங்கையிலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை 1946ல் தோற்றுவித்த பெருமை இவருக்குண்டு. தமிழ் இலக்கியத் தளத்தில் இவருடைய முக்கிய பணியாக மொழிபெயர்ப்புகள் கருதப்படுகின்றன. பெரும்பான்மையான சோசலிச இலங்கியங்களை தமிழில் மொழிபெயர்த்து அறிமுகப்படுத்திய பெருமை இவருக்குண்டு. சீன இலக்கிய மேதை லூசுன் அவர்களின் சிறுகதைகள், வியட்னாமின் தந்மை ஹோ சி மின் அவர்களின் சிறைக்குறிப்புகள் உட்பட இருபதுக்கும் மேற்பட்ட படைப்பாளிகளை தமிழுக்கு மொழிபெயர்த்து தந்திருக்கிறார். தமிழ் இலக்கித்துடன் எழுபது வருடத் தொடர்பும் அனுபவமும் ஆற்றலுமிக்கவரான திரு.கே.கணேஷ் அவர்களின் மறை ஈழத்து இலக்கியத்திற்கு ஈடுசெய்ய முடியாததாகும்.

# இலங்கைச் சிறுவர்களை வசப்படுத்த முயன்ற பிரித்தானிய கலைஞருக்கு இரு வருட சிறை

(07.06.04)

இணையத் தளத்தினூடாக இலங்கைச் சிறுவர்களை தன்வசப்படுத்த முயன்ற இலண்டன் வாசி ஒருவருக்கு பிரித்தானியா இரு வருட கால சிறைத்தண்டனையை வழங்கியிருக்கிறது. இலண்டனைச் சேர்ந்த பிரயன் பார்னெல் (66) என்பவர் கடந்த 2002ம் ஆண்டு இசைநாடக நிறுவனம் ஒன்றினூடாக தெற்காசிய நாடுகளுக்கு சுற்றுலா சென்றிருந்த வேளையில், இணையத் தளத்தின் ஊடாக இளம் சிறுவர்களை தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

இச்செய்தியை இணையத்தளத்தில் கண்டுகொண்ட சிறீலங்காவின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் ஒரு 15 வயது சிறுவன் என தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு இணையத்தளம் ஊடாக பார்னெல்லையுடன் தொடர்பு கொண்டுள்ளார். இதனையடுத்து, சில மணித்தியாலங்களில் அவர் பதிலளித்துள்ளதுடன், மின்னஞ்சல் மூலமாக தனது புகைப்படங்களையும் அனுப்பியுள்ளார். அவற்றுள் பார்னெல் பாலியல் ரீதியான உறவில் ஈடுபட்டிருப்பது போன்ற படமொன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சிறீலங்கா அதிகாரிகள் பார்னெல்லின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து, அவரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தியுள்ளனர். இவர் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கு சிறீலங்கா சட்டத்தில் இடமில்லாததன் காரணமாக இவ்வதிகாரிகள் இது தொடர்பான விபரங்களை பிரித்தானிய காவற்துறையினருக்கு அனுப்பியுள்ளனர்.

பிரித்தானிய காவற்துறையினர் சிறீலங்கா அதிகாரிகளுடன் இணைந்து கொழும்பில் சாட்சியங்களை விசாரணைக்குட்படுத்திய பின்னர் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் பார்னெல்லை கைது செய்தனர். இலண்டன் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன. கடந்த புதன்கிழமை சந்தேக நபருக்கு இரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், இவரது பெயர் பிரித்தானிய பாலியல் குற்றவாளிகள் பட்டியலில் பதிவு செய்யப்படவுள்ளது.


**Meubles Europeens**

உங்கள் வீட்டுத் தளபாடத் தேவைக்கு ஜேர்மன், பெல்ஜியம் தயாரிப்பு புதிய பழைய வீட்டுத் தளபாடங்கள் மலிவு விலையில்.
லெதர் சோபாக்கள் 3+ 2+1 சோகேஸ்
சாப்பாட்டு மேசைகள் கட்டில்
அலுமாரி குசின செட் மற்றும் அனைத்துவகை வீட்டுத் தளபாடங் களையும், வீட்டுப் பாவனைப் பொருட்களையும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்துகொள்ள நாடுங்கள்.

Meubles Europeens
4, Rue Des Villas
94800 Villejuif
Mo -Villejuif Louis Aragon (N°: 7)
Tél: 01 46 77 19 40 - 06 64 42 42 62

**திறக்கும் நேரம்**
திங்கள் முதல் சனி வரை - 14H - 20H
ஞாயிறு - 10H - 18H

Pub-Fr-20

**EUROCONSULT SARL TRADUCTIONS**

**மொழி பெயர்ப்பு நிலையம்**
அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாக கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு
24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

**போட்டோ பாலா**
மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்
உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

**Errances Travels**
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# சிறீலங்காவில் ஆட்சி கவிழுமா ?

(01ம் பக்கத் தொடர்ச்சி)

(08.06.2004)

பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான வாக்கெடுப்பு நடைபெற்றால் நடுநிலை வகிக்குமாறு அல்லது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது விடுமாறும் தொண்டமானிடம் அவர் கேட்டிருக்கின்றார்.

அதற்கு தொண்டமான் சாதகமான பதில் அளித்ததாக தெரியவரவில்லை. கடந்த அரசாங்கத்தின் போது அமைச்சராக இருந்த ஆறுமுகம் தொண்டமானுக்கு பாரிய நிதிநெருக்கடி ஏற்பட்டு வங்கிகளில் கடன்பெறவேண்டிய தேவையும் உருவானது. அப்போதைய வங்கிக் கடன்களை உடனடியாக இரத்துச் செய்தால் தான் நடுநிலை வகிப்பதற்கு தயாராக இருப்பதாக தொண்டமான் சந்திரிகாவிடம் கூறியதாக அறிய முடிகின்றது.

இது குறித்து அரசுத் தலைவர் தனக்கு நெருக்கமான அமைச்சர் மங்கள் சமரவீரவுடன் கலந்தாலோசித்திருக்கின்றார். இதேவேளை ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற குழுத்தலைவர் எல்லாவல மேதானந்த தேரரோடும் அரசுத் தலைவர் உரையாடியிருக்கின்றார். தேரரும் பல நிபந்தனைகளை விதித்ததாக அறிய முடிகின்றது. அரசாங்கத்தின் மூன்றாவது நாடாளுமன்ற அமர்வு இன்று கூடும்போது நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலை குறித்து ஐக்கிய தேசிய முன்னணி கேள்வி எழுப்பவுள்ளது. அதேவேளை பிரதியமைச்சர் சிறீபதி சூரியராச்சியின் அலுவலகத்தின் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டினால் இருவர் கொல்லப்பட்டமை தொடர்பாகவும் பலத்த சர்ச்சையை அரச தரப்பு எதிர்க்கட்சி மீது கிளப்பவுள்ளது. அத்துடன் கிழக்கில் இடம்பெறும் படுகொலைகள் தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுக்கு எதிரான கேள்விக்கணைகளை தொடுக்கவுள்ளனர். முஸ்லீம் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்றுள்ள உறுப்பினர்களையும் தம் பக்கம் இழுப்பதற்கு சந்திரிகா தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். இன்று நாடாளுமன்றத்தில் அரசு தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்காது விட்டால் உடனடியாக பதவி விலகி மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்க எதிர்க்கட்சிகளுக்கு வழிவிடவேண்டும். அவ்வாறு முடியாது போனால் மறுபடியும் பொதுத் தேர்தல் ஒன்றிற்கு உத்தரவிடவேண்டிய கட்டாயம் அரசு தலைவர் சந்திரிகாவிற்கு ஏற்படும்.



## அமெரிக்க படையணி சிறீலங்காவுக்குச் சென்றுள்ளது

(கொழும்பு)

சிறீலங்கா படையினரின் போரிடும் திறனை வலுப்படுத்துவதற்கான பயிற்சி ஒன்றை வழங்குவதற்காகவே இந்த அமெரிக்கப் படையணிக் குழு அங்கு சென்றுள்ளது.

எதிர்வரும் 12ம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தக் கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்பார்வை செய்வதற்காக அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப். கேணல் ஜேம்ஸ் எல். கம்பஹலின் தலைமையிலான குழுவே கடந்த 4 ம் திகதி வெள்ளிக்கிழமை சிறீலங்காவிற்கு சென்றுள்ளது.

இந்த கூட்டு இராணுவப் பயிற்சியில் சிறீலங்கா, பங்களாதேஷ், நேபாளம், மங்கோலியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்த இராணுவப் படை அணிகள் பங்குபற்றவுள்ளன. இது போன்ற பயிற்சிப் பட்டறைகளின் மூலம் சிறீலங்கா இராணுவத்தினரை சர்வதேச படைத்தரத்திற்கு உயர்த்த முடியும் என்று அரச தரப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## கொழும்பில் தமிழ் இணைய கருத்தரங்கு


(07.06.04)

தமிழ் இணையம் எமது தேசத்தின் எழுச்சிக்காக என்ற கருப்பொருளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் தமிழ் இணைய கருத்தரங்கு நடைபெற்றது. தமிழ் இணையத்தின் பயன்பாடுகளை எவ்வாறு மக்கள் மயப்படுத்தி கிராமப்புற மக்களுக்கு எடுத்துச் செல்வது என்பது பிரதான தொனிப்பொருளாக இருந்தது. உலகத் தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றத்தின் இலங்கை உறுப்பினர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த இந்த ஒருநாள் கருத்தரங்கில் 175ற்கு மேற்பட்டோர் இலங்கையின் பல பாகங்களிலிருந்து வந்து பங்குபற்றினர்.

கிளிநொச்சி வன்னி ரெக்கிலிருந்து 30ற்கு மேற்பட்ட மாணவர்களும், தமிழ் தகவல் தொழல்நுட்ப ஒருங்கமைப்பு யாழ் இலவச கணனிப் பயிற்சி நிலையத்திலிருந்து 30ற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. உத்தமத்தின் தலைவரும் 15 வருடங்களுக்கு மேற்பட்ட தமிழ் இணைய அனுபவத்தையுடைய திரு.முத்துநெடுமாறன் மலேசியாவிலிருந்து வருகை தந்து இந்த கருத்தரங்கில் பிரதான பங்கு வகித்தார்.




## பாட்டாளிபுரத்தில் திலீபன் மருத்துவமனை
## விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பங்கேற்பு



மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் பாட்டாளிபுரம் கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை தியாகி திலீபன் மருத்துவமனை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ள 11வது தியாகி திலீபன் மருத்துவமனை இதுவாகும். இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், கேணல் பானு, விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் கலந்து கொண்டனர். அகவணக்கத்தின் பின்னர் திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தியாகி திலீபன் மருத்துவமனையின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். கேணல் பானு மருத்துவமனையை திறந்து வைத்தார். மருத்துவமனை டாக்டர் வேணியன் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதைத் தொடக்கி வைத்தார். விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி காருண்யா தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் அருண் உட்பட பலர் உரையாற்றினர். வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு அதிகாரிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாகிகளும் நிகழ்வில் பங்குபற்றினர்.

## ஜேர்மனியில் தூக்குக் காவடி முறிந்தது உலங்குவானூர்தி உதவிக்கு வந்தது

(07.06.04)

ஜேர்மனியின் கம் மாநிலத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அம்மன் கோவில் திருவிழாவின்போது தூக்கு காவடி ஒன்று முறிந்து விழுந்ததில் அதில் வந்த பக்தர் படுகாயமடைந்தார். அவரை மீட்பதற்காக உலங்குவானூர்தியில் அவசர உதவி மீட்புபணிக் குழுவினர் வந்து அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்த ஆலய திருவிழாவிற்கு ஜேர்மனியின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் செல்வது வழக்கம். இந்த விபத்தை அடுத்து ஜேர்மனியக் காவற்துறையினர் மேற்கொண்டு பக்தர்கள் தூக்கு காவடி எடுப்பதை தடைசெய்துள்ளனர். உடலை வருத்தி பாரிய கொழுக்களில் தாங்கியவாறு பக்தர்கள் செல்வதை ஜேர்மனிய தொலைக்காட்சி காட்டியபோது பலர் அதிர்ச்சியடைந்ததாக ஜேர்மனிய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# தமிழ்த் தேசியத்திற்கெதிரான கொலைகள்!



கடந்த 30ம் திகதி ஞாயிறன்று காலை கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகத்துறைப் பேச்சாளர் தயா மாஸ்ரருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. மட்டக்களப்பிலிருந்து ஊடகவியலாளர் ஜி.நடேசன் கதைத்தார். ‘மாஸ்ரர் இன்றைக்கு வீரகேசரியை ஒருக்காப் பாருங்கோ. மட்டக்களப்பில நடக்கிற கொலைச் சம்பவங்கள் பற்றி எழுதியிருக்கிறேன், பயந்து கொண்டிருந்து ஒன்றும் செய்யமுடியாது.’ இவ்வாறு அவர் தயா மாஸ்ரரிடம் கதைத்தபோது சொன்னார். அடுத்தநாள் ஜி.நடேசன் கொலை செய்யப்பட்டுவிட்டார். இதனை அவர் சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டார். ஆனால், ஊடகவியலாளர்களுக்கு மட்டக்களப்பில் அச்சுறுத்தல்கள் இருப்பதை அவர் உணர்ந்து வைத்திருந்தார். சக ஊடகத்துறை நண்பர்களிடம் கவனமாயிருக்கும்படி இவர் அடிக்கடி எச்சரிப்பார். கொலைஞர்களின் துப்பாக்கிக் குண்டுகள் மிகக் கவனமாக அவரைக் குறிவைத்துத் துளைத்துவிட்டன.

இறுதியாக அவர் எழுதியிருந்த கட்டுரையில், ‘மட்டக்களப்பில் நடைபெற்றுவரும் கொலைச் சம்பவங்கள் பற்றியே குறிப்பிட்டிருந்தார். சிறீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்னர், இரண்டு வருடங்கள், ஒரு மாதம், பதினொரு தினங்கள் மட்டுமே மட்டக்களப்பு மக்கள் ஓரளவு சமாதானத்தைச் சுவாசித்தார்கள். கருணாவின் பிளவிற்குப் பின்னர் சுமார் மூன்று மாதங்கள் மட்டக்களப்பில் இடம் பெற்றுவரும் கொலைகளும் வன்முறைச் சம்பவங்களும், படைத் தரப்பினரது தேடுதல் நடவடிக்கைகளும் மட்டக்களப்பு வாழ் மக்களைப் பீதிக்குள்ளாக்கி வருகின்றன’ என அவர் எழுதியிருந்தார். கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தே. திருச்செல்வம், மார்ச் மாதம் 23ம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த சம்பவத்திற்கு பிறகு அறுபது தினங்களில் சகல தரப்பிலும் 35 பேர் கொலை செய்யப்பட்டமையினை அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி அரச படையினரும் சிறீலங்காப் படையினரும் தத்தம் பகுதிகளில் ஆயுதங்களுடன் நடமாடத் தடையில்லை. ஆனால் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கருணா தரப்பினரும் ஆயுதங்களுடன் நடமாடுவதையும் அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். முக்கியமாக, கருணாவிற்கு நெருக்கமான மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட அங்கு நியமனம் பெற்றிருப்பது பொது மக்கள் மத்தியில் சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளமையினையும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

அன்றைய அதே பத்திரிகையில் தேனாடான் என்கிற புனைப்பெயரிலும் ஒரு கட்டுரையை திரு. ஜி. நடேசன் எழுதியுள்ளார். அதில் கிழக்குப் பல்கலைக்கழகப் பொருளியல் துறைத்தலைவன் கு. தம்பையாவீன் பணிகள் பற்றியும், அவர் கொல்லப் பட்டமையைக் கண்டித்தோ, அனுதாபம் தெரிவித்தோ உடனடியாக கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை எதனையும் வெளிடாமலிருந்தமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

திரு. ஜி. நடேசன் எழுதிய இக்கட்டுரைகள் வெளிவந்த அடுத்த நாள் காலையே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆனாலும் இக்கட்டுரைகளைப் படித்து விட்டே கொலைஞர்கள் இவரைச் சுட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. திரு. நடேசன் கொலை காரர்களின் பட்டியலில் ஏற்கனவே இருந்திருக்கிறார் என்பதுதான் உண்மை. எதிரிகளும், துரோகிகளும் இணைந்த ஒரு செயற்பாட்டின் மூலமாகவே இவர் கொல்லப்பட்டார் என்பதும் உண்மை.

இவ்வாறான - புத்தி ஜீவிகளை, ஊடகவியலாளர்களை அழித்தொழிப்பதன் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் எதனைச் சாதிக்கப் போகின்றார்கள். என்ன நன்மைகளைப் பெற்றுக் கொள்ளப் போகின்றார்கள் என்பது புரியவில்லை. பிரதேசவாதம் என்கிற நச்சுவிதையை மக்கள் மனங்களில் விதைப்பதினூடாக விடுதலைப் போராட்டத்தைச் சீர் குலைத்துவிடலாம் என்பது எமது தாயக விடுதலைப் போராட்டத்திற்கெதிரான சக்திகளினது நோக்கமாகவுள்ளது. கருணாவைப் பயன்படுத்தி இந்த நோக்கத்தைப் பாரிய அளவில் செயற்படுத்த இச் சக்திகள் முனைந்தன. கருணா விடுதலைப் புலிகளின் மதிநுட்பம் வாய்ந்த நடவடிக்கை ஒன்றின் மூலம் மட்டக்களப்பு மண்ணிலிருந்து அகற்றப்பட்டதும், பாரிய அளவில் இந்த நோக்கத்தை வெற்றிகொள்ள முடியாமற் போனது. இப்போது வடபகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட கல்விமான் கு.தம்பையா, ஊடகவியலாளர் ஜி. நடேசன் போன்றோரினது கொலைகளினூடாக மீண்டும் ஒரு பிரதேச ரீதியான பிரிவினையை ஏற்படுத்த இந்தச் சக்திகள் முற்படுகின்றனவா என்கிற சந்தேகங்கள் மக்கள் மனங்களில் ஏற்படுகின்றன.

**ஊடகவியலாளர்களை அழித்தொழிப்பதன் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் எதனைச் சாதிக்கப் போகின்றார்கள். என்ன நன்மைகளைப் பெற்றுக் கொள்ளப் போகின்றார்கள் என்பது புரியவில்லை. பிரதேசவாதம் என்கிற நச்சுவிதையை மக்கள் மனங்களில் விதைப்பதினூடாக விடுதலைப் போராட்டத்தைச் சீர் குலைத்துவிடலாம் என்பது எமது தாயக விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சக்திகளினது நோக்கமாகவுள்ளது.**

### வன்னியிலிருந்து விவேக்

இவ்வாறான சம்பவங்கள் மேலும் தொடருமானால், நடைமுறையிலுள்ள போர்நிறுத்த ஒப்பந்தம் சீர்குலைய நேரிடும். ஒட்டுமொத்தமான தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபாடு கொண்ட புத்தி ஜீவிகள், எழுத்தாளர்கள் மீதான கொலைகள் விடுதலைப் புலிகளைச் சீற்றம் கொள்ள வைத்துள்ளது. அமரர் ஜீ. நடேசன் அவர்களது அஞ்சலி நிகழ்வின்போது விடுதலைப் புலிகளின் கோபங்களையும், கண்டனங்களையும் வெளிப்படையாகவே காணமுடிந்தது.

இந்தக் கொலைகளுக்கு சிறீலங்கா அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் எனப் புலிகள் பகிரங்கமாகக் கூறியுள்ளனர். அரச கட்டுப்பாட்டிலுள்ள தாயகப் பகுதிகளில் நடைபெறும் இக்கொலைகளைத் தடுக்க அரச படைகளுக்கு இயலாவிட்டால், அப் பகுதிகளை விட்டு அவர்கள் அகன்று செல்லவேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கருணாவை, அவரது சில சகாக்களை, மேலும் மாற்று இயக்களிலிருந்து செயற்பட்ட சிலரை சிறீலங்கா அரசபடை தமது பாதுகாப்பில் வைத்திருப்பதும், அரச படையினது அனுசரணையூடாகவே விடுதலைப் புலிகளுக்கெதிராகவும், விடுதலைப் போராட்டத்திற்குச் சார்பான, தமிழ்த் தேசியத்திற்குச் சார்பான பொது மக்களுக்கெதிராகவும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்பதும், வெளிப்படையான உண்மை. அரசு இதனை மூடிமறைத்துக் கொண்டு பொய்யான சமாதானம் பேச முயல்வதைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். போர் நிறுத்த ஒப்பந்தங்கள் நடைமுறையில் இருக்க பொது மக்களும் புத்திஜீவிகளும் கொன்றொழிக்கப்படுகின்ற திரை மறைவுப்போர் ஒன்று நடந்து கொண்டிருப்பதை தமிழ்மக்கள் சகித்துக் கொள்ளமாட்டார்கள்.

விடுதலைப் புலிகள் சமாதானத்தை மிகுந்த அர்ப்பணிப்புடன் கடைப்பிடித்து வருகின்றனர். அது சிறீலங்கா அரசு நிரந்தர சமாதானத்தை தமிழ் மக்களுக்கு தந்துவிடும் என்கிற நம்பிக்கையினால் அல்ல. சமாதானத்தை விரும்பும் சர்வதேச உலகிற்கு சிறீலங்காவின் பேரினவாத கொடூர முகத்தை தோலுரித்துக் காட்ட வேண்டும் என்கிற ஓரே நோக்கத்திற்காகத்தான்!.

ஆட்சியதிகாரங்களை தக்கவைத்துக் கொள்வதற்காகவும், சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் சிறீலங்காவின் ஆட்சியாளர்கள், தொடர்ந்து நாடகமாடிக்கொண்டிருக்க முடியாது.

நாடகம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்!

லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்



தரமான, கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச் சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91

எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை

யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE



ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.



Pub-Fr

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

# உதவி வழங்கும் நாடுகளின் நல்லதொரு முடிவு

சமாதானப் பேச்சுக்கள் என்ற போர்வையில் சர்வதேச சமூகத்தின் நன்கொடையைப் பெற்றுக் கொள்வதில் தீவிரம் காட்டுமளவிற்கு, சிறீலங்கா அரசு சமாதான முயற்சிகளில் ஆர்வம் காட்டுவதில்லை என்பதையும், தமிழர் தாயகத்தில் ஒரு வலுவான கட்டமைப்பு நிறுவப்பட்டு தமிழ் மக்களுக்கு சரியான முறையில் பலன் கிடைக்கக் கூடிய ஒரு தீர்க்கமான நிலைப்பாடு இல்லாமல் சர்வதேச சமூகம் நிதியுதவிகளை வழங்குமானால், அது நிச்சயமாக அவர்களுக்கு பலனளிக்கப் போவதில்லை என்பதையும், கடந்த 1ம் திகதி செவ்வாய்கிழமை வன்னி சென்றிருந்த உலக வங்கியின் சிறீலங்காவிற்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்டிடம் விடுதலைப் புலிகள் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இதேவேளை, அதேதினம் பெல்ஜியம் தலைநகர் பிரசெல்ஸ்ஸில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில், 'சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகாவிட்டால், சர்வதேச சமூகத்தின் 4.5 பில்லியன் டொலர்களை சிறீலங்கா அரசு இழக்க வேண்டி ஏற்படும்' என எச்சரிக்கப்பட்டுள்ளது. ரோக்கியோவில் கடந்த ஆண்டு நடைபெற்ற மாநாட்டில், இலங்கையின் புனர்நிர்மாணப் பணிகளுக்காக இந்நிதி வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக கடந்த செய்வாயன்று பிரசெல்ஸ்ஸில் நடைபெற்ற மாநாட்டில் ஜப்பான், நோர்வே, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து ஆலோசித்து அறிக்கையொன்றை வெளியிட்டனர். அந்த அறிக்கையிலேயே சிறீலங்கா அரசுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிறீலங்கா அரசுக்கு பெருமளவு கடன்களையும், நிதியுதவிகளையும் பல்வேறு நாடுகள் கடந்த காலங்களில் வழங்கி வந்தன. புனர்நிர்மாணப் பணிகளுக்காக வழங்கப்பட்ட இந்த உதவிகளைக் கொண்டு சிறீலங்கா அரசு ஆயுதங்களை வாங்கிக்குவித்து, தமிழ் மக்கள் மீது பாரிய அழிவு நடவடிக்கைகளை மேற்கொண்டது. சிறீலங்கா அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகவும், உதவி வழங்கும் நாடுகள் சிறீலங்கா அரசுக்கு வழங்குகின்ற நிதியுதவிகளை நிறுத்த வேண்டும் எனக் கோரியும் தாயகத்திலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களும் பாரிய பேரணிகளையும், ஒன்றுகூடல்களையும் நடாத்தியிருந்தனர். எனினும் சிறீலங்கா அரசுக்கு தொடர்ந்து நிதியுதவிகள் கிடைத்த வண்ணமே இருந்தன.

இந்நிலையில், சமாதானப் பேச்சுக்களின் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை காண்பதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் புலிகள் தீவிரமாக முயன்று வருகின்றனர். இது தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசு, போரைத் தொடருவதை தடுத்து நிறுத்தியுள்ளது. இதேவேளை, சமாதானப் பேச்சுக்களின் மூலம் தீர்வொன்றை காணுமாறு சர்வதேச உதவி வழங்கும் நாடுகள் சிறீலங்கா அரசை அழுத்தம் கொடுக்கத் தொடங்கின. பெரும் பொருளாதார நெருக்கடியிலும், உலக நாடுகளின் உதவியிலும் தங்கியிருக்கும் சிறீலங்கா அரசாங்கத்திற்கு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. ஆனாலும் சமாதானப் பேச்சுக்களைத் தவிர்த்து இந்நிதியை பெறுவதற்கு பல்வேறு வழிகளிலும் அது முயற்சிகளை மேற்கொண்டது.

ஆனால், கடந்த காலங்களில் சர்வதேசங்களை பொய்யான பரப்புரையின் மூலம் ஏமாற்றிய சிறீலங்கா அரசின் முயற்சிகள், இம்முறை வெற்றியளிக்கவில்லை. மாநாட்டின் முடிவில் சர்வதேச நிதியுதவியாளர்கள் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், சர்வதேச சமூகத்திடமிருந்து சிறீலங்கா அனுகூலங்களை எதிர்பார்க்க வேண்டுமாயின், அது சமாதானப் பேச்சுகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் எனத் தெரிவித்திருப்பதுடன், பேச்சுவார்த்தையில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்தே நான்கு வருடகால கடன் திட்டத்தின் எஞ்சிய கடன்கள் வழங்கமுடியும் எனவும் அறிவித்துள்ளன. உதவி வழங்கும் நாடுகள் எடுத்துள்ள இந்த நல்லதொரு முடிவு, சிறீலங்கா அரசை போரை முன்னெடுக்க முடியாதவாறு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளியுள்ளன.

# சந்திரிகாவைக் கண்டித்து

## யாழ். நகரில் மாபெரும் கண்டனப் பேரணி

(07.06.04)

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு சிறீலங்கா அரசுப் படைகள் தொடர்ந்து விதித்துவரும் தடைகளைக் கண்டித்தும் இடம்பெயர்ந்த தமிழ்மக்களின் மீள்குடியமர்வை வலியுறுத்தியும், தென் தமிழீழத்தின் உண்மை நிலவரங்களை உரைக்கின்ற தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்தும் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

இப்பேரணி நடத்தப்படுவதை முன்னிட்டு யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில்- சிறீலங்கா அரசுத் தலைவி சந்திரிக்காவின் நழுவல் போக்கினால் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் தடைப்பட்டதுடன், தீர்வு முயற்சி கேள்விக்குறியாகியுள்ளது. சிறீலங்கா அரச படைகள் தொடுத்த போரினால் பெரும் இழப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்த தமிழ் மக்கள், சமாதான வழியில் தீர்வு கிட்டும் என்ற தமது நம்பிக்கை மங்கிவருவதாக உணர்கின்றனர்.

போர்நிறுத்தமும், புரிந்துணர்வு உடன்பாடும் எட்டப்பட்டு 28 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் தமிழர் தாயகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்பட்டு மீண்டும் ஒரு போரை சிறிலங்கா அரசு தமிழ் மக்கள்மீது தொடரவிருப்பதுபோல் தெரிகிறது. இதனை தமிழ் மக்கள் ஒரு போதும் விரும்பமாட்டார்கள். சிறீலங்கா அரசின் இக்கடும்போக்கை யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும் வன்மையாகக் கண்டிக்கின்றது. புதிய அரசை சந்திரிக்கா அமைத்தபோது, 'போர் நிறுத்தமும், புரிந்துணர்வு உடன்பாடும் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும்' என்று உறுதி கூறினார். அத்துடன் 'தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடரும்' எனவும் கூறினார். ஆனால் அரசுத் தலைவி சந்திரிகாவின் உறுதிப்பாடற்ற தன்மையினால் பேச்சுவார்த்தை மேசைக்கு அவரால் வர முடியவில்லை. விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடராது விட்டதுடன், இடைக்கால தன்னாட்சி அதிகார சபையையும் சிறிலங்கா அரசு கையளிக்கத் தவறிவிட்டது.

எனவே சந்திரிகா தலைமையிலான சிறீலங்கா அரசு தனது அசமந்தப் போக்கை கைவிட்டு எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் நடத்தவுள்ள கண்டனப் பேரணி, எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை, யாழ். நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலிலிருந்து ஆரம்பமாகி, யாழ். நகரூடாக நகர்ந்து யாழ். மாவட்ட அரச செயலகத்தைச் சென்றடையும். அங்கு சிறிலங்கா அரசுத் தலைவருக்கான மனுவொன்று யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும், பொது அமைப்புக்கள், பாடசாலைச் சமூகம், பலகலைக்கழகச் சமூகம், மற்றும் பொது மக்களும் இப்பேரணியில் ஒன்றுகூடவுள்ளனர்.

# இந்தியாவில் தமிழ் செம்மொழியாக அறிவிப்பு


*சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மிகவும் பழமை வாய்ந்த மொழியான தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்படும் என இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அறிவித்துள்ளார். காங்கிரஸ் தலைமையில் புதிய அரசு ஆட்சியமைத்துள்ள நிலையில், தலைமை அமைச்சர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் உரையாற்றியபோது அப்துல் கலாம் இந்த அறிவிப்பை வெளியிட்டார். இதன் மூலம் இந்திய ஆட்சி மொழிகளில் தமிழுக்கு இடம்கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

# தமிழ்ச்செல்வனின் ஐரோப்பிய பயணம் பிற்போடப்பட்டது !

(07.06.04)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சட்டவல்லுநர்களுடன் கலந்துரையாடுவதற்காக ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு இம்மாத நடுப்பகுதியில் மேற்கொள்ள விருந்த பயணத்தைப் பிற்போட்டுள்ளனர். சிறீலங்காவில் தற்போது நிலவும் உறுதியற்ற அரசியல் சூழ்நிலை காரணமா இந்தப் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை தொடர்ந்து தாமதப்படுத்திச் செல்லும் தற்போதைய அரசின் கபடத்தனம் மற்றும் இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகாரசபை ஆகியன குறித்து தமது அமைப்பின் சட்ட வல்லுநர்களுடனும் சில ஐரோப்பிய தலைவர்களுடனும் கலந்தாலோசிப்பதற்காக தமிழச்செல்வன் தலைமையிலான குழு ஒன்று இம்மாத நடுப்பகுதியில் ஐரோப்பா செல்ல இருந்தது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக் சூல்ஹைம் அண்மையில் கிளிநொச்சி சென்றபோது விடுதலைப் புலிகள் கேட்டிருந்தனர்.




# பாதுகாப்புப் படைகளின் அடுத்த பிரதம தளபதி யார்?

இலங்கையின் படைத்துறைக்கட்டமைப்பில் இம்மாதம் பாரிய மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. இராணுவத் தளபதியாகவும், பாதுகாப்புப்படைகளின் பிரதம தளபதியாக (Chief of Defence Staff) வும் தற்போது பதவிவகிக்கும் லெப். ஜெனரல் லயனல் பலகல்ல ஓய்வு பெறவுள்ளதையடுத்தே இந்த மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

லெப். ஜெனரல் லயனல் பலகல்ல வகித்துவரும் இருவேறு படைத் தளபதிப் பதவிகள் காரணமாக அவரது ஒய்வையடுத்து - இந்த இரு படைத் தலைமைப் பதவிகளிலும் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு எதிர்வரும் 15ம் திகதியுடன் 59 வயது பூர்த்தியடைகின்றது இவருக்கு வழங்கப்பட்ட மூன்று சேவை நீடிப்புக்கள் இம் மாதத்துடன் முடிவடைகின்றன. இராணுவச் சேவையில் உள்ள ஒருவருக்குப் பதவி ஓய்வுக்குப் பின்னர் மூன்று வருட சேவை நீடிப்பையே வழங்க முடியும். இந்த வகையில் லெப். ஜெனரல் லயனல் பலகல்ல இம் மாதத்துடன் ஓய்வு பெறுவது தவிர்க்க முடியாததாகும். இவர் சனாதிபதி சந்திரிகாவுடன் மிகவும் நெருக்கமானவராகவும் - நம்பிக்கைக்குரியவராகவும் இருந்ததால், கடந்த வருடம் ஒக்ரோபர் 27ம் திகதி பாதுகாப்புப் படைகளின் பிரதம தளபதி (CDS) என்ற புதிய பதவி உருவாக்கப்பட்டு முப்படைகளினதும் கூட்டுத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.



*லயனல் பலகல்ல*

பலகல்ல ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள நிலையில் இந்த இரண்டு பதவிகளிலும் யார்யாரை நியமிப்பது என்பது குறித்த பேச்சுக்கள், சர்ச்சைகள், ஊகங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

முப்படைகளினதும் கூட்டு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட பாதுகாப்புப் படைகளின் பிரதம தளபதிப் பதவிக்குத் தற்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நியமனம் இடம்பெறுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. காரணம் இந்தப் பதவியில் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு - சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மிகவும் விசுவாசமானவராகவும், நெருக்கமானவராகவும் இருக்கவேண்டும்.

லெப். ஜெனரல் லயனல் பலகல்லவையும் விட, கடற்படைத் தளபதி வைரஸ் அட்மிரல் தயா சந்தகிரி சனாதிபதி சந்திரிகாவுக்கு நெருக்கமாக நம்பிக்கைக்குரியவராக நடந்து கொண்டவர். இதனால் இந்த நியமனத்துக்கு அவர் நிச்சயம் தெரிவு செய்யப்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன.

அத்துடன் லெப். ஜெனரல் லயனல் பலகல்ல ஓய்வு பெற்றால் அவருக்கு அடுத்தபடியாக முப்படைகளிலும் உள்ள சிரேஷ்ட படையதிகாரியாக வைஸ் அட்மில் தயா சந்தகிரிதான் இருப்பார்.

2001 ஜனவரி முதலாம் திகதி கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற தயா சந்தகிரி 2002 செப்ரெம்பர் முதலாம் திகதி 55 வயதைப் பூர்த்தி செய்திருந்தார். படைகளில் 55வயதுக்குப் பின்னர் பணியாற்ற முடியாது.

ஆனால் சனாதிபதி சேவை நீடிப்பு வழங்கினால் தொடர்ந்து பணி புரியலாம். இந்த வகையில் வைஸ் அட்மிரல் தயா சந்தகிரிக்குப் பலத்த சர்சைகளின் மத்தியில் சனாதிபதி சந்திரிகா ஒரேயடியாக மூன்று சேவை நீடிப்புக்களை வழங்கியிருந்தார்.

ஒவ்வொரு வருடமாகச் சேவை நீடிப்பு வழங்கும் வழக்கத்தை மீறி ஓரே தடவையில் மூன்று வருட சேவை நீடிப்பு வைஸ் அட்மில் தயா சந்தகிரிக்கு வழங்கப்பட்ட போதே அவருக்கும் சனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையிலான நெருக்கமான உறவுநிலை வெளிப்பட்டது.

இந்த வகையில் தற்போது வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி இரண்டாவது சேவை நீடிப்பில் இருக்கிறார்.

இதனால் இவரையே பாதுகாப்புப் படைகளின் பிரதம தளபதியாகச் சனாதிபதி சந்திரிகா நியமிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இராணுவத் தலைமைப் பீடத்திலும் இந்த மாதத்தில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. புதிய இராணுவத் தளபதியாக யாரை நியமிப்பது என்ற சர்ச்சையும் இது தொடர்பாக ஊகங்களும் இப்போது பிரபலமடைந்திருக்கின்றன.

சிரேஷ்ட நிலை அடிப்படையில் தற்போது இராணுவத் தலைமை அதிகாரியாகவும் (Chief of Staff) கிழக்குக் கட்டளைத் தளபதியாகவும் பதவியில் இருக்கும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடதான் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட வேண்டும்.

ஆனால் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகர் மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்ன ஆகியோரின் பெயர்களும் பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.



இதுவரை காலமும் இருந்துவரும் வழக்கத்தின் அடிப்படையில் இராணுவத் தலைமை அதிகாரியாகப் பதவி வகிக்கும், சிரேஷ்ட நிலையில் இருக்கும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொடவுக்கு இராணுவத் தளபதி பதவி வழங்கப்பட வேண்டும்.

> மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஒரு நட்சத்திர நிலைத் தளபதி – இராணுவத்தில் கடும் போக்களராகக் கருதப்படுபவர். இவருக்கும் சனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் சில விடயங்களில் கருத்து முரண்பாடுகள் இருந்த போதிலும் இவரை வைத்து இராணுவத்தைப் பலப்படுத்தலாம் என்று அவர் கருதலாம்.

ஆனால், மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன ஆகியோரின் பெயர்களும் இப்பதவிக்குப் பரிசீலிக்கப்படுவதும், இது தொடர்பாக சனாதிபதி சந்திரிகா சிரேஷ்ட படையதிகாரிகளுடன் ஆலோசனை நடாத்துவதும் பல்வேறு சந்தேகங்களையும் சர்ச்சைகளையும் எழுப்பியுள்ளன.

இப்போதைய நிலையில், இராணுவ சிரேஷ்ட தர வரிசையில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட முதல் நிலையில் இருக்கிறார். இவருக்கு அடுத்தபடியாக மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்ன, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, மேஜர் ஜெனரல் தசில் சந்திரயில், மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி, மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய, மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க எனச் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளனர்.

சனாதிபதி சந்திரிகா சிரேஷ்ட நிலையைக் கருத்தில் கொள்ளாமல் இராணுவத் தளபதியை நியமனம் செய்யும் அதிகாரம் கொண்டவர். மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவுக்கு இப்பதவி அதிகரிக்கப் படாவிட்டால் மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்ன இப்பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும். ஆனால் மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்னவைப் பொறுத்த வரையில், இரண்டாவது நிலையில் இருந்தாலும் இராணுவப் பதவி நிலையில் பிரதி இராணுவத் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவே இருப்பதால் அவருக்கும் சாந்த கொட்டேகொடவுக்கும் தான் நேரடிப் போட்டி நிலவுகிறது.

மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட இராணுவத்தில் மென்போக்கு உடயவராக, ஐ.தே.க சார்பாளராக இனங்காணப்பட்டவர். இவர் தமது பதவிக் காலத்தில் பெரும்பகுதியை யாழ்ப்பாணத்திலும், வட-கிழக்குப் பிரதேசங்களிலும் கழித்தவர். பூநகரி இராணுவப் பின்னடைவுக்குக் காரணமானவராக இராணுவ நீதிமன்றினால் இனங் காணப்பட்டவர்.



*சாந்த கொட்டேகொட*

இராணுவ நடவடிக்கைகளில் பெரிதாகப் பெயர் அடிபடாத இவருக்குப் போட்டியாக இருக்கும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஒரு நட்சத்திர நிலைத் தளபதி - இராணுவத்தில் கடும் போக்களராகக் கருதப்படுபவர்.

இவரை வைத்து நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள், குடா நாட்டில் இவரின் செயற்பாடுகள் ஊடகங்களில் வெகுவாகப் பிரபலம் பெற்றவை. யாழ். குடாநாட்டை நோக்கிய புலிகளின் நகர்வைத் தடுத்து நிறுத்துவதில் கணிசமாகப் பங்காற்றியவராகக் கருதப்படுவர்.

இவருக்கும் சனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் சில விடயங்களில் கருத்து முரண்பாடுகள் இருந்த போதிலும் இவரை வைத்து இராணுவத்தைப் பலப்படுத்தலாம் என்று அவர் கருதலாம். சாந்த கொட்டேகொட இரகசியமாகப் புலனாய்வு நடவடிக்கைகள் மூலம் நடவடிக்கைகளை முன்னெடுத்தால் சரத் பொன்சேகா தரைவழியாக இராணுவ நடவடிக்கை மூலம் சாதிக்கக் கூடியவர்.

இங்கே யாரை இராணுவத் தளபதியாகச் சனாதிபதி சந்திரிகா தெரிவு செய்யப் போகிறார்? நிச்சயம் தனக்கு மிகவும் நம்பத் தகுந்தவராக இருக்கக்கூடிய ஒருவரையே தெரிவு செய்வார்.

சிரேஷ்ட நிலை அடிப்படையில் சாந்த கொட்டே கொடவுக்குத் தளபதி பதவி வழங்கினால் இராணுவத்துக்குள் சில சலசலப்புக்கள் எற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனால்தான் இந்த விடயமாக சனாதிபதி சந்திரிகா மேஜர் ஜெனரல் சரத் பொன் சேகாவுடன் பேச்சுக்களை முன் கூட்டியே நடத்தியிருக்கிறார்.

சரத் பொன்சேகாவைத் தளபதியாக நியமித்தால், அவருக்கு இருக்கும் நட்சத்திர அந்தஸ்தும் கடும் போக்கும் யாரையும் வாய் திறக்காமல் செய்துவிடும்.

இந்த நிலையில் முன்னெடுப்பேதும் இல்லாமல் தளபதி நியமனம் குறித்துச் சிரேஷ்ட படையதிகாரிகளுடன் சனாதிபதி சந்திரிகா தனித்தனியே பேசியிருப்பது இந்த விடயம் குறித்து அவர் நிறையவே பயப்படுவதைத்தான் காட்டுகிறது.

- சுபத்ரா -

# தூதுவர்களா, இராஜதந்திரிகளா, ஒற்றர்களா..?

இவ்வொரு நாடுகளும் சர்வதேச நாடுகளில் இராஜதந்திரிகளை அதாவது தூதுவர்களை நியமித்திருக்கின்றார்கள். அரசியல் பொருளாதார மற்றும் கலாசார உறவுகள் அடங்கலாக பல்வேறுபட்ட விடயங்களை தத்தமது நாடுகளிற்கிடையே பரிமாறிக்கொள்ளவும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக இருப்பதற்காகவுமே இந்த தூதுவர் முறை அன்று தோற்றுவிக்கப்பட்டது. அரசியல் விவேகம், அல்லது தோற்றுவிக்கின்றார்கள்; தோற்றுவித்துவிட்டார்கள்.

அரசியல் இராஜதந்திரம் என்பதைக் குறிக்கும் Diplomacy எனும் ஆங்கிலச்சொல் Diploum என்ற கிரேக்கச்சொல்லிலிருந்து தோன்றியதாகும். இந்த அரசியல் இராஜதந்திரமானது பண்டைக்கால கிரீஸின் நகர அரசுகளிடையே முதன்முதலாகத் தோன்றியது என அரசியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். இதனைத் தொடர்ந்து ரோமானியர்களும், ஸ்கண்டிநேவியர்களும் சிறந்த இராஜதந்திர முறையை பின்பற்றி வந்தனர். இந்த இராஜதந்திரமுறை குறித்து கௌடில்யர் தன்னுடைய அர்த்தசாஸ்திரம் என்ற நூலில் தெளிவாகவும் சிறப்பாகவும் எழுதியுள்ளார். ஐரோப்பியர்கள் பிற்பட்ட காலப்பகுதியிலேதான் இராஜதந்திர முறையை பின்பற்ற ஆரம்பித்தார்கள் எனவும் ஆனால் இந்தியா போன்ற கிழக்குப்பகுதி நாடுகளில் கி.மு. 400 ஆண்டுகளுக்கு முன்னர் இராஜதந்திர முறை பின்பற்றப்பட்டதாகவும் கௌடில்யர் கூறுகின்றார்.

இதனை நோக்குமிடத்து நல்ல நோக்கத்துடனேயே அன்று இராஜதந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் தற்கால நவீன அரசுகளில், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இராஜதந்திரத்தின் மறுபக்கமே பயன்பாட்டிற்கு விடப்பட்டிருக்கின்றது. சிறிலங்காவில் அதன் தாக்கம் 'வெளிப்படையாகவே' தெரிகின்றது. பெரும்பான்மை அரசின் பக்கம் நின்றே தற்போதைய இராஜதந்திரிகள் சிந்திக்கின்றார்கள். செயற்படுகின்றார்கள். இராஜதந்திரம் என்ற மகத்தான பணியை இராஜதந்திரிகள் (தூதுவர்) மாசுபடுத்துகின்றனர்.

பேசவில்லை.

கொழும்பிலுள்ள இந்தியத்தூதுவர் நிருபம் சென்னும், ஹென்றி வாட்டனின் கூற்றுக்கு ஏற்பவே செயற்படுகின்றார். கி.மு 400 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே இந்தியாவில் சிறந்த இராஜதந்திரம் இருந்தது என கௌடில்யர் கூறியிருந்தார். ஆனால் அதற்கு நேர்மாறாக நிருபம் சென் செயற்படுவது இராஜதந்திரம் என்ற புனிதமான பணிக்கு சேறுபூசுவதாகவே அமைகின்றது. முன்னர் இந்தியத்தூதுவராக இருந்த டிக்ஷிற், சமாதானத்தூதுவராக வந்த ரொமேஸ் பண்டாரி ஆகியோரும் இராஜதந்திரத்திற்கு சேறு பூசிவிட்டுத்தான் சென்றார்கள். இதனால் தலை குனிந்தது தமிழர்களும் அல்ல. சிறிலங்காவும் அல்ல. இந்தியாதான்.

ஒருநாட்டின் உள்நாட்டுப்போரை இனமுரண்பாட்டை தமது நாடுகளுக்கு சாதகமாகப்பயன்படுத்தும் இராஜதந்திரிகள் பயங்கரவாதிகள் என்று முன்னாள் அமெரிக்கா ஜனாதிபதி ஜிம்மி காட்டர் கூறியிருந்தார். தற்கால அரசியல் இராஜதந்திரத்தால் முடிவுகள் சாதகமாகக் கிட்டுவது கடினமாகவே உள்ளதுடன் பெரும்பாலான சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தும் வருகின்றன. இதனால் அரசியல் தந்திர முறைகளில் தேய்வு ஏற்படுவதையே காணமுடிகின்றது. அத்துடன் இக்கால கட்டத்தில் தூதுவர்கள் வெளிநாடுகளில் பணியாற்றும் பாங்கும் அவர்கள் கையாளும் முறைகளும் அவர்களுக்கும், அவர்களின் நாடுகளிற்கும் கெட்ட பெயரை சம்பாதிக்கின்றன. ஆகவே முற்காலத்தில் தூதுவர்கள் பெற்றிருந்த மதிப்பு தற்போது பெரிதும் குறைவடைந்துள்ளது. அயல்நாடுகளில் பணிபுரியும் ஒரு நாட்டின் தூதுவர் தன்னாட்டிற்காக உளவறிந்து செய்திகளை அனுப்புகின்றார். எனவே அவர் தூதுவர் அல்ல. ஒற்றர் என்ற கூற்று தற்காலத்தில் பிரபலமடைந்து வருகின்றது.



இராஜதந்திரம் என்றும் இதனை அழைக்கலாம். தூதுவர்கள் அரசியல் நிபுணர்கள் எனவும் தமிழில் கூறுவது வழமை. ஆனால் நாங்கள் சிறிலங்காவில் இருக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகளை தூதுவர் என்றுதான் பொதுவாக கூறுகின்றோம்.

அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே உட்பட பதினைந்துக்கும் மேற்பட்ட நாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகள் சிறிலங்காவில் பணியாற்றுகின்றார்கள். அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் ஆரம்பித்த நாள் முதல் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹைம், அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர், பிரதியமைச்சர் எல்லாமே சமாதான தூதுவர்களாக தற்போது கடமையாற்றுகின்றனர். ஏன் ஜப்பான் கூட யசூசி அகாஸியை சமாதான தூதுவராக நியமித்திருக்கின்றது. ஆகமொத்தம் இவர்கள் எல்லோருமே இராஜதந்திரிகள்தான்.



அரசியல் இராஜதந்திரம் (விவேகம்) என்ற தொடருக்குப் பல பொருள் விளக்கம் காணப்படுகின்றது. மாக்கியவெல்லியின் கூற்றுப்படி, அரசியலில் எல்லா மட்டங்களிலும் கொள்கைகள் உருவாக்கப்பட்டு அவைகள் செயலாக்கப்படுவதைக் குறிப்பதே அரசியல் இராஜதந்திரம் என அவர் கூறுகின்றார். சர்வதேச உறவுமுறைகளை மேலாண்மை செய்வதே அரசியல் இராஜதந்திரம் என ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி கூறுகின்றது. சுருக்கமாக கூறுவதாக இருந்தால் பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதைக் குறிப்பதாக உள்ளது. இதன் மூலம்தான் நாடுகளிடையே பேச்சுவார்த்தைகளும், தொடர்புகளும், உறவுகளும் ஏற்படுகின்றன.

இந்த அடிப்படையில் உள்நாட்டு யுத்தங்களிற்கு முடிவு கண்டு அதற்கு காரணமான இனமுரண்பாடுகளுக்கு தீர்வைக்காண இராஜதந்திரிகள் முற்படுகின்றனர். ஏற்கனவே உள்நாட்டில் இருக்கின்ற சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகள் அதற்கான ஏற்பாடுகளை, ஆலோசனைகளை செய்கின்றனர். சூடான், இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகிய நாடுகளின் உள்நாட்டுப் போருக்கும் முடிவுகாண, இந்த இராஜதந்திரிகள்தான் நடவடிக்கைகளை எடுத்தார்கள். அந்த வகையில் நோர்வே தனது இராஜதந்திரிகளை சிறிலங்காவிற்கு அனுப்பி, நீண்டகாலப் போருக்கு முடிவு காணத் தங்களால் இயன்ற பங்களிப்பை மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஆனால் சிறிலங்காவில் ஏற்கனவே இருக்கின்ற பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் தூதுவர்கள், நோர்வேயின் இராஜதந்திரிகளுக்கு (சமாதானத் தூதுவர்களுக்கு முட்டுக்கட்டை போடுகின்றார்கள்.) இஸ்ரேல் பலஸ்தீன பிரச்சினை, சூடான் போன்ற நாடுகளின் உள்நாட்டு பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்டவேளைகளில், என்னென்ன குழப்பங்களை விளைவிக்க முற்பாட்டார்களோ அதைவிட பன்மடங்கான சிக்கல் நிலைகளை இங்கு

தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு கிட்ட வேண்டும் என்ற ஒரு துளி சிந்தனைகூட சிறிலங்காவிற்கான ஜப்பான் சமாதானத்தூதுவர் யசூசி அகாஸிக்கு கிடையாது. அவர்கள் தங்கள் நாட்டில் உள்ள மேலதிக பணத்தை சிறிலங்காவிற்கு வட்டிக்கு கொடுத்து அல்லது சிறிலங்காவின் ஏதேனும் ஒரு வளத்தை எதிர்பார்த்து இலாபம் தேட முற்படுகின்றனர். சமாதானப் பேச்சு ஆரம்பித்தால் நிதியுதவி வழங்கும் நாடுகள் சிறிலங்காவிற்கான உதவியை வழங்கத் தயாராக இருப்பதாக, யசூசி அகாஸி பிரசல்சில் நடைபெற்ற சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கூறியிருக்கின்றார்.


அது மாத்திரமல்ல, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் என்றும் அங்கு செய்தியாளர்களிடம் கதை விட்டிருக்கின்றார். அந்த மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க, பிரிட்டன் இராஜதந்திரிகளும் அவ்வாறுதான் கூறியிருக்கின்றார்கள். சமாதானப்பேச்சுவார்த்தை தாமதம் அடைகின்றது என்று கவலை தெரிவித்தாலும், அந்தக்கவலையையும் அனுதாபத்தையும் சிறிலங்கா அரசின் பக்கமே சாய்த்திருக்கின்றார்கள், அந்த இராஜதந்திரிகள். 'தன்னாட்டிற்கு விசுவாசமாக சாதகமாக வெளிநாடுகளில் பொய் சொல்வதற்கென்றே அனுப்பி வைக்கப்படுகின்றவர்கள் தான் அரசியல் நிபுணர்கள் (இராஜதந்திரிகள்) என சர்வஹென்றி வாட்டன் கூறுகின்றார். அவ்வாறே யசூசி அகாஸியும் தனது நாட்டிற்கு ஏற்றவாறு பொய் சொல்லிப் பிழைப்புத் தேடுகின்றார். வடக்கு கிழக்கில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அமைக்கப்பட்டு அதனூடாகவே தமிழ் மக்களுக்கான நிதியுதவிகள் போய்ச்சேரவேண்டும் என, யசூசி அகாஸியோ அல்லது அமெரிக்க, பிரிட்டன் இராஜதந்திரிகளோ ஒரு வார்த்தையேனும் கூட அங்கு

*'தன்னாட்டிற்கு விசுவாசமாக சாதகமாக வெளிநாடுகளில் பொய் சொல்வதற்கென்றே அனுப்பி வைக்கப்படுகின்றவர்கள் தான் அரசியல் நிபுணர்கள் (இராஜதந்திரிகள்) என சர்வஹென்றி வாட்டன் கூறுகின்றார். அவ்வாறே யசூசி அகாஸியும் தனது நாட்டிற்கு ஏற்றவாறு பொய் சொல்லிப் பிழைப்புத் தேடுகின்றார்.*

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை இழுபடுட்ச் செல்வதற்கு அல்லது நீதியான தீர்வொன்றிற்கு சிறிலங்கா அரசாங்கம் இணங்கிவர மறுப்பது அல்லது காலம் தாழ்த்துவது, கொழும்பில் இருக்கக்கூடிய இராஜதந்திரிகள் சிலரின் ஆலோசனைகளை தான் என்பது கண்கூடு. அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆகவேதான் உலகநாடுகளில் எவ்வாறு இருந்தாலும் சிறிலங்காவின் இனநெருக்கடி விவகாரத்தில் இராஜதந்திரிகளின் போக்கு மாற்றம் அடையவேண்டும். வெறுமனே அரசாங்கத்திற்கும், சிறிலங்கா அரசு என்ற இறையாண்மையை கட்டிக்காத்துப் பேணுவதிலும் மட்டும் கண்ணும் கருத்துமாக இருந்தால் தீர்வு என்பதும், சமாதானப்பேச்சு என்பதும் நடைமுறை சாத்தியமற்றதாகவே போய்விடும். அத்துடன் சிறிலங்காவின் இறையாண்மை என்பதை தங்கள் நாட்டிற்கான அத்தியாவசியப் பண்டமாக கருதுகின்ற சிந்தனைப் போக்கிலும் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். தமிழ் மக்களின் இறைமை, தன்னாதிக்கம் என்ற உணர்விற்கு மதிப்பளிக்கின்ற மனப்பாங்கினை சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏற்படுத்த வேண்டும். அரசியல் விவேகம் என்பதன் பொருளும் அதுதான். பெரும்பான்மை சிறுபான்மை என்ற பதம் நீங்கி ஒவ்வொரு இனங்களும் தங்கள் பகுதிகளில் பெரும்பான்மை என்பதை அன்றைய கிரேக்க இராஜதந்திரம் நிரூபித்தது என்று மாக்கியவல்லி கூறியிருக்கின்றார். இத்தாலிய ஐக்கியத்திற்கும் அதுவே வழிவகுத்தது.

– கொழும்பிலிருந்து **ஊரோடி**

# பாகிஸ்தான் மீண்டும் ஏவுகணைச் சோதனை!



ஏவுகணை ஏவப்படுவதற்கு முன்பாக, அதற்கு முன்னால் நின்று காட்சியளிக்கின்றார்கள் பாகிஸ்தான் அதிபர் மற்றும் இராணுவத் தளபதிகள், அணு விஞ்ஞானிகள்

பாகிஸ்தான் மேலும் ஒரு நடுத்தர ரக ஏவுகணைச் சோதனையை 04.06.04 அன்று நடத்தியது. அதிபர் முஷரப் இதை நேரில் பார்வையிட்டார். எந்த இடத்தில் இந்த சோதனை நடைபெற்றது என்பதைப் பாகிஸ்தான் வெளிப்படையாக அறிவிக்கவில்லை. கடந்த ஒரு வாரத்தில் நடைபெறும் 2வது ஏவுகணைச் சோதனையாகும் இது.

இந்த ஏவுகணை 1,500 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று தாக்கும் திறன் கொண்டதுடன் அணு ஆயுதங்களையும் தாங்கிச் செல்லக்கூடியதாகும். பாகிஸ்தான் அதிபர் முஷரப் இந்த அணு ஆயுத சோதனையைப் பார்வையிட்டார். சோதனையின் வெற்றிக்குக் காரணமான விஞ்ஞானிகளை அவர் பாராட்டினார். இந்தியா – பாகிஸ்தான் இடையே வருகிற 19ம், 20ம் திகதிகளில் அணு ஆயுதப் கட்டுப்பாடு தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற இருக்கும் நிலையில், 2வது அணு ஆயுத ஏவுகணைச் சோதனையைப் பாகிஸ்தான் நடத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முஷரப், 'பாகிஸ்தானின் அணு ஆயுத மற்றும் ஏவுகணைச் சோதனைத் திட்டங்கள் தொடர்ந்து நீடிக்கும். இதில் விட்டுக் கொடுக்கவோ பின் வாங்கவோ மாட்டோம்' என்று தெரிவித்தார்.

## அமெரிக்காவில் கறுப்பு இனத்தவர் மீது பாரபட்சம் காட்டிய இந்தியர் மீது வழக்கு


அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர் ஒருவர் அங்குள்ள கறுப்பு இனத்தவர்கள் மீது பாரபட்சம் காட்டியதையடுத்து அவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் பெர்ரி எனும் இடத்தில் தங்கிட வசதியுடன் கூடிய உணவு விடுதி ஒன்றை நடாத்தி வருகின்றார் ராஜ்படேல் என்ற இந்தியர். இவர் இங்கு வரும் வெள்ளை இனத்தவர்களை அதிகமாகக் கவனிப்பதுடன், கறுப்பு இனத்தவர்கள் வந்தால் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மோசமான, சுத்தம் செய்யப்படாத அறைகளை வழங்கியுள்ளதுடன் அவர்களை அவமதிக்கும் விதத்திலும் நடந்துள்ளார். அத்துடன் அங்கு அமைந்துள்ள நீச்சல் குளத்திலும் கறுப்பு இனத்தவர்கள் நீச்சலாடுவதற்கு அனுமதி மறுத்துள்ளார். அதனையும் மீறி அவ்வாறு யாரும் நீச்சலாடினால், இந்நீச்சல் குளத்தில் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் இரசாயன பதார்த்தங்களை ஊற்றி அவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார். இந்நிலையில் இவர் மீது கறுப்பு இனத்தவர்கள் வழக்குத் தொடர்ந்துள்ளனர். இது குறித்துக் கருத்து தெரிவித்த அவ்விந்தியரின் வழக்கறிஞர், பாரபட்சம் காட்டுவதாகத் தொடரப்பட்ட வழக்கு பொய்யென்றும் நீதிமன்றத்தில் தாம் இவ்வழக்கை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## சக மாணவியின் கழுத்தை அறுத்துக் கொலை!

### ஜப்பான் மாணவியின் வெறித்தனம்

(05.06.04)

ஜப்பானில் 6வது வகுப்பு படிக்கும் 12 வயதான மாணவி ஒருத்தி அவளுடன் படிக்கும் சக மாணவியால் கழுத்து அறுத்துக் கொல்லப்பட்ட கொடூரம் கடந்த 1ம் திகதி நிகழ்ந்துள்ளது. கொல்லப்பட்ட மாணவியின் பெயர் சடோமி மிட்டாராய். ரோக்கியோவிற்கு மேற்கே உள்ள சசேபோ என்ற நகரில் உள்ள பள்ளிக்கூடத்தில் அவள் படித்தாள். மதிய உணவு இடைவேளை நேரத்தில் அவளது வகுப்புத் தோழி அவளை அழைத்துக் கொண்டு 3வது மாடியில் உள்ள படிப்பு அறைக்குச் சென்றாள். அங்கு கத்தியால் அவள் கழுத்தை அறுத்துக் கொன்றாள். பிறகு இரத்தக் கறை படிந்த உடையுடன் அந்தத் தோழி வகுப்புக்குத் திரும்பினாள். இந்தக் கொலைக்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை. பொலிசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.



கொல்லப்பட்ட மாணவியின் தந்தை பத்திரிகையாளர்களுக்குக் கண்ணீரோடு பதிலளித்தபோது

## அவுஸ்திரேலியப் பெண் உலக அழகி



ஈகுவடார் நாட்டில், குயிடோ நகரத்தில் நடைபெற்ற 2004ம் ஆண்டுக்கான உலக அழகி (மிஸ் யுனிவர்ஸ்) போட்டியில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 20 வயது ஜெனிபர் ஹாக்கின்ஸ் உலக அழகியாகத் தேர்வு பெற்றார். 80 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் இந்த போட்டியில் கலந்து கொண்டனர். 8000க்கும் மேற்பட்ட பார்வையாளர்களின் முன்னிலையில் நடைபெற்ற உலக அழகிக்கான போட்டியில், 80 அழகிகளில் 10 பேர் அரை இறுதிப் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் அவுஸ்திரேலியா, அமெரிக்கா, போர்டோரிகோ, பராகுவே, டிரினிடாட் ஆகிய 5 நாட்டு அழகிகள் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

நடுவர்களின் கேள்விக்குப் புத்திசாலித்தனமாகப் பதில் அளித்த அவுஸ்திரேலிய அழகி ஜெனிபர் ஹாக்கின்ஸ் உலக அழகி பட்டத்தைத் தட்டிச் சென்றார். அமெரிக்க அழகி ஷாண்டி பின்னசிக்கு 2வது இடம் கிடைத்தது.

உலகி அழகி ஜெனிபருக்கு வைரக் கிரீடத்தைக் கடந்த ஆண்டின் உலக அழகி டொமினிகன் குடியரசைச் சேர்ந்த அமீலியா வேகா அணிவித்தார். ஜெனிபர் மாடல் அழகியாகவும், நடன அமைப்பாளராகவும் அவுஸ்திரேலியாவில் பணிபுரிந்து வருகின்றார்.

இதேவேளை, உலக அழகி போட்டியின் இறுதிச் சுற்று தொடங்குவதற்குச் சில மணி நேரத்துக்கு முன்பு போட்டியின் 9 நடுவர்களில் ஒருவரான குவாமி ஜாக்சன் என்பவர் நீக்கப்பட்டார். உலக அழகிகள் தங்கி இருந்த விடுதிக்குச் சென்று அழகிகளுடன் பேசிக் கொண்டு இருந்ததால் அவர் நடுவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.



## திருப்பதிக்கு காணிக்கை செலுத்திய தலைமுடி 5 கோடியே 42 இலட்சம் ரூபாவுக்கு ஏலம் போனது!

திருப்பதி ஏழுமலைக் கோவிலுக்குப் பக்தர்கள் காணிக்கை செலுத்திய (மொட்டை போட்டு) முடியை ஏலம் விட்டதன் மூலம் 5 கோடியே 42 இலட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது. திருப்பதி வெங்கடாசலபதி கோவிலுக்கு நாள் தோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்கிறார்கள். நாடெங்கிலும் இருந்து வரும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தலையை மொட்டை அடித்து, முடி காணிக்கை செலுத்துவது வழக்கம். இவ்வாறு பக்தர்கள் மொட்டை போடும் தலைமுடி 2 மாதங்களுக்கு ஒரு முறை ஆலய நிர்வாகத்தினரால் ஏலம் விடப்படுகிறது.

அதன்படி, கோவிலில் சேர்ந்திருந்த பக்தர்களின் காணிக்கை முடி ஏலம் விடப்பட்டது. மேலை நாடுகளில் மனித முடிக்கு பெரும் வரவேற்பு இருப்பதால், தலைமுடி வியாபாரத்தில் சிறந்த நான்கு நிறுவனங்கள் போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். மொத்தம் 5 டன் தலைமுடி ஏலம் விட்டதன் மூலம் 5 கோடியே 42 இலட்சம் ரூபா ஆலய நிர்வாகத்தினருக்குக் கிடைத்தது. இந்த தகவலைத் திருப்பதி திருமலை ஆலய நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



# இலண்டன் விமானக் கட்டுப்பாட்டு கணினிகள் தொழிற்பட மறுப்பு ! விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது

(05.06.04)


பிரித்தானியாவின் தலைநகர் இலண்டன் ஹீத்ரோவில் உள்ள பிரதான விமானக் கட்டுப்பாட்டு மையத்தில் கடந்த 3ம் திகதி வியாழனன்று கணினிகள் தொழிற்பட மறுத்தமையால், விமானப் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டது. கணினிகள் காலை 6.00 மணிக்குப் பழுதாகின. இதனால் பிரித்தானிய விமான நிலையங்களில் இருந்து புறப்பட வேண்டிய விமானங்கள் புறப்படவில்லை. 2 மணி நேரத்துக்குப் பின்னர்தான் கணினிகள் சீர் செய்யப்பட்டன. இந்த 2 மணி நேரத் தாமதத்தால் பிரித்தானியவின் ஏனைய விமான நிலையங்களில் இருந்தும் விமானங்கள் தாமதமாகப் புறப்பட்டன.

ஹீத்ரோ விமான நிலையத்தில் அனைத்து விமானங்களும் இரத்து செய்யப்பட்டன. பழுது சரி செய்யப்பட்டவுடன் விமானங்கள் 2 மணி நேரம் தாமதமாகப் புறப்பட்டன. ஸ்டான்ஸ்டெட் விமான நிலையத்தில் 3 மணி நேரம் தாமதமாகவும், மான்செஸ்டரில் ஒரு மணி நேரம் தாமதமாகவும் விமானங்கள் புறப்பட்டன.

## வைகோ அமெரிக்கா சென்றார்

(05.06.04)

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அமெரிக்கா சென்றுள்ளார். `பொடா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க. பொதுச்



*கலைஞர் கருணாநிதிக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறும் வைகோ*

செயலாளர் வைகோ பின்னர் பிணையில் வெளியே வந்தார். வைகோவின் மகள் அமெரிக்காவில் வசிக்கிறார். சென்னையில் உள்ள தனது பேர்த்தியை மகளிடம் ஒப்படைப்பதற்காக அமெரிக்கா செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வைகோ மனுத் தாக்கல் செய்திருந்தார்.


அவரது மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், வைகோ அமெரிக்கா சென்று வர 3 வார காலத் தற்காலிக அனுமதி வழங்கி, இதற்காகப் புதிய (விசேட) கடவுச் சீட்டை (டிப்ளமேட்டிக்) அவருக்குத் தர வேண்டும் என்றும் உத்தரவிட்டது. வருகிற 20ம் திகதிக்குள் அவர் இந்தியா திரும்ப வேண்டும் என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டு இருந்தது.

இதைத் தொடர்ந்து வைகோ தனது பேர்த்தியுடன் கடந்த 3ம் திகதி அமெரிக்காவில் உள்ள சிக்காகோ நகருக்குச் சென்றார்.

அமெரிக்கா புறப்படுவதற்கு முன்பாக சென்னைத் தீவுத்திடலில் நடந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியின் 81வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டார். வைகோவை வழியனுப்புவதற்காக ம.தி.மு.க. நிர்வாகிகளும், ஏராளமான தொண்டர்களும் விமான நிலையத்துக்கு வந்து இருந்தனர். அவர்கள் மாலைகள் அணிவித்து வைகோவை உற்சாகத்துடன் வழியனுப்பி வைத்தனர்.

கடந்த தடவை வைகோ அமெரிக்காவில் நின்றிருந்தபோது அவரைக் கைது செய்யப்போவதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. இதனையடுத்து தனது பயணத்தை இடைநிறுத்திவிட்டு அமெரிக்காவில் இருந்து வைகோ திரும்பியதும், சென்னை விமான நிலையத்தில் வைத்து அவரைப் பொடாச் சட்டத்தின் கீழ் தமிழக் காவற்துறையினர் கைது செய்தது தெரிந்ததே.

## கிளின்டன் எழுதிய 'என் வாழ்க்கை' நூலாக வெளிவருகிறது




அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி கிளின்டன் `என் வாழ்க்கை' (My Life) என்ற பெயரில் தன் சனாதிபதி வாழ்க்கையைப் புத்தகமாக எழுதி இருக்கிறார். அடுத்தமாதம் 2ம் திகதி இந்தப் புத்தகம் விற்பனைக்கு வருகிறது. இந்தப் புத்தகம் 900 பக்கங்கள் கொண்டது. புத்தகத்தை எழுதியதற்காகக் கிளின்டனுக்குப் பத்து மில்லியன் டொலர்கள் முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது. முதலாவதாக 1.5 மில்லியன் பிரதிகள் அச்சிடப்படுகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கிளின்டன் இந்நூலை எழுதி வருகின்றார். பெரும்பாலான சனாதிபதிகளின் வரலாறு புத்தகங்கள் சுவாரசியம் இல்லாமல் இருக்கும். ஆனால் என் புத்தகம் விறுவிறுப்பாக இருக்கும் என்று கிளின்டன் கூறி இருக்கிறார். இதில் வெள்ளை மாளிகைப் பணிப்பெண் மோனிகா லெவின்ஸ்கியுடன் தனக்குள்ள தொடர்பு பற்றியும் அவர் எழுதி இருப்பார் என்று நம்பப்படுகிறது.

அண்மையில் கிளின்டனின் துணைவியார் கிளாரி கிளின்டன் எழுதி வெளியிட்ட வாழும் வரலாறு (Living History) எனும் நூல் பெரும் வரவேற்பு பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இந்திய கடற் பகுதியில் மீன்பிடித்த 15 சிங்கள மீனவர்கள் கைது


இந்திய கடற்பகுதியில் மீன்பிடித்த 15 சிங்கள மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். 3 விசைப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. நாகப்பட்டினம் கடல் பகுதியில் இருந்து 53 கிலோ மீட்டர் தூரத்தில் இந்திய கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, அந்த படகுகளைக் கடலோர காவல்படையினர் சுற்றி வளைத்து கைது செய்தனர்.

15 மீனவர்களையும் கடலோரக் காவற்படையினர் மண்டபம் பொலிசாரிடம் ஒப்படைத்தனர். விசாரணையில் அவர்கள் இலங்கை கோட்டைகோடு, மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது. இந்திய எல்லைக்குள் வந்தது குறித்து அவர்கள் கூறியபோது, 'காற்று அதிகம் வீசியதால் திசை தெரியாமல் இந்திய எல்லைக்குள் வந்து விட்டோம்' என்றனர்.

## நேபாள தலைமை அமைச்சராக ஷெர் பகதூர்


(06.05.04)

நேபாள நாட்டின் புதிய தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட ஷெர் பகதூர் தேவா அரண்மனையில் நடந்த விழாவில், பதவி ஏற்றுக் கொண்டார். மன்னர் ஞானேந்திரா அவருக்குப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். "அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் பொதுத்தேர்தல் நடக்கும் வரை அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காகப் பல்வேறு கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவேன்" என்று தேவா கூறினார். "மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நேர்மையாக முயற்சிகள் மேற் கொள்ளப்படும்" என்றும் அவர் கூறினார்.



## டயானாவின் தாயார் மரணம்

இங்கிலாந்து இளவரசர் சார்லஸ்சின் மறைந்த முன்னாள் மனைவி டயானாவின் தாயார் பிரான்சஸ் ஷாந்த் கியாட். கடந்த 3ம் திகதி தனது 68வது வயதில் மரணமானார். நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மரணமாகியுள்ளார்.



## சென்னையில் பிரெஞ்சுத் திரைப்பட விழா

(05.06.04)

சென்னையில் பிரான்ஸ் நாட்டு திரைப்பட விழா நான்கு நாட்கள் நடைபெறுகிறது. இந்தியாவில் உள்ள பிராஞ்சு நாட்டுத் தூதரகத்தின் உதவியுடன் சென்னை அலியன் பிரன்செய்ஸ் சத்யம் தியேட்டருடன் இணைந்து சென்னையில் நான்கு நாட்கள் பிரெஞ்சு திரைப்பட விழாவை நடத்துகிறது. 12,13,19, 20 திகதிகளில் இவ்விழா நடைபெறுகின்றது. எதிர்வரும் 12ம் திகதி தொடங்கும் விழாவில், முதலில் இயக்குநர் பிலிப் டுரூகோ இயக்கிய 'ஆன் கார்டு' எனப்படும் படமும், 13ம் திகதி மைக்கல் ஆக் ஓசிலாட் இயக்கிய 'கிரிகோ அண்டு த விச்' என்ற காட்டூன் படமும் காண்பிக்கப்படுகின்றன. அதேபோல் இயக்குநர் செடரிக் லபிச்ஸ் இயக்கிய 'ஏ பமலி அபயர்' என்ற நகைச்சுவைப் படம் 19ம் திகதியும், ஜீயன் ரினாயர் இயக்கிய 'பிரென்சு கேன்கேன்' என்ற படம் 20ம் திகதியும் திரையிடப்படுகின்றன.

# RESTAURANT HARIHARAN

## குறைந்த விலையில் சிறந்த உணவுகள்

25 அல்லது 50 சாப்பாடுகள் உடனுக்குடன் தயார் செய்து கொடுக்கப்படும்

**இறைச்சிச் சாப்பாடு**


- பிரியாணிச் சோறு
- ஆட்டிறைச்சிக் கறி
- கோழிக்கறி
- கத்தரிக்காய்க் கறி
- பருப்பு
- வெங்காயச் சம்பல்
- கோழிப் பொரியல்
- நண்டு வறை
- Salade ஜெலி பலவகை கலர்கள்

**சைவச் சாப்பாடு**

1. Basumathi அரிசியில் சோறு
3. கத்தரிக்காய் கறி
4. கரணைக்கிழங்கு பிரட்டல் கறி
5. பருப்பு பால் கறி
6. கோவா அல்லது வெங்காயப்பூ சுண்டல்
7. வெங்காயச் சம்பல்
8. அச்சாறு
9. வடை
10. பாயாசம்
11. அப்பளம்
12. மிளகாய்ப் பொரியல்
13. வாழைக்காய் பொரியல்

**சிற்றுண்டிகள்**

| | |
|---|---|
| வடை | 00€50 |
| Rol | 00€60 |
| Samusa | 00€60 |
| Samusa மரக்கறி | 00€60 |
| கடலைவடை | 00€50 |
| பகோடா | 4€70 |
| மிஸ்சர் | 5€20 |
| கேசரி | 00€50 |



**அன்பளிப்பு**

- * 200 சாப்பாடுக்கு 20 சாப்பாடு இலவசம்
- * 300 சாப்பாடுக்கு 30 சாப்பாடு இலவசம்

**அன்பளிப்பு**

* 500 சாப்பாடு எடுத்தால் T.T.N தொலைக்காட்சி பார்ப்பதற்கான ஒரு அட்டை அன்பளிப்பு

* பிறந்தநாள் கொண்டாட்டமாக இருந்தால் - பிறந்தநாள் நடைபெறுபவரின் பிறந்தநாள் வாழ்த்து T.T.N இல் இலவசமாக எம் மூலம் ஒளிபரப்பப்படும்.

- 100 க்கு மேல் சாப்பாடு எடுத்தால் இல்லம் தேடி கொடுக்கப்படும்
- எம்மிடம் சாப்பாடு எடுத்தால் சாப்பாடு பரிமாறும் சில்வர் தட்டுக்களை நாங்கள் தருவோம். (500 சாப்பாட்டுக்கு 500 தட்டு)
- கறிகள் போடும் சில்வர் பாத்திரங்கள் எம்மிடம் வாடகைக்கு உண்டு

**உரிமையாளரின் நேரடி கவனிப்பில் இன்றே நாடுங்கள்**

## ஹரிகரன்


**20, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle.**
**Telephone: 01 42 09 06 30 / Portable: 06 67 14 46 39 - Mahendran**



# அன்புச்சோலையின் புதிய தங்ககம் தேசியத் தலைவரால் திறந்துவைக்கப்பட்டது



கிளிநொச்சியிலுள்ள அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தின் புதிய தங்ககத்தைத் தமிழீழத் தேசியத் தலைவர் கடந்த 4ம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். இதன் ஆரம்ப நிகழ்வாகத் தமிழீழத் தேசியக்



கொடியினைத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பொதுச்சுடரினைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைக்க, அதனைத் தொடர்ந்து புதிதாக உருவாக்கப்பட்ட பெண்களுக்கான தங்ககத்தைத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் திறந்து வைத்தார்.

மாவீரர்கள், போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தனது துணைவியாருடன் கலந்து கொண்டு மூதாளர்களுடன் கலந்துரையாடியதோடு, அவர்களுக்கு அன்புப் பரிசில்களையும் வழங்கினார். இந்நிகழ்வில் கடற்புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் திரு. வே.பாலகுமாரன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் உட்படப் பல பொறுப்பாளர்கள் போராளிகள் கலந்து கொண்டனர். தாயக மீட்புப் போரிலே தமது இன்னுயிர்களை ஈகங்செய்த மாவீரர்களின் பெற்றோர்கள் அன்புச்சோலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கோபுவுக்குத் தேசியத் தலைவர் விருது வழங்கிக் கௌரவிப்பு



மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் என்கிற கோபுவுக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் விருது வழங்கிக் கௌரவித்துள்ளார். வன்னியில் உள்ள முக்கிய இடமொன்றில் கடந்த 4ம் திகதி வெள்ளிக்கிழமை இந்த விருது வழங்கும் வைபவம் இடம்பெற்றது. இது குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறை செய்திக்குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது. இந்தச் செய்திக் குறிப்பில் மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரத்தினம் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஊடகத்துறையில், குறிப்பாகப் பத்திரிகையுலகில் பணியாற்றித் தமிழ்த்தேசியத்திற்கும், தமிழ் இனத்தின் எழுச்சிக்கும் மகத்தான சேவையாற்றி உள்ளார்.

எழுத்துத்துறையில் இவரின் எழுத்து நடை, கருத்துக்களின் முன்வைப்பு, முன்வைத்த கருத்துக்களுக்கு ஏற்ற தலைப்பால் மிகவும் வித்தியாசமானதாகவும் கூர்மைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இருக்கும் அதே நேரத்தில் வாசகர்களின் மனங்களைக் கவ்விப்பிடித்து அவர்களை அதன் பால் சிந்திகத்தூண்டும் ஈர்ப்பினைக் கொண்டதாகவும் இருக்கும். இதன் மூலம் எல்லா மக்களையும் போராட்டத்தின்பால் சிந்திக்கத்தூண்டிய சேவையைத் திறம்பட ஆற்றியுள்ளார். இவரின் இச்சேவையைப் பாராட்டித் தமிழீழத் தேசியத்தலைவர் புலிச்சின்னம் பதித்த விருதை வழங்கிக் கௌரவித்துள்ளார்.

'இத்தகைய ஒரு சிறந்த பத்திரிகையாளன் தொடர்ந்தும் தனது சேவையை ஆற்றிப் பத்திரிகை உலகிற்கும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வரலாற்றுக்கும் பெரும் பணியாற்ற வேண்டும். அத்துடன் வளர்ந்து வரும் இளைய ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். அவரின் நீண்டகாலச் சேவையைப் பாராட்டுவதோடு தொடர்ந்தும் சிறப்பாகப் பணியாற்ற எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நாட்டுப்பற்றாளர் நடேசனின் இறுதி நிகழ்வில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்பு

## - பூதவுடல் பிறந்த மண்ணில் தீயுடன் சங்கமம் -



30.05.2004 அன்று மட்டக்களப்பில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட மூத்த தமிழ் ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் பூதவுடல் கடந்த 3ம் திகதி வியாழனன்று அவரது சொந்த இடமான நெல்லியடி ஆலங்கட்டை மயானத்தில் அக்கினியுடன் சங்கமமானது. இந்நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள், போராளிகள் கலந்துகொண்டு இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. நடேசனின் துணைவியார் கௌரி நடேசனின் பொதுச்சுடரேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில், தமிழ் ஊடகவியலாளர் சங்கத் தலைவர் ஆர்.துரைரத்தினம் தலைமையில் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

முன்னதாக, நடேசனின் புகலுடலிற்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் வைத்து வவுனியா மக்களால் இறுதி வணக்கம் செலுத்தப்பட்டது. இதன் போது பெருமளவிலான மக்களும், துறைசார் வல்லுநர்களும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஊடகவியலாளர்களும், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவக பணியகத்தின் அன்பரசன் மற்றும் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேலு மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை உட்படப் பல போராளிகளும் கலந்து கொண்டனர்.

பின்னர், வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராமமான மூன்று முறிப்புப் பகுதியில் வைத்து நடேசனின் புகலுடல் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேலு, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரால் கையேற்கப்பட்டுக் கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்டது.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்புச் செயலகத்தில் வைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் பூதவுடலுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்த புதன்கிழமை காலை அஞ்சலி செலுத்தினார். இதனையடுத்து, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பி.சந்திரசேகரன் அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வுகளுக்குப் பின்னர் ஊடக இணைப்புச் செயலகத்திலிருந்து நடேசனின் பூதவுடல் கிளிநொச்சி கலாசார மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. கலாசார மண்டபத்தில் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. திருமதி நடேசன், விடுதலைப் புலிகளின் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சுதா மாஸ்ரர் ஆகியோர் ஈகச்சுடரினை ஏற்றினார்கள். பொதுச்சுடரினைக் கிளிநொச்சி அரசாங்க அதிபர் எஸ்.இராஜநாயகம் ஏற்றினார். விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பாலகுமார், ஈழநாதம் ஆசிரியர் இ.ஜெயராஜா, ஊடகவியலாளர் எஸ்.துரைரட்ணம் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினார்கள்.



இதனையடுத்து, வாகனப் பவனியில் எடுத்துச் செல்லப்பட்ட பூதவுடலை முகமாலை சோதனைச்சாவடியில் வைத்துத் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் பொறுப்பேற்றுப் படையினரின் சோதனைச் சாவடி வரை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். படையினரின் சோதனைச்சாவடியில் வைத்து கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், பத்மினி சிதம்பரநாதன், என்.ரவிராஜ் ஆகியோர் பொறுப்பேற்று அஞ்சலி செலுத்தினர். கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய இடங்களிலும் அஞ்சலிக்கூட்டங்கள் நடைபெற்று வடமராட்சி நெல்லியடியிலுள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இறுதிக்கிரியைகளை ஒட்டி நெல்லியடிப் பிரதேசத்தில் சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன. கறுப்புக்கொடிகளும் சிவப்பு, மஞ்சள் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன.

# இது ஒட்டுமொத்தத் தமிழினத்திற்கும் இழைக்கப்பட்ட கோரமான அநீதி

## - விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே.பாலகுமார்



'மூத்த பத்திரிகையாளரும், நாட்டுப்பற்றாளருமான நடேசன் படுகொலை செய்யப்பட்டமை அரசு தமிழ் மக்களுக்குச் செய்த துரோகமாகும். இந்த துரோகச் செயல் மீண்டும் இலங்கையில் ஒரு புதிய வரலாற்றைச் சொல்லப் போகும் அறைகூவலாக அமைந்து விடப்போகிறது. எனவே, அரசு இதைப் புரிந்துகொண்டு சரியான, தெளிவான நிலைப்பாட்டை எடுப்பது அவசியம்' இவ்வாறு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்புச் செயலகத்தில் நடைபெற்ற மூத்த பத்திரிகையாளர் நடேசனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் உரையாற்றிய விடுதலைப்புலிகளின் மூத்த பிரமுகர் வே.பாலகுமார் தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் தெரிவித்ததாவது: 'கடந்த கால வரலாற்றிலிருந்து அரசும், சிங்கள மக்களும் சரியான பாடங்களைக் கற்றுக் கொள்ளவில்லை. பேச்சு வார்த்தைகளும், யுத்த நிறுத்தமும் வெறும் கண்துடைப்புகளாகவே அரசு நினைக்கிறது. எத்தனையோ சிங்களத் தலைவர்கள், இராணுவத் தலைவர்கள், அரசியல் கட்சியின் தலைவர்கள் வந்து போய்க் கொண்டே இருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேருக்கும் தமிழினத்தின் உரிமைக்குரலை ஒலிப்பது புலிகளின் தலைவர் பிரபாகரனே. அவர் ஒருவரே அரசில் எத்தனை மாற்றங்கள் வந்தாலும் எதற்கும் அஞ்சாது, எதற்காகவும் தன் நிலையை மாற்றிக் கொள்ளாது, துணிந்து தமிழின விடுதலைக்காகக் குரல் கொடுப்பவர்.

பிரபாகரனைப் பற்றி யாராவது தவறாக மதிப்பீடு செய்தால், அதற்கான பின்விளைவுகள் மிகவும் மோசமானதாக இருக்கும் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். நாம் போரை விரும்பவில்லை. எம்மீது திணிக்கப்பட்ட போரில் நாம் வலுவானவர்கள் என்பதைச் சிங்களத் தலைமைக்கும், மக்களுக்கும் புரிய வைத்துள்ளோம். இப்போது நாம் சமாதானத்திற்காக எமது அடிப்படை உரிமைக்காகக் குரல் கொடுத்துக் காத்திருக்கின்றோம். இந்த வேளையில், தொடர்ச்சியாக இந்த அத்துமீறல்கள், கொலைகள், கொலை மிரட்டல்கள் மூலம் அரசு எமக்குத் தரும் செய்தி என்ன? என்ன அழுத்தத்தைச் சிங்கள அரசு தர எண்ணுகிறது. தமிழினத்தின் அறிவுப் பலத்தை அழிக்கும் எண்ணமா? அல்லது இறங்கி வந்து தருவதை ஏற்றுக் கொள் என்ற அழுத்தமா?

இலங்கையின் வரைபடத்தில் ஈழத்தின் எல்லைகள் எவையென்று அரசுக்கு நன்றாகவே தெரியும். வரைபடத்தில் பிரிவுகளை ஏற்படுத்தி, இல்லாத பிரிவினைவாதத்தையும், பிரதேசவாதத்தையும் இருப்பதாக நியாயப்படுத்த அவசியமற்ற இரகசிய வன்முறைகளில் அரசு இறங்கியுள்ளதை நாம் பார்க்கின்றோம்.

இது குறித்து அரசு தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். ஊடகத்துறையில் ஏற்பட்டுள்ள இந்த இழப்பு, தமிழினத்திற்கான ஒரு மிகப்பெரிய துரோகம். அரசின் இந்தத் துரோகச் செயல் மீண்டும் இலங்கையில் ஒரு புதிய வரலாற்றைச் சொல்லப் போகும் அறைகூவலாக அமைந்து விடப்போகிறது. சிங்கள அரசு இதைப் புரிந்து கொண்டு சரியான தெளிவான நிலைப்பாட்டை எடுப்பது மிக மிக முக்கியமானது.

இந்த நிலை தொடருமானால், நாம் மீண்டும் போருக்குப் புறப்பட்டு எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்த இறுதி எச்சரிக்கையை அரசு புரிந்து கொண்டு செயற்படும் என்று நாம் நம்புகின்றோம். இங்கே உயிரிழந்து தூங்கும் அமரர் ஜி.நடேசனின் இழப்பை ஒரு தனிமனித இழப்பென்று நாம் கருதவில்லை.

இது ஒட்டுமொத்தத் தமிழினத்திற்கும் இழைக்கப்பட்ட ஒரு கோரமான அநீதி. அநியாயம். துரோகம். இந்த சோகநிலையில் இம்மரணத்தை நாம் அரசியலாக்க விரும்பவில்லை. ஆனாலும், அரசுக்கு இதைத் தெளிவாகச் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

### படையினர்–விடுதலைப் புலிகள் சந்திப்பைச் செய்தியாளர் பகிஷ்கரிப்பு

சிறீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடந்த புதன்கிழமை முற்பகல் வவுணதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில், செய்தி சேகரிக்கச் செல்லாது ஊடகவியலாளர்கள் பகிஷ்கரித்துள்ளனர். நடேசனின் படுகொலையைக் கண்டித்து இந்தச் சந்திப்பைத் தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் முற்றாகப் பகிஷ்கரித்தனர். இந்தச் சந்திப்புத் தொடர்பான செய்தி, ஊடகவியலாளர்களுக்கு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத் தகவல் பிரிவினால் பின்னர் வழங்கப்பட்டது.

# இது படைத் தரப்பினுடைய முழு ஆதரவோடுதான் நடந்தது

**– சு.ப.தமிழ்ச்செல்வன்**

தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையும் மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்திருக்கின்றன. மிகவும் மூத்த பத்திரிகையாளரும் தமிழ்த் தேசியத்திற்கு உயிர் கொடுத்துத் தமிழ் தேசியத்தை வலியுறுத்தி, உறுதியோடும், துணிச்சலோடும் நின்று குரல் கொடுத்த ஒரு சிறந்த பத்திரிகையாளனை இன்று எங்களுடைய தேசம் இழந்து நிற்கின்றது. இதனால் எங்களுடைய தலைமைப் பீடமும் பெரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்திருக்கின்றது. எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களையும் நாங்கள் தெரிவித்திருக்கின்றோம்.



உண்மையில் இந்த அடாவடித்தனமான, மோசமான செயல் மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது. ஊடகவியலாளர் நடேசன் கொல்லப்பட்டது என்பது திட்டமிட்ட ரீதியில் இலங்கை அரசாங்கத்தினுடையதும் அதன் படைத்தரப்பினருடையதுமான ஆதரவோடுதான் நடைபெற்றிருக்கின்றது. தமிழ்த் தேசியத்தின் உயர்ச்சியை - வளர்ச்சியை - எழுச்சியை நசுக்கும் நோக்கோடு இன்று உறுதியடைந்திருக்கின்ற தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்துகின்ற நோக்கோடு மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலமாக நடைபெற்ற நிகழ்வுகள் அதன் காரணமாகவே நடைபெற்றன. அதன் தொடர்ச்சியாக அந்தப் படைத்தரப்பின் முழு ஆதரவோடு இந்தக் கொலை நடந்திருக்கின்றது. நாங்கள் இது சம்பந்தமாக நோர்வேத் தரப்பிற்கும், கண்காணிப்புக் குழுவிற்கும் மிகக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றோம். இது நடைபெற்றது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் மட்டுமல்ல, இராணுவத்தின் உயர் கண்காணிப்புக்கு உட்பட்ட அவர்களுடைய செறிவாக முகாம்கள் அமைந்த பலப்படுத்தப்பட்ட பிரதேசங்களில்தான் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆகவே இது நிச்சயமாக படைத்தரப்பினுடைய ஆதரவோடுதான் நடைபெற்றிருக்கின்றது. அண்மைய நாட்களாக இராணுவ புலனாய்வு அமைப்பினரால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை வைத்துப் பார்க்கின்றபோது இப்படியான கொலைகள் தொடருமென்கிற செய்தியை அந்தத் துண்டுப் பிரசுரங்கள் ஊடாக மக்கள் மத்தியில் விநியோகித்திருந்தார்கள்.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கின்ற போது இதனை எங்களால் முழுமையாக ஊகிக்க கூடியதாக இருக்கின்றது. இது படைத்தரப்பினுடைய முழு ஆதரவோடுதான் நடந்திருக்கின்றது. குறிப்பாகத் தேசத் துரோகி கருணாவோடும், அவரோடு வெளியேறிய சில துரோகிகளையும் படைத்தரப்பு பாதுகாத்து வைத்திருக்கின்றது. அதுபோல ஏனைய ஆயுதக் குழுக்களையும் பாதுகாத்து அங்கே வைத்திருக்கின்றது. அவர்கள் ஆயுதங்களோடு அண்மைக் காலத்தில் மட்டக்களப்பு நகர்ப்பிரதேசங்களில் நடமாடுவதாக நாங்கள் அறிந்து, அது சம்பந்தமாகப் படைத்தரப்புக்கும் கண்காணிப்புக் குழுவிற்கும் அறிவுறுத்தியிருக்கின்றோம். இவ்வளவு எச்சரிக்கைகளையும் இவ்வளவு அறிவுறுத்தல்களையும் கொடுத்த நிலையிலும் அங்கே முழு அளவில் பாதுகாப்பு நிலையை ஏற்படுத்தாதது எமக்கு வருத்தம் தருகின்றது. இது வேதனைக்குரியதும் கூட. திட்டமிட்ட ரீதியில் தமிழ்த் தேசியத்தினுடைய வளர்ச்சியைச் சீர்குலைக்கும் நோக்கில் செயற்படுத்தப்படும் கொலைகளாகத்தான் இவற்றை நாங்கள் பார்க்கின்றோம். தொடர்ந்து இடம்பெறும் இவ்வன்முறைகளை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இதனை ஒரு போதும் எமது மக்களும் அனுமதிக்க மாட்டார்கள். ஆகவே மிக விரைவில் இதற்குத் தீர்க்கமான முடிவுகள் எடுக்க வேண்டும். அதுதான் எங்கள் மக்களுடைய எதிர்பார்ப்பாகவும், ஊடகவியலாளர்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றன.

இப்படியான கொலைகள் தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும் விடிவிற்கும் தடையாக இருக்கப் போவதில்லை. இதற்குக் காரணமானவர்கள் நிச்சயமாக அதன் விளைவுகளைச் சந்தித்தே ஆவார்கள். எங்களுடைய ஊடகவியலாளருடைய இழப்பு எங்களால் தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தாலும், நிச்சயமாக ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் துணிவோடு தங்களுடைய தமிழ்த் தேசியத்தின் விடிவிற்காக ஓங்கி குரல் கொடுக்கின்ற அந்த நிலை தொடர வேண்டுமென்பதுதான் எங்களுடைய விருப்பம். தமிழீழ விடுதலைப் புலிகள் நீண்ட கரிசனை கொண்டிருக்கின்றார்கள்.

இது சம்பந்தமாக நடவடிக்கைகளை மிக விரைவில் முன்னெடுப்பார்கள். எங்களுடைய தேசியத் தலைவரும் இதில் மிகவும் வேதனையடைந்திருக்கின்றார். அவருடைய சார்பாகவும் அமரர்.திரு.ஜி.நடேசன் அவர்களது குடும்பத்தினருக்கும் ஊடகவியலாளர் சமூகத்திற்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களையும் அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# சமாதானக் கயிற்றால் எங்கள் கைகள் கட்டப்பட்டுள்ளன

***– நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா***



பேரினவாத அரசுகள் தமிழ் மக்களின் உரிமையை, உடைமையை அழிப்பதோடு மட்டுமல்லாது அவர்களின் குரல்களாக ஒலிப்பவர்களையும் அழிப்பதன் மூலம் எமது போராட்டத்தை ஒடுக்கி விடலாமென நினைக்கின்றன. அந்த வகையிலேயே ஊடகவியலாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஆனால், நடேசனின் படுகொலைக்கு அரசு பதில் சொல்லியேயாக வேண்டும்.

இவ்வாறு வியாழக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் நடேசனின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார். அவர் இங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது: அன்று வடக்கில் ஊடகவியலாளர் நிமலராஜனைப் படுகொலை செய்த அதே அரசு தான் இன்று கிழக்கில் ஊடகவியலாளர் நடேசனையும் படுகொலை செய்துள்ளது. நடேசனை யார் சுட்டுக் கொன்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்கு ஓர் எதிர்த் தாக்குதலை நடத்த எங்களால் முடியும். ஆனால், சமாதானம் என்ற கயிற்றால் எங்கள் கைகள் கட்டப்பட்டுள்ளன. இந்தக் கொலையின் பின்னணியை, பேரினவாதச் சக்திகளின் செயல்களைச் சர்வதேசத்திற்கும் மக்களுக்கும் அம்பலப்படுத்த வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.

இன்றைய அரசிற்கு ஒன்றைக் கூற விரும்புகின்றோம். அதாவது இவ்வாறான படுகொலைகள் மூலம் தமிழ் தேசியத்தையோ எமது உணர்வுகளையோ யாராலும் சிதைத்து விடமுடியாது. எங்கள் மக்களின் உரிமையை வென்றெடுக்க, நடேசனின் தியாக இலட்சியத்திற்காக எங்களுடைய பேனாக்களும், எங்கள் ஊடகவியலாளர்களும் எமது மக்களின் உண்மையை வெளிக்கொண்டு வர உறுதியுடன் செயற்பட வேண்டும்.

# இலங்கையில் இதுவரை 31 பத்திரிகையாளர்கள் கொலை!

## *யாருமே கைது செய்யப்படவில்லை!*

– நடேசனின் படுகொலை தொடர்பாக பிரான்சைத் தளமாகக்கொண்டு இயங்கும் தமிழர் மனித உரிமைகள் மையம் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அவ்வமைப்பின் தலைவர் ச.வி. கிருபாகரன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:–

இலங்கைத் தீவில் சேவை செய்யும் ஒரு பத்திரிகையாளருக்கு `அழுத்தங்கள், தொந்தரவுகள், கொலைகள்' என்பவை எதை உணர்த்துகின்றன? இவற்றைப் பத்திரிகையில் எழுதுவது அவர்கள் கடமையாக உள்ளது. அதே வேளை இப்படியான செய்திகளை எழுதிய காரணத்தினால் சிலவேளைகளில் அவர் கொலை செய்யப்படுவதற்கு அப்பத்திரிகை தயாரா இருக்க வேண்டியநிலை இலங்கைத் தீவில் உள்ளது.

கடந்த 2001ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி பிரான்ஸ் எல்லையற்ற நிருபர்கள் சங்க (Reporters sans Frontiers-RSF) பொதுச் செயலாளர், சிறீலங்கா சனாதிபதி திருமதி சந்திரிக்கா குமாரதுங்காவுக்கு எழுதிய கடிதத்தில், 'சிறீலங்காவின் பத்திரிகையாளர், மக்களுக்கு செய்திகளை கொடுக்கும் ஒரே ஒரு காரணத்திற்காக, அவர்கள் மிகவும் உயர்ந்த விலையைக் கொடுக்க வேண்டியதாக உள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள். 1988ம் ஆண்டிலிருந்து இன்றுவரை குறைந்தது 31 பத்திரிகையாளர் அங்கு கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் இதுவரையில் எந்தக்கொலையாளியும் கைது செய்யப்படவோ, விசாரிக்கப்படவோ இல்லை. பத்திரிகையாளர் உங்கள் நாட்டில் வஞ்சிக்கப்படுவது மிகவும் கவலை தரும் விடயம். கடந்த மே மாதம் 31ம் திகதி மிகவும் பிரபல்யமான தமிழ்ப் பத்திரிகையாளர் திரு. ஐயாத்துரை நடேசன் அவர்கள் இனம் தெரியாதோர் எனக் கூறப்படுவோரினால் மட்டக்களப்பில் கொலை செய்யப்பட்டது மிகவும் கவலைதரும் விடயம்.



திரு. நடேசன் அவர்கள் 'பத்திரிகையாளர் தர்மத்தை', நீதி, நியாயத்துடன் எந்தவித பயமும், தயக்கமும் இன்றிச் செய்த காரணத்தினால் கொலை செய்யப்பட்டுள்ளது மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

திரு. நடேசன் அவர்கள் கடந்த 2001ம் ஆண்டு ஆடி 17ம் திகதி மட்டக்களப்பில் இராணுவத்தினால் விசாரணை செய்யப்பட்டு விடுதலையானது யாவரும் அறிந்ததே.

திரு.நடேசன் அவர்கள் தினசரி பத்திரிகையாள வீரகேசரிக்குச் செயலாற்றும் அதே வேளை, வேறு சில இணையத்தளங்களுக்கும் தனது சேவைகளைச் செய்துவந்தார். திரு. நடேசனின் சேவையைப் பாராட்டி 2000ம் ஆண்டு சிறந்த தமிழ்ப் பத்திரிகையாளர் என்ற பரிசும் வழங்கப்பட்டது.

சிறீலங்காவில் பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுவதும், தொந்தரவு செய்யப்படுவதும் நீண்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள்.


இலங்கைத் தீவில் பத்திரிகைச் சுதந்திரம் இல்லையெனும் அளவுக்குப் பத்திரிகையாளர் மிகவும் மோசமான முறையில் நடத்தப்படுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சாசனமும், (UDHR) சர்வதேச சிவில் அரசியல் சாசனத்தின் (ICCPR) 19வது சாரமும் சிறீலங்காவில் முற்று முழுதாக மீறப்பட்டுவருகிறது. இங்கு நடைபெற்ற கொலைகளை ஒழுங்காக விசாரிக்கவோ, கொலையாளியை கைது செய்யவோ முடியாத ஓர் அரசு-தனது கடமையிலிருந்து தவறியுள்ளது என்றே கொள்ள வேண்டும்.

ஆகையால் தற்பொழுது, சிறீலங்காவில் பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதும். பத்திரிகையாளரைக் காப்பாற்றுவதும் ஒரு சர்வதேச நிறுவனத்தின் கடமையாக உள்ளது.

தமிழர் மனித உரிமை மையம், பத்திரிகையாளர் திரு. நடேசனின் படுகொலையைக் கடுமையாகக் கண்டிக்கும் அதேவேளை, உண்மையான பத்திரிகையாளருடனும் பத்திரிகைகளுடனும் தமது நட்புறவை வலியுறுத்திக்கொள்கிறது.

இதேவேளை கடந்த மே மாதம் 24ம் திகதி மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட கல்விமான் திரு.குமாரவேல் தம்பிராசாவின் படுகொலையையும் கடுமையாகக் கண்டிக்கிறது.




# தீர்க்கதரிசனம்

பன்னிரண்டாவது மாடியின் பல்கனியில் நின்று பார்த்த போது பகலை விட மின் விளக்குகள் கீழேயும் நட்சத்திரங்கள் மேலேயுமாய் மின்னிக் கொண்டிருக்கும் இரவு அழகாயிருந்தது.

இன்றைய பகலில் கனடா ஒன்றாறியோவின் எக்லிங்ரன் அவெனியூவின் நீண்டு விரிந்து தெரியும் விளையாட்டு மைதானங்களில் ஆங்காங்கு கால்பந்து, கைப்பந்து என்று ஆட்டங்கள் நடந்து கொண்டிருந்தன.

பல்கனிக்கு நேரே கீழே உள்ள சிறிய நீச்சல் தடாகம் நீச்சலடிக்கும் சிறிசுகளின் சண்டையும் சந்தோசமும் கலந்த கூக்குரலில் கலகலத்துக் கொண்டிருந்தது.

இப்போது அவைகள் ஓரளவு ஓய்ந்திருந்தாலும் நிசப்தத்தைக் குலைக்கும் சத்தங்கள் கேட்டுக் கொண்டுதானிருந்தன. காற்று எங்கிருந்தோ அழகிய தமிழ்ப்பாடலை அள்ளி வந்து கொண்டிருந்தது.

இந்த நேரத்தில் இத்தனை சத்தமாகப் பாடலா..? பல்கனியில் நின்றபடியே காற்று வந்த திசையைக் கூர்ந்து பார்த்தேன். மைதானத்தின் ஓரமாக அடுத்த வீட்டு பல்கனிக்கு எதிரே கீழே ஒரு கார் நிற்பாட்டப் பட்டு கதவு திறந்திருந்தது. ஒரு இளைஞன் எதிர் வீட்டு பல்கனியையே அண்ணாந்து பார்த்தபடி நின்றான்.

பாடல் வரிகள் தெளிவாகக் காதில் விழுந்தன.

காதலா.. காதலா...

ஏன் இப்பிடிச் சத்தமாய்...?

'இந்த இரவு நேரத்திலை.. இப்பிடிச் சத்தமாப் பாட்டுப் போடலாமே..?'

மைத்துனரின் மகனை வியப்போடு கேட்டேன்.

'சித்தி..! இது ஒவ்வொரு நாளும் நடக்கிற விசயம்தான். அந்த வீட்டு எட்டாவது மாடியிலை ஒரு வடிவான தமிழ்ப்பிள்ளை இருக்கு.. அதுதான்.. இவன்..'

'ம்...' எனக்கு விளங்கி விட்டது. இது கனடா ஸ்ரைலில் ஒன்றாக இருக்க வேண்டும்.

'யேர்மனியிலை எண்டால் உந்தச் சேட்டையள் சரிவராது. பத்து மணிக்குப் பிறகு வீட்டுக்குள்ளையே சத்தமாப் பாட்டுப் போடக் கூடாது. இப்பிடி ரோட்டிலை நிண்டு அதுவும் இவ்வளவு சத்தமாப் பாட்டுப் போட்டால்.. பொலிஸ் பிடிச்சுக் கொண்டு போயிடும்.'

'சித்தி..! நீங்கள் இண்டைக்குத்தானே கனடாவுக்கு வந்தனிங்கள். போறதுக் கிடையிலை இன்னும் கனக்க விசயங்கள் பார்ப்பீங்கள்.'

அவன் சொன்னது போலவே எனக்காகக் கனக்கக் காத்திருந்தன. அடுத்த நாள் லிஃப்றில் நுழைந்தபோது ஒரு தமிழ்ப்பெண் நின்றாள்.

'வணக்கம்' என்றேன்.

அவள் மௌனம்.

'சித்தி..! அது தமிழ் இல்லை. அவை கயானா விலை இருந்து வந்தாக்கள்.'

'பார்க்கத் தமிழ் மாதிரி இருக்கு.'

'இல்லை அவையளுக்குத் தமிழ் தெரியாது. இந்த பில்டிங்கிலை இப்பிடி நிறையப் பேர் இருக்கினம்.'

புலம் பெயர்ந்த எமது ஐரோப்பியத் தமிழர்களும் ஒரு காலத்தில் இப்படித்தான் தமிழ் தெரியாத தமிழர்களாய் இருப்பார்களோ..? மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

வாசலில் செக்கியூரிட்டியைத் தாண்டி வெளியில் போனபோது சில்லென்ற காற்று வந்து முகத்தில் அறைந்தது. கோடைகாலம் என்றாலும் இரவின் சில்லிப்பு இன்னும் விலகாமலே இருந்தது.

அந்தச் சில்லிப்பையும் பொருட்படுத்தாது ஒரு வயதானவர் வீதியோரமாக இருந்த பெரிய கற்களின் ஒன்றின் மேல் அமர்ந்திருந்தார். அவருக்கு எனது பாட்டாவின் வயதுதான் இருக்கும் போல் தெரிந்தது.

எனது பாட்டா இப்பவும் ஊரில்தான் இருக்கிறார். அவரும் கனடாவுக்கு வராவிட்டாலும் அமெரிக்காவுக்குப் போயிருக்கலாம். இப்படி கல்லிலிருந்து காற்று வாங்கியிருக்கலாம். ம்.. ஏனோ மறுத்து விட்டார். அவருக்கு ஊரில் கோர்ட்டில் உறுதி எழுதும் வேலை. அதை விட்டிட்டுப் போக விருப்பமில்லையோ என்னவோ..?

பாட்டாவின் தம்பி அவரது பிள்ளைகளோடு அமெரிக்காவில்தான். அவ்வப்போது அவரின் கடிதங்கள் பாட்டாவுக்கு வரும். இடைக்கிடை சிறிது டொலர்களும் கடிதத்துக்குள் வைக்கப் பட்டிருக்கும். நான் அந்தக் கடிதங்களில் ஒட்டி வரும் அமெரிக்கா முத்திரைகளை ஆசையோடு எடுத்து எனது அல்பத்தில் ஒட்டி வைப்பேன்.



அப்படித்தான் ஒரு முறை பாட்டாவின் தம்பியின் கடிதம் வந்தது. பாட்டா வாசித்துக் கொண்டிருக்கும் போதே நான் என்வெலப்பை கேத்தில் ஆவியில் பிடித்து முத்திரையைக் கழற்றி எடுத்து விட்டேன்.

பாட்டா கடிதத்தை வாசித்து விட்டு என்னிடம் தந்திட்டுக் கோர்ட்டுக்குப் போய் விட்டார். கடிதத்தை வாசித்துப் பார்க்க எனக்குப் புல்லரித்தது. பாட்டாவை அமெரிக்காவுக்கு வந்து விடும்படி பாட்டாவின் தம்பி எழுதியிருந்தார். எல்லாச் செலவையும் அவரே பார்க்கிறாராம். ரிக்கெற்றையும் அனுப்புகிறாராம்.

அம்மம்மாவும் போனபின் மனதாலும் உடலாலும் வாடித் தளர்ந்து போயிருக்கும் பாட்டா அமெரிக்காவுக்குப் போனாரென்றால் எவ்வளவு சந்தோசமாயிருப்பார். இவ்வளவு நல்ல விடயத்தைப் பற்றி என்னோடை ஒன்றும் கதைக்காமல் போய் விட்டாரே! எனக்கு மத்தியானம் பாட்டா வீட்டுக்கு வரும் வரை இருப்புக் கொள்ளவில்லை. கடிதத்தை இரண்டு மூன்று முறையாக வாசித்துப் பார்த்தேன்.

பாட்டா அமெரிக்காவுக்குப் போனால் என்ன... எங்கடை வீட்டுத் தென்னம் பாத்திகளுக்கு நாங்கள் குளிக்கும் போது வாய்க்கால் வழி ஓடும் சவர்க்காரம் கலந்த தண்ணீரை மாத்தி மாத்தி விடவும் தென்னம்பாத்திகள் சிதைந்து போகாமல் பொச்சு மட்டைகளை அழகாக அடுக்கிப் பாதுகாக்கவும் ஆளில்லாமல் போகும். வேலிச் சிதம்பரத்தம் பூக்கள் தீண்டுவாரின்றி வாடி வீழும். பாட்டாவின் சுவாமியறை பூவின்றிச் சாம்பிராணிப் புகையின்றி நாஸ்திகக் கோலங் கொள்ளும்.

எண்ணங்கள் பாட்டாவை அமெரிக்காவுக்கு அனுப்பிப் பார்த்து அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து கொண்டிருக்க ஒருவாறு மதியம் வந்து விட்டது. பாட்டாவும் வெள்ளை வேட்டி கசங்காமல் வந்தார். உறுதி எழுதி வந்த காசில் ஒரு பகுதியையும் சந்தையிலை வேண்டிக் கொண்டு வந்த நாவற்பழப் பையையும் அம்மாவிடம் கொடுத்து விட்டு வெள்ளைச் சேர்ட்டுக்கு மேல் போட்டிருக்கும் சால்வையைக் கூட எடுத்துக் கீழே வைக்காமல் அம்மா சமைத்த கும்பிளா மீன் குழம்பையும் செம்பாரைக் குஞ்சுப் பொரியலையும் சோற்றுடன் சுவைத்துச் சாப்பிடத் தொடங்கினார்.

சிங்கள இராணுவம் பருத்தித்துறைக் கடலை ஆக்கிரமித்த பின் பாரை விளை மீன்... என்று கிடைப்பது கஸ்டம்தான். ஆனாலும் கும்பிளா மீனும் சுவைதானே..! நான் பக்கத்துச் சுவரில் சாய்ந்து கொண்டு பாட்டா சாப்பிடும் அழகை ரசித்த படியே

'பாட்டா நீங்கள் அமெரிக்கா போறதை நினைக்க எனக்குச் சந்தோசமாயிருக்கு. எவ்வளவு நல்ல சான்ஸ்.' என்றேன்.

'சும்மாயிரு மேனை. நான் போக மாட்டன்.'

'ஏன் பாட்டா...?'

'இங்கை என்ரை பேரப்பிள்ளையள் நீங்கள் எல்லாரும் இருக்க.. உங்களை விட்டிட்டு நான் அங்கை போய்...... எனக்கு அது சரிவராது.'

'அவர் உங்கடை தம்பிதானே பாட்டா..!'

'அவன் அங்கையிருந்து என்ன கஸ்டப் படுறானோ... ஆருக்குத் தெரியும்..?'

'மகளும் மருமகனும் அங்கை டொக்டர் எண்டாப்போலை அமெரிக்கா எங்கடை மண்ணாகிடுமோ..? இல்லை அவன்ரை பேரப்பிள்ளையளும் பிள்ளையளும் என்ரை ஆகிடுமோ..? நான் போக மாட்டன்.' பாட்டாவின் குரல் தழுதழுத்தது.

பாட்டா பிழை விட்டிட்டார் நல்ல ஒரு எதிர்காலத்தை காலுக்குள்ளை போட்டு மிதிச்சிட்டார். என்று அப்போது நினைத்துக் கொண்டேன்.

அப்போது மட்டுமல்ல பிறகும் அந்த நினைவு வரும் போதெல்லாம் பாட்டா வீணாக அமெரிக்க வாழ்க்கையை அனுபவிக்காமல் போய் விட்டாரே என்று மனசுக்குள் ஒரு குறுகுறுப்பு ஏற்படும். இப்போதும் கல்லில் இருந்த பெரியவரைப் பார்த்ததும் மனசு குறுகுறுத்தது.

அருகே செல்லும் போது ஆவலுடன் அவர் முகத்தைப் பார்த்து வணக்கம் சொன்னேன். அவருக்கு சற்று அதிர்ச்சி கலந்த சந்தோசம். கனடாவில் அப்போது வணக்கம் சொல்லும் வழக்கம் இல்லையாம். அவரது கண்களுக்குள் எதையோ பறி கொடுத்த சோகம். கஸ்டப்பட்டுச் சிரித்த சிரிப்பில் உயிர்ப்பு வாடி இருந்தது. அவரைத் தாண்டிச் சென்ற பின்னும் ஏன் என்ற கேள்வி என்னைக் குடைந்தது. அதிக நேரம் குடைச்சலைத் தாங்க முடியாததால் மைத்துனரின் மகனிடம் கேட்டும் விட்டேன்.

அவன் சொன்னான்.

'அவர் இங்கை தன்ரை மகனோடையும் மருமகளோடையும்தான் இருக்கிறார். அவையள் காலைமை வேலைக்குப் போற பொழுது இவரையும் வெளியிலை விட்டுக் கதவைப் பூட்டிப் போட்டுப் போயிடுவினம். பின்னேரம் வேலையாலை வந்தாப்போலைதான் இவரும் உள்ளை போகலாம்.'

'அப்ப அவர் மத்தியானம் சாப்பிடுறது. ரொயிலற்றுக் போறது எல்லாம்...?'

'எல்லாம் அவையள் வந்தாப் போலைதான்...'

'அப்ப ஏன் அவர் இங்கை இருக்கிறார். நாட்டுக்குப் போகலாம்தானே!'

'அவையள் விட மாட்டினம். அவற்றை பெயரிலை வெல்ஃபெயர் வருகுதில்லோ...'

சத்தமில்லாமல் ஒரு கொடுமை நடந்து கொண்டிருப்பது புரிந்தது. அதற்கு மேல் பேச மனம் வரவில்லை. ரவுணுக்குள் வேலைகளை முடித்து விட்டுத் திரும்பும் போது மதியமாகியிருந்தது. அப்போது அங்குள்ள கற்களில் இன்னும் சில வயதானவர்கள் சேர்ந்து சோகத்தைச் சுமந்தபடி கூட்டமாக இருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். சிலர் தமக்கு வீட்டுக்குள் நடக்கும் கொடுமைகளையும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். சிலர் மௌனத்துக்குள் தம்மைப் புகுத்தி எங்கோ வெறித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்களெல்லோருக்கும் இவர்கள் பிள்ளைகளுக்கு எத்தனை மணிக்கு வேலை முடிகிறதோ அப்போதுதான் மதியச் சாப்பாடு என்று தெரிந்த போது மனசு கனத்தது.

நாடு விட்டு நாடு வந்து வீடிருந்தும் ஆறி அமர இருக்கைகளோ நிழலுக்குக் கூரைகளோ இல்லாதவர்கள் போல்...

எனது மனசுக்குள் இருந்த ஒரு கேள்விக்கு இத்தனை காலம் கழித்து விடை கிடைத்தது. எனது பாட்டா கெட்டிக்காரன்!

- சந்திரவதனா செல்வகுமாரன் (யேர்மனி)



பாகம் - 2

16

# வலிகாமம் இருந்து வன்னி வரை

- கவிஞர் நாவண்ணன்


இந்தப் படுகொலை நிகழ்வினால் அன்றும் படகுச் சேவை நடைபெறவில்லை. இன்னும் எத்தனை நாளைக்கு இந்நிலை தொடருமோ என்று தெரியாதாகையால் மீண்டும் முழங்காவிலுக்கு ஜேம்ஸ் பத்திநாதன் அடிகளிடம் செல்லாது, நேரே கிளிநொச்சிக்கே சென்றேன். கிளிநொச்சி புனித தெரேசாள் ஆலயத்திலே தங்கியபடியால் கிளாலிக்கடலில் கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்கள் பற்றிய விபரங்களை அறிய முடிந்தது. ஏனெனில் ஆலயமும், கிளிநொச்சி வைத்தியசாலையும் பக்கத்துப் பக்கத்துக்காணிகள். அல்லாமலும் வைத்திய சாலையில் சவஅறை ஆலயத்தின் வேலியை ஒட்டியே அமைந்திருந்தது.

அன்று கொலை செய்யப்பட்டவர்களில் முக்கியமானவர் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அதிகாரியான ஆறுமுகம் தர்மராசா அவர்கள். புத்தாண்டு விடுமுறைக்குச் சாவகச்சேரி நுணாவிலில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று திரும்புகையில் படகில் வைத்துப் பாதகரால் கொலை செய்யப்பட்டார். 3ம் 4ம் திகதிகளில் அவரது உடல் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

நான்காம் திகதி மீண்டும் படகுச்சேவை ஆரம்பமாகிறது என்ற தகவல் கிடைத்தது. கிளிநொச்சியில் இருந்து சில குருமாரும் அன்று யாழ்ப்பாணம் செல்லவிருந்தார்கள். எனவே நானும் அவர்களோடு கூடப் புறப்பட்டேன். குருமாருக்குப் படகில் முன்னுரிமையுள்ளதால் அவர்களோடு நானும் ஒருவனாகச் சேர்ந்து செல்வது நல்லது என்ற முடிவோடு அவர்களின் வாகனத்திலேயே ஆலங்கேணி வரை சென்றேன். படுகொலைகள் நடந்த பின்னர் இடம்பெறும் முதற்படகுச் சேவையென்பதால், யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட வேண்டிய சடலங்கள் அடங்கிய பேழைகளும் வேறுபடகுகளில் ஏற்றி வரப்பட்டன.

நாங்கள் ஏறிய படகு மூன்று படகுகள் தொடுக்கப்பட்டதாக இருந்தது. அதில் ஒரு விசேடம் என்னவெனில் மூன்றாவதாக இணைக்கப்பட்டிருந்தது அன்று படுகொலை செய்யப்பட்டவர்கள் வந்த படகு, குருமார் உட்பட எல்லோருமே முதல் இரண்டு படகுகளிலும் ஏறினார்கள். கடைசிப்படகில் ஏறுவதற்கு எவருக்கும் மனம் வரவில்லை. படகு ஓட்டிகள் அந்தப் படகிலும் மக்களை மாறி இருக்கும்படி கூறினர். யாரும் அசைவதாக இல்லை. எனக்கென்னவோ அதிற் பயணம் செய்யவேண்டும் போல் இருந்தது. நான் அந்தப் படகில் ஏறிக் கொண்டேன். அந்தப் படகில் அல்லிப்பளை வரை பயணம் செய்தது நானும் அந்த ஓட்டிகளில் ஒருவரும்தான்.

அந்தப் படகின் பக்கச்சுவர்கள் நீர்மட்டத்தின் மேற்பகுதியில் துப்பாக்கிச் சன்னங்களால் ஏற்பட்ட துளைகள் காணப்பட்டன. படகு நன்கு கழுவப் பட்டிருந்தாலும் இரண்டு நாட்களின் முன்னர் ஏற்பட்ட அனர்த்தத்தால் ஒன்றன் மேல் ஒன்றாக விழுந்து கிடந்த பிணங்களால் வழிந்த இரத்தத்தின் வாடை முழுமையாக அகலாது மெல்லியதாக வீசிக் கொண்டுதான் இருந்தது. இரண்டு நாட்களின் முன்னர் அதனுள் கிடந்திருக்கக்கூடிய பிணங்களின் கோரக்



காட்சியை கற்பனை செய்துபார்த்த போது மனதை என்னவோ செய்தது. அந்தப் பெரிய படகு இரண்டு பேரை மட்டும் கொண்டிருந்ததாகையால் தொடுகைக் கயிற்றின் மூலம் இழுபடவும் அலையின் தாக்கத்தால் பெரிதாக ஆடி அசைந்து சென்றுகொண்டிருந்தது. அதுவேறு ஒருவித அச்சத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது. படகினுள் ஏற்றப்பட்டிருந்த துப்பாக்கிச் சன்னங்களின் துளைகளால் படகின் உள்ளே கடல் நீர் வந்து கொண்டிருந்தது. நான் சென்ற வள்ளத்தில் இருந்த ஓட்டி பிளாஸ்டிக் பாத்திரம் ஒன்றால் அந்த நீரை அள்ளி வெளியே ஊற்றிக்கொண்டிருந்தார்.

அந்தப் படகினில் ஏறாது மற்றப் படகுகளில் ஏறியவர்கள் புத்திசாலிகள்தான் என நினைத்துக் கொண்டேன். நான் அமைதியின்றிப் பயணித்துக் கொண்டிருந்தாலும் இந்த அனுபவத்தைப் பெற்றுக் கொண்டு செல்வதில் ஒருவித திருப்தியும் ஏற்படவே செய்தது.

படகு அல்லிப்பளைத் துறையை அடைந்தபோது நேரம் நள்ளிரவைத் தாண்டிவிட்டது. அந்த வேளையிலும் கரையிலே பெருந்தொகையான மக்கள் திரண்டு காத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் எல்லோரும் 2ம் திகதி அல்லிப்பளையில் இருந்து படகில் புறப்பட்டவர்களின் உறவினர்கள். அவர்களிடம் இருந்து ஏதேனும் தகவல்கள் கிடைக்குமா, அல்லது அவர்களைப் பற்றிய தகவல்கள் ஏதும் கிடைக்குமா என நிற்பவர்களும், இறந்து போனவர்கள் என்று தகவல் கிட்டியவர்களும் அவர்களது உடல்களை வரவேற்றுப் பெற்றுக் கொள்ளுவதற்காகவும் காவல் நின்றார்களும் எமது படகுகளில் வந்தவர்களுக்கு அறிமுகமானவர்களில் சிலரைக் கண்டதும் அவர்கள் இறங்கியும் இறங்காததுமான நிலையிலேயே அவர்களைச் சூழ்ந்து கொண்டு விபரங்கள் கேட்கத் தொடங்கி விட்டார்கள். வேறு சிலர் பிணங்கள் வந்து கொண்டிருந்த படகுகளை நோக்கி ஓடினார்கள்.

முதலாம் திகதி யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்ட நான் ஐந்தாம் திகதி அதிகாலையில் தான் எனது பிள்ளைகளிடம் வந்து சேரமுடிந்தது.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான இக்கொடுமைகளைக் கடற்படைக் காடையர்கள் மட்டுமன்று இயற்கையும் செய்யத் தவறவில்லை. அதே ஆண்டு ஒகஸ்ட் பத்தாம் நாள் அல்லிப்பளையிலிருந்து ஆலங்கேணிக்கு மாலை ஏழு மணிக்குப் புறப்பட்டுச் சென்ற படகுகளில் இரண்டு 9.00 மணி அளவில் நடுக்கடலில் கடும் காற்றுக்குள்ளும், பேரலைகளுக்குள்ளும் சிக்கிக் கடலில் மூழ்கின. இவற்றுள் ஆண்கள், பெண்கள், இளைஞர், சிறுவர், குழந்தைகள் என அனைத்துத் தரப்பினரும் பயணம் செய்திருந்தனர்.

அப்படகுகளில் பயணித்த 19 பேர் கடலில் மூழ்கி மாண்டனர். அவற்றுள் ஒரு இளந் தம்பதிகளும் அடங்குவர். 19 பேரில் 17 பேரின் சடலங்கள் முதல் தேடுதலில் மீட்டகப்பட்டன. மறுநாள் குழந்தையொன்றின் சடலம் மீட்கப்பட்டது. இளவேணி எனும் பெண்ணின் சடலம் கிடைக்கவே இல்லை. இந்தப் படகு விபத்தில் இரண்டு குடும்பங்கள் முழுமையாக அழிந்துபோயின.

இத்தகைய அனர்த்தங்கள் பல நடந்த இந்தக் கடலேரியில் இன்று அமைதியாகப் பயணம் செய்கின்றோம் என்றால் அதற்குக் காரணம் இப்பொழுது எமது படகுகளுக்கு இடமும் வலமுமாகக் காவல் வந்து கொண்டிருக்கும் கடற்புலிகள்தான். அலைகடல் மீது வந்து அடாவடித்தனம் புரிந்த அக் கொடியவர்களை முகாம்களுக்குள் முடக்கி வைத்தது போன்ற சாதனையைப் புரிந்தவர்கள் கடற்புலிகளே.

இந்தக் கடலேரியிலே சாதனை புரிந்த கடற்புலிகளை எண்ணுகையில் கடற் கரும்புலி மேஜர் வரதனின் நினைவு வந்தது. கடலில் பயணிக்கும் அப்பாவித் தமிழர்களையும், கடற்படைப் போராளிகளையும் எதிர்பாராத விதத்தில் இடைமறித்துப் பலிகொள்ளும் கடற்படையை வலிந்து போருக்கிழுத்து அவர்கள் கொட்டம் அடக்கவேண்டும் என்று கடற்போர் நடாத்தி களப்பலியான லெப்.கேணல் சாள்சின் இழப்புக்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்பதற்காக இடம்பெற்ற கரும்புலித் தாக்குதலில் இரண்டு சுப்பர் டோறாக்களையும் பல கடற்படையினரையும் கொன்று பழி தீர்த்தவர்கள் மேஜர் வரதன், கப்டன் மதன் ஆகியோர். இவர்கள் தியாகங்களும், தற்கொடைகளும் ஒன்றிற்கு ஒன்று சளைத்தவையல்ல. அதேவேளையில் வரதனின் வரலாறு மிகவும் பரிதாபமானது.

தென் தமிழீழம் மட்டக்களப்பு கள்ளிச்சை வடமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவன். சிங்கள ஆக்கிரமிப்பாளர் கொடுமையால் இடம் பெயர்ந்தபோது கண்ணிவெடியில் கால் வைத்து கால் ஒன்றை இழந்தவன். காலை இழந்த உடனே தளபதி கருணாவின் பணிப்பின்பேரில் வரதன் கடல்வழியாக யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டான். நிழற்படப்பிரிவில் மதனும், வரதனும் தமது கடமைகளைச் செய்து கொண்டிருந்தனர். இருவருமே தாம் கடற் கரும் புலிகளாக வேண்டும் என்ற விருப்புற்று தலைவரிடம் விண்ணப்பித்து கடற்கரும்புலிகள் அணியில் இணைந்துகொண்டனர்.

காலை இழந்தது முதல் வரதனுக்கும், அவன் குடும்பத்தவர்களுக்கும் எதுவித தொடர்பும் இருக்கவில்லை. ஒருமுறை கிளாலிக் கடலில் காவற் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுது வரதன் தன்னூரவர்களைக் கண்டான். அவர்களிடம் இருந்து தன் உறவினர்களைப் பற்றிய தகவல்களைப் பெற முடியவில்லை. அவர்கள் உயிருடன்தான் இருக்கிறார்களோ என்று உறுதி செய்யவும் முடியவில்லை. இரண்டு மூன்று கடிதங்கள் அனுப்பிப் பார்த்தான். அவற்றுக்கும் பதிலில்லை. எனவே அவர்களில் எவரும் உயிருடன் இல்லை என்ற முடிவுக்கு வந்தான். கரும்புலித் தாக்குதலுக்குத் தயாரானான்.

இதேவேளையில் வரதனின் தாயார் தன் மகன் எங்கே என்று தெரியாது அவன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பதில் பெருமுயற்சி செய்து கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் தன் உறவினர்களான போராளிகளுடன் தொடர்புகொண்டார். அவர்களில் தம்பி முறையான ஒரு போராளி வரதன் இயக்கத்தில் இருப்பதாக உறுதிசெய்து வரதனின் தாயாரான கருணைக்கு கடிதம் அனுப்பிவைத்தார். ஆனால் அவன் இணைந்திருக்கும் பிரிவு எது என்பதைக் குறிப்பிடவில்லை.

தம்பிமுறையான போராளியிடம் இருந்து வரதன் இருக்கும் விடயத்தை அறிந்தவுடன் வரதனின் தாயார் யாழ்ப்பாணம் நோக்கி விரைந்தார். தான் பெற்ற மைந்தனைக் காணும் பேராவல் தாய்க்கு.

26.08.1993 அன்று மாலை ஆலங்கேணித் துறையில் இருந்து அல்லிப்பளையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றார். படகு நடுக்கடலில் போய்க் கொண்டிருந்தவேளை நாகதேவன் துறைப்பக்கம் கடற்சண்டை ஆரம்பமாகின்றது. அக்கினிப் பிளம்புகள் துண்டம் துண்டமாகத் தூக்கி எறியப்படுகின்றன. இரவில் கடல்வெளியில் வாணவேடிக்கை நிகழ்வதுபோலிருந்தது அக்காட்சி.

கருணைக்கு இதுவெல்லாம் வாழ்வில் புதிய அனுபவங்கள். திடீரென கடலின் நடுவில் ஒரு பாரிய தீப்பிழம்பு சுவாலித்து எரிகின்றது. அதே வேளை பயங்கரமான இடியோசை. 'கரும்புலிப் படகு மோதிவிட்டது' என்று இவள் சென்ற படகில் இருந்த யாரோ கூறுகின்றார்கள். மற்றுமொரு கரும்புலிப் படகு இடிக்கும் சத்தமும் பாரிய தீப்பிழம்புச் சுவாலையும்.

'யார் பெற்ற பிள்ளைகளோ?' என்று வரதனின் தாயார் கவலையோடு கூறுகின்றார். அல்லிப்பளைக் கரையை வந்தடைந்ததன் பின்னரும் அந்தக் காட்சிகளை அவளால் மறக்க முடியவில்லை. கரும்புலியாகி இறந்த அந்தப் பிள்ளைகளுக்காக இரங்கி அழுதது அவள் மனம்.

கரையை வந்து அடைந்ததும் அவள் தம்பி முறையான உறவினனுக்குத் தகவல் தரப்படுகின்றது. அவரும் சென்று அவளைக் காண்கின்றார். அவளது மகன் வரதன் இரவு கிளாலிக் கடலில் தாக்குதல் நடாத்தி வீரகாவியமாகிவிட்ட செய்தியை எப்படி அவளிடம் தெரிவிப்பது என்ற தயக்கம் அவருக்கு. மகனைச் சந்திப்பதற்கான ஒழுங்குகளைச் செய்வதாகக் கூறி அவர் மெல்ல விலகிக்கொண்டார். தான் இரவு கண்ட கரும்புலித் தாக்குதல் சம்பவத்தை மற்றவர்களிடம் கூறி பிரதாபித்துக் கொண்டிருந்தார் கருணை.

அன்றைய ஈழநாதம் பத்திரிகை வெளிவந்தது. அந்தப் பத்திரிகையிலே இரவு நடந்த கரும்புலித் தாக்குதல் பற்றிய

> படகு நன்கு கழுவப் பட்டிருந்தாலும் இரண்டு நாட்களின் முன்னர் ஏற்பட்ட அனர்த்தத்தால் ஒன்றன் மேல் ஒன்றாக விழுந்து கிடந்த பிணங்களால் வழிந்த இரத்தத்தின் வாடை முழுமையாக அகலாது மெல்லியதாக வீசிக் கொண்டுதான் இருந்தது.

விபரம் வந்திருந்தது. அப்பத்திரிகையை ஆவலுடன் வாங்கிப் படித்த அவள் வியந்துபோனாள். அன்று இரவுத் தாக்குதலில் கரும்புலிகளாய் கரைந்தவர்களில் தனது மகனும் ஒருவன் என்ற செய்தியைக் கண்டாள். அவளால் அழக்கூட முடியவில்லை. தனது மகன் கரும்புலியாக வெடித்து இறந்ததை தன் கண்களால் கண்ட முதற் தாய் அவள். அந்தத் தாக்குதலைக் கண்ணுற்றபோது 'யார் பெற்றபிள்ளைகளோ' என்று இரங்கியவள். அதில் தனது மகனும் ஒருவன் என்பதை அறிந்துகொண்ட பொழுது எப்படித் துடித்துப் போயிருப்பாள். அவள் துயரத்தையும் துடிப்பையும் இதைப் படித்துக்கொண்டிருப்பவர்களே உணர்ந்து கொள்ளட்டும் என்று உங்கள் கற்பனைக்கே விட்டுவிடுகின்றேன்.

# சுவிசில் கானக்குயில் 2004

தாயகச் சிறுவர் நல மேம்பாட்டு நிதிக்காகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுவிஸ் கிளை ஐரோப்பா ரீதியில் நடத்திய கானக்குயில் 2004 சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சுவிஸ் சூரிச் நகர Albisguetli மண்டபத்தில் நடைபெற்றது. சுவிசின் முன்னணி வர்த்தக நிறுவனங்களின் பேராதரவுடன் 02.30க்கு மங்கள விளக்கேற்றலுடன் இந்நிகழ்வு ஆரம்பமாகியது. கானக்குயில் 2004 நிகழ்வில் சிறப்பு விருந்தினராகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு.றெஜி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உருக்கமான இவரது உரையில் தாயகத்தின் தற்போதைய தேவைகள், மறுவாழ்வுத் திட்டங்கள் குறித்தும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பங்களிப்பின் அவசியத்தையும் அவர்களுக்கு நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்தார். 2002ம் ஆண்டு நடைபெற்ற கானக்குயில் நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராக வருகை தரவிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு.றெஜி அவர்கள் வரமுடியாமல் போயிருந்தமையும் தமிழீழ மண்ணிலிருந்து செய்மதி ஊடாக அரங்கத்திலிருந்த மக்களுடன் தனது கருத்தைப் பகிர்ந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கவை.



கானக்குயில் 2004 நிகழ்வில் கௌரவ விருந்தினராகத் தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தைகள் அணியின் பொதுச் செயலாளர் திரு.தொல்.திருமாவளவன் கலந்து சிறப்பித்தார். இவர் ஆற்றிய உரையில் விடுதலைப் போரின் எழுச்சி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தாயகத்தில் ஆற்றுகின்ற பணிகள் என்பதைக் குறிப்பிட்டதோடு உலகத் தமிழினத்துக்குக் கிடைத்த ஒப்பற்ற தலைவர் தமிழீழத் தேசியத் தலைவர் என்பதையும் தமிழ் இன விடுதலைக்காகத் தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தைகள் அணி என்றென்றும் கை கொடுக்கும் என்ற செய்தியையும் அரங்கம் நிறைந்த தமிழ் மக்களுக்குத் தெரிவித்தார்.



கானக்குயில் நிகழ்வில் சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, டென்மார்க், இத்தாலி, நோர்வே ஆகிய நாடுகளிலிருந்து போட்டியாளர்கள் பங்குபற்றினர். கானக்குயில் 2004 ஆக, தர்மலிங்கம் முகுந்தன் அவர்களும் இளம் கானக்குயில் 2004 ஆக, நிலா மாணிக்கவாசகர் அவர்களும் மழலைக் கானக்குயில் 2004 ஆக, சங்கவி விஜயரட்ணம் அவர்களும் தெரிவாகியிருந்தனர். இளம் கானக்குயில் 2004 ஆக, நிலா மாணிக்கவாசகர் அவர்களும் மழலைக் கானக்குயில் 2004 ஆக, சங்கவி விஜயரட்ணம் அவர்களும் தமக்கு வழங்கப்பட்ட பரிசில்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிக்காக வழங்கியிருந்தமை வரவேற்கத்தக்க நிகழ்வாக அமைந்திருந்தது. இராதா நடனாலய மாணவிகள் வழங்கிய எழுச்சி நடனமும், மண்வாசனைக் கலைஞர்களான முகத்தார் வீடு எஸ்.ஜேசுரட்ணம் குழுவினர் வழங்கிய நகைச்சுவை நிகழ்வும் நடைபெற்றன.




– சுகந்தி மூர்த்தி

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நோர்வேக் கிளையினால் 22.05.04 அன்று நடாத்தப்பட்ட `புலர்வின் பூபாளம்' நிகழ்வில் இருந்து...











## இலண்டனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டி நிகழ்வில்...



## நாகபூசனி அம்பாள் உற்சவம்

பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ நாகபூசனி அம்பாள் அலங்கார உற்சவம் எதிர்வரும் 18.06.04 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. 27.06.04 ஞாயிற்றுக்கிழமை மஞ்சத் திருவிழாவும், 01.07.04 வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.




## குறுங்கதை

### பார்வை



தரிசு நிலம்
குப்பைகளும் கூழாங்கற்களும்
குவிந்து கிடந்தன.
'உதவாத குப்பைகள் -
கூழாங்கற்கள்' என்று
உலாத்தலுக்கு வந்த நாய்
கண்களை மூடி உரக்கக்
குரைத்தது.
படுத்துக் கிடந்த மாட்டுக்கு
இது பிடிக்கவில்லை.
'குப்பைதானே பெறுமதியான
எருவாகிறது - கூழாங்
கல்லைத்தானே தெருவாகப் போடுகிறார்கள்' என்றது மாடு.
'நன்றாகப் பார்... எதிலும் ஏதோ ஒன்று இருக்கிறது...'
மாடு தொடர்ந்தது:
'குப்பையை எருவாய்ப் பார்
கூழாங்கல்லைத் தெருவாய்ப் பார்.'

- காசி ஆனந்தன்.

## கண்டுபிடியுங்கள்

### கடந்தவார விடை

1. காட்டுப்பன்றி.
2. யானை.
3. வௌவால்
4. ஒட்டகம். (ஒருவகை)
5. ஆமை.
6. கரடி.
7. திமிங்கிலம்.
8. தீக்கோழி.
9. முதலை.
10. தாரா.




### இடம் மாறிய தலைகள்

இங்குள்ள பறவைகளில் ஒரு பறவையின் தலையே சரியாகவுள்ளது. மற்றயவை இடம் மாறியுள்ளது. பறவைகளின் சரியான தலைகளைக் கண்டுபிடித்துப் போடவும். பறவைகளின் உடல் இலக்கத்திலும் தலைகள் ஆங்கில எழுத்திலும் இருக்கின்றன.

விடை அடுத்தவாரம்

## கதை முற்றம்

### அழகா திறமையா



அடர்ந்த காடு ஒன்றில் ஆண் மயில் ஒன்று தன் குடும்பத்தோடு வசித்து வந்தது. அதற்கு அடர்த்தியான நீண்ட தோகை இருந்தது. மகிழ்ச்சி வந்துவிட்டால், மயிலுக்குத் தலைகால் புரியாது, தனது தோகையை விரித்து ஆடும். காட்டிலுள்ள எல்லாப் பறவைகளும், விலங்குகளும் அங்கே வந்து கூடிவிடும். மயிலினுடைய ஒய்யாரமான ஆட்டத்தைப் பார்த்து இரசிக்கும். அந்த மிருகங்களின் புகழுரையைக் கேட்டுக்கேட்டு மயிலுக்குத் தற்பெருமை கூடிவிட்டது.

ஒருநாள் காட்டிலிருந்த தாமரைக் குளம் ஒன்றிற்கு மயில் சென்றது. அந்தக் குளத்தின் கரையில் நின்று ஆட ஆரம்பித்தது. விலங்குகள், பறவைகள் எல்லாம், மயிலின் ஒய்யாரமான ஆட்டத்தைப் பார்க்கக் கூடிவிட்டன. மயில் அசைந்து அசைந்து ஆடியது. எல்லா மிருகங்களும் கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தன. அந்தநேரத்தில், வெள்ளைக் கொக்கு ஒன்று வந்து, தாமரைக் குளத்தில் இறங்கியது. அது கரையில் நடைபெற்றுக்கொண்டிருந்த மயிலின் ஆட்டத்தைக் கண்டு மயங்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், மயிலின் ஆட்டத்தைக் கொக்கு கவனித்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. தன்பாட்டுக்கு ஒரு காலை மடக்கிக்கொண்டு, மற்றொரு காலால் நின்றுகொண்டு. மீனுக்காகக் காத்திருந்தது.

கொக்கின் செய்கை மயிலுக்குக் கோபத்தை ஊட்டியது. 'ஏ கொக்கே, நான் எவ்வளவு அழகாக ஆடுகிறேன். என் ஆட்டத்தைப் பார்க்க இத்தனை மிருகங்களும், பறவைகளும் காத்திருக்கின்றன. உனக்கு மட்டும் என்ன வந்தது?' என்று மயில் கோபத்துடன் கேட்டது. மயில் கோபமாகக் கேட்டதைக்கூட கொக்கு காதில் வாங்கிக்கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. தன்பாட்டுக்கு நீரைப் பார்த்துக்கொண்டிருந்தது. மயிலுக்கு எரிச்சல். இப்படி யாருமே அதை அலட்சியப்படுத்தியது கிடையாது.

'ஏ கொக்கே நான் கேட்டது உனக்குக் கேட்கவில்லையா?' என்று கேட்டது. கொக்கு மிகவும் அலட்சியமாக மயிலைப் பார்த்தது. 'உனக்கு இந்தக் காட்டை விட்டால் வேறு ஒரு இடமும் தெரியாது. காட்டை விட்டு வெளியே போகாதவன் நீ. நான் அப்படி இல்லை. பல நாடுகளைச் சுற்றியவன். உன் அழகினால் உனக்கு ஒரு பயனும் கிடையாது. ஆபத்து வந்தால் உன் அழகு வந்து உதவிபுரியாது. இன்னும் சொல்லப்போனால், ஆபத்தான வேளையில் உன் அழகிய பெரிய தோகையே உன்னைத் தப்பியோட முடியாமல் தடையாக இருக்கும். இப்படி ஆடிப் பழகுவதை விட, வேகமாகப் பறக்கப் பழகிக்கொள். முதலில் தற்பாதுகாப்பு, பிறகுதான் ஆட்டம், பாட்டம், அழகு எல்லாம்' என்றது கொக்கு.

'உனக்கு என்னைப் பார்த்து, என் அழகைப் பார்த்து பொறாமை' என்று சாடியது மயில். கொக்கு ஒன்றும் பேசாது நின்றது. திடீரென வேட்டை நாய்கள் குரைப்பது கேட்டது. மயிலின் ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்த மிருகங்கள், பறவைகள் எல்லாம் கண் மூடித் திறப்பதற்கு முன்னர் ஓடி மறைந்துகொண்டன. மயில் பறக்க முடியாமல் வேடனிடம் அகப்பட்டது. முதலில் தற்காப்பு, பிறகு தான்-ஆட்டம், பாட்டம், அழகு என்ற உண்மையை அப்போதுதான் மயில் உணரத் தொடங்கியது.

## அறிந்துகொள்வோம்

### நரி

- நரிகளில் சிவப்புநரி, தங்கநரி, குள்ளநரி என மொத்தம் 21 வகைகள் உள்ளன. இவற்றுக்கிடையில் நிறம், வாயின் அடியில் உள்ள பகுதி,



நிறம் வாழும் இடத்தைத் தேர்வு செய்தல் ஆகியவற்றில் வித்தியாசங்கள் உள்ளன.

- சமவெளிகள், புல்வெளிகள், காடுகள், மலைகள், புதர்கள் உள்ள பகுதிகள், பாலைவனங்கள் என எல்லா இடங்களிலும் வாழும் தன்மை கொண்டவை நரிகள்.
- நரிகளுக்கு ஒரு பிரசவத்தில் சுமார் இரண்டிலிருந்து ஆறு குட்டிகள் வரை பிறக்கும். சுமார் 8 வருடங்கள் வரை தொடர்ந்து குட்டிபோடும். நரிகளின் கர்ப்ப காலம் 63 நாட்கள்.
- இரண்டு மாதங்கள் வரை தாய்ப் பாலையும் பெற்றோர்மென்று தரும் உணவையும் நரிக் குட்டிகள் உண்ணும். 3 மாதங்களில் பெற்றோரைப் பின் தொடர்ந்து எல்லைகளைப் பற்றியும் வேட்டையாடுதல் பற்றியும் கவனித்துக்கொள்ள ஆரம்பிக்கும். 6 மாதங்களில் தாங்களே சிறிய மிருகங்களை வேட்டையாட ஆரம்பிக்கும்.
- பெரும்பாலும் மாமிசம்தான் நரியின் முக்கிய உணவு. சிறிய மிருகங்களான ஆடு, ஊர்வன, சிறு பறவைகள் இவற்றை வேட்டையாடும். இவை எதுவும் கிடைக்காதபோது பழங்களையும் புற்களையும் கூட உண்ணும்.
- நரிகள் ஒவ்வொரு முறையும் தமது எல்லையை விட்டு வெளியே வரும்போதும் உள்ளே போகும்போதும் காற்றில் முகர்ந்து பார்த்துக்கொண்டும், ஒவ்வொரு அடியையும் பரிசோதித்துக்கொண்டும் செல்லும். இரையோ, ஆபத்தோ அருகில் இருக்கிறதா என்று கண்டுகொள்வதற்காகத்தான் இவ்வாறு நடந்து கொள்கின்றன.
- நரிகள் ஆபிரிக்காவிலும், வட அமெரிக்காவிலும், இந்தியாவிலும் அதிகளவு காணப்படுகின்றன.

## தகவல் முற்றம்

### மண் வகை

1. செங்கபில மண்
2. கல்சியமற்ற மண்
3. செம்மஞ்சள் அற்றசோல்
4. கல்சியமுள்ள செம்மஞ்சள் அற்றசோல்
5. செங்கபில அற்றசோல்
6. செம்மஞ்சள் பொட்சோல்
7. முதிர்ச்சியில்லா கபிலமண்
8. கருமண்
9. வண்டல் மண்
10. படைய வண்டல்மண்
11. மணல்மண்
12. உவர்மண்
12. சதுப்பு (சேற்று நில) மண்

### பழங்களும் அதன் பிறப்பிடங்களும்

| | |
|---|---|
| திராட்சை | - கஸ்பியன் கடல்பகுதி |
| அன்னாசி | - பிரேசில் |
| வாழை | - தென்கிழக்கு ஆசியா |
| கொய்யா | - மத்திய அமெரிக்கா |
| பப்பாளி | - மெக்சிக்கோ |
| முந்திரிகை | - பிரேசில் |
| மாம்பழம் | - தென்கிழக்கு ஆசியா |
| பலாப்பழம் | - இந்தியா |
| தோடம்பழம் | - சீனா |
| நெல்லி | - இந்தியா |
| எலுமிச்சை | - இந்தியா |

### நாடும் – மொழியும்

| | |
|---|---|
| கனடா | - ஆங்கிலம், பிரெஞ்சு |
| சீனா | - மண்டரின் |
| எகிப்து | - அராபி |
| இலங்கை | - தமிழ், சிங்களம். |
| ஈராக் | - அராபிக் |

# அக்கினிக் குஞ்சொன்று

## புதிய வரலாற்றைத் தொடங்கியவன்

**தியாகி சிவகுமாரனுடன் தாங்கள் கடைசி நேரத்தில் இருந்ததாகப் புலம்பெயர் நாடுகளில் பலர் பொய்யுரைத்துவரும் நிலையில் அவருடன் உண்மையில் கடைசி நேரத்தில் இருந்த கி.பி. அரவிந்தனின் கட்டுரையை இங்கு பிரசுரிக்கின்றோம். (ஆ.ர்.)**

சரியாக முப்பதாண்டுகளுக்கு முன்னான நிகழ்வு அது. ஏறத்தாழ நண்பகல் நேரம். உச்சி வெயிலை உயர்த்திப் பிடித்தபடி மரவள்ளித் தோட்டத்து செம்மண்ணில் அவன் வீழ்ந்து கிடந்தான். அவனது குதிக்காலில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. துப்பாக்கியால் குறிபார்த்தபடி காக்கிச் சட்டைக் காவலர்கள் சூழ்ந்து நின்றனர். இனித் தப்ப வழியில்லை என்னும் நிலையில் தன் சட்டைப்பையில் இருந்த சிறிய வெற்று வாசனைத் திரவிய குப்பிக்குள் பத்திரப்படுத்தியிருந்த சயனைட்டை அவன் அருந்தினான். இது பெருந் தீயை மூட்டப்போகும் ஒரு பொறி அல்லது காட்டிடை ஆங்கோர் பொந்திடை வைக்கப்பட்ட ஓர் அக்கினிச் குஞ்சு என்பதை அப்போது அவன் அறிந்திருப்பானா? அல்லது வேறு யாரேனும் எதிர்வு கூறியிருப்பார்களா? நான் அறியேன். ஆனால் அவனது நெஞ்சில் கனன்ற அந்தத் தீயை நான் அறிந்திருந்தேன். ஆம் 1974ம் ஆண்டு ஜூன் 5ம் நாள் திரவியம் என வீட்டாராலும் நெருக்கமானவர்களாலும் அழைக்கப்பட்ட சிவகுமாரன் ஈழப்போராட்டத்தில் சயனைட்டை அறிமுகஞ்செய்து புதிய வரலாற்றைத் தொடக்கி வைத்தான். முதல் களப்போராளியாகி ஈழப்போராட்டத்தை முன் நகர்த்தினான். தன் சாவின் மூலம் அன்றைய இளந்தலைமுறையை, தமிழ் சமூகத்தை ஓர் உலுக்கு உலுக்கினான்.

1972ம் ஆண்டுக்கு முன்னரே சிவகுமாரனின் பெயர் எங்களைப் போன்றோருக்கு அறிமுகமாகி இருந்தது. பத்திரிகைச் செய்திகளிலும் அவனது பெயர் அடிபடத் தொடங்கி இருந்தது. யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அருகே அப்போதைய யாழ்பாண மேயர் துரையப்பாவின் காருக்குக் குண்டு வைத்தது, அப்போதைய ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சராக இருந்த சோமவீர சந்திரசிறியின் காருக்கு உரும்பிராயில் வைத்து குண்டெறிந்தது என்பன போன்ற சம்பவங்களில் அவனது பெயர் பரபரப்பாகப் பேசப்பட்டது. இவற்றிற்காக அவன் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தான். சிறைக்குள்ளும் அவன் கலகக்காரனாகவே இருந்ததனால் அவன் அநுராதபுர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தான். அவனது வழக்குகளுக்கான ஒவ்வொரு தவணையின் போதும் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படுவான். அவனது வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமல் தவணைகளாக இழுத்தடிக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்திற்கும் அநுராதபுரத்திற்கும் இடையே அலைக்கழிக்கப்பட்டான். அப்படியாக யாழ்ப்பாணச் சிறைக்குக் கொண்டு வந்த ஒரு பொழுதினில்தான் நான் சிவகுமாரனை முதலில் சந்தித்தேன்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசினால் வரையப்பட்ட புதிய அரசியல் யாப்பின்படி 1972.05.22 அன்று இலங்கை, 'சிறீலங்கா' என்ற புதிய பெயருடன் குடியரசாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் என்ற வகையில் கிளிநொச்சி மாவட்டம் அடங்கலாக யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் கைது செய்யப்பட்ட நாங்கள் எழுபது பேர் வரையிலும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தோம். ஏற்கனவே 1971ம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பியினரும் அவர்களின் தலைவரான ரோஹண விஜயவீராவும் அங்கிருந்தார்கள். இந்தக் குடியரசு எதிர்ப்பு நடவடிக்கையில் முதலில் கைது செய்யப்பட மூன்று இளைஞர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். எதிர்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தோம் என்ற வகையில் மே 18ம் திகதியே நாங்கள் மூவர் கைது செய்யப்பட்டிருந்தோம். மறுநாள் சிறைக்கு அனுப்பப்பட்டபோது சிறைப் பணிமனைக்கு அருகிலேயே தீவிர கண்காணிப்புக்கும் பாதுகாப்பிற்குமாக வைக்கப்பட்டிருந்த ரோஹண விஜயவீராதான் முதலில் எங்களை வரவேற்றார். 'என்ன மூன்று பேர்தானா?' என்று தனது மழலைத் தமிழில் இளக்காரத்துடன் அவர் கிண்டலடித்தார். எங்களுக்கு சற்று வெட்கமாயிருந்தது. ஆனாலும் அதனைக் காட்டிக்கொள்ளாமல் எங்களுக்கு பின்னால் இன்னும் ஆயிரம் பேர் வருவார்கள் என்று பெருமையடித்துக் கொண்டோம். ஆனால் மொத்தம் எழுபது பேர்தான் எதிர்ப்பு நடவடிகைக்காகக் கைதானார்கள் என்பது எங்களுக்குச் சற்று ஏமாற்றம்தான். எங்கள் அனைவருக்கும் ஒரு மண்டபம் போன்ற கட்டடத்தை ஒதுக்கியிருந்தார்கள்.

அந்த மே மாத இறுதி வாரத்தின் ஒருநாள், மாலைச் சாப்பாட்டிற்குப் பின்னால் எங்களைக் கணக்கெடுத்து மண்டபத்திற்குள் தள்ளி அடைத்துவிட்டார்கள். நாங்களெல்லோரும் கம்பிகளைப் பிடித்தபடி ஆவலுடன் வெளியை வெறித்தபடி இருந்தோம். ஏனெனில் இன்றிரவு சிவகுமாரன் கொண்டுவரப்படுகின்றான் என்ற தகவல் இரகசியமாக மதியமே எங்களுக்குக் கிடைத்திருந்தது. எங்கள் கட்டடத்திற்கு எதிரே *செல்* என்று சொல்லப்படும் தனி அறைகளில் ஏப்ரல் கிளர்ச்சிக்காரர்கள் அடைக்கப்பட்டிருந்தனர். இரண்டு பகுதியையும் நடைவழி பிரித்திருந்தது. ஏப்ரல் கிளர்ச்சியாளர்களுக்குச் சிவகுமாரன் மீது மிகுந்த மரியாதை இருந்தது. ஏனெனில் அவர்கள் ஏப்பரல் கிளர்ச்சிக்குப் பயன்படுத்திய வெடிகுண்டு மற்றும் ஆயுத அறிவுகள் மிகப் பழசானவை. ஆனால் சிவகுமாரன் பல புதிய தொழில் நுட்பங்களை அறிந்திருந்தான். சிறைக்குள் வருபவர்கள் முதலில் ரோஹண இருக்குமிடத்தைத் தாண்டிப் பின்னர் எங்கள் இடத்தையும் தாண்டித்தான் அந்த நடைவழியே மற்றப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டும். இரவு ஒன்பது மணியளவில் சிறைக்காவலர்கள் புடைசூழ நடைவழியே வேட்டி அணிந்த அந்த நெடிய உருவம் நடந்து வந்தது. நாங்கள் அடையாளங் கண்டு கொண்டோம். எங்கள் கட்டடத்தின் முன்னால் வந்ததும் நாங்கள் ஆர்ப்பரிக்கத் தொடங்கினோம். முகமெல்லாம் மலர்ந்திருக்கக் கனிந்த குரலில் எல்லோருடனும் உரையாடத் தொடங்கிய சிவகுமாரன், தன்னை மறந்தவனாய் அங்கேயே தரித்து நின்றான். நான் என்னை மறந்தவனாக அவனையே வெறித்தபடி இருந்தேன். அவனுடைய காவிய வாழ்வில் நானும் பங்காளியானது ஆச்சரியம்தான். இன்றைக்கும் அந்தக் காட்சியை என்னால் மறக்க முடியவில்லை. சிறைக்காவலர்கள் அவனை நகரும்படி வேண்டுகோள் விடுத்த வண்ணம் இருந்தனர். இன்றிரவு இந்தக் கட்டடத்தில் இவர்களுடனேயே என்னையும் தங்க வையுங்கள் என்று உறுதியான குரலில் கூறத் தொடங்கினான் சிவகுமாரன். முகத்தின் மலர்வும் குரலின் கனிவும் அவனிடத்தே மறைந்துவிட்டது. காவலர்கள் மறுக்கச் சிவகுமாரன் அடம்பிடிக்க நிலமை கலகச் சூழலுக்கு மாறத் தொடங்கியது. சிவகுமாரன் அந்த நடைவழியிலேயே உட்கார்ந்து விட்டான். இறுதியில் எங்கள் கட்டடத்திற்கு எதிரேயுள்ள செல்லில் அடைப்பதாக உடன்பாடு காணப்பட்டது. இந்தத் தீவிரம், இந்தப் போர்க்குணம் அவனது இறுதிக்கணம் வரையில் அவன் கூடவே இருந்தது.

அவனது போர்க்குணத்திற்கும் தனித்த செயற்பாட்டிற்கும் உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தைக் கூறலாம். 1973ம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின் போது காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சிங்கள மொழிபேசும் பொலிசார் பெண்களுடன் அத்துமீறி நடக்க முற்பட்டனர். இதனைக் கண்ணுற்ற சிவகுமாரன் தன்னந்தனியனாகவே அவர்களை எதிர்த்தான். அவன் நல்லூர் காவல் நிலையத்தில் அடைக்கப்பட்டான். பொதுமக்கள் அவனுக்காகக் காவல் நிலையத்தை முற்றுகையிட்டதால் பொலிசார் அவனை விடுவிக்க வேண்டயதாயிற்று.

## செயல்வீரன்

1960களின் பிற்கூறு இலங்கைத்தீவின் இன்றைய நிலைமைக்கான பல முகிழ்ப்புகளைக் கொண்டிருந்தது என்றால் மிகையில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்ட தீண்டாமைக்கு எதிரான வெகுஜன இயக்கப் போராட்டங்கள், உலக அளவில் நிகழ்ந்த சீனக் கலாச்சாரப் புரட்சி, பிரான்சில் எழுந்து உலகெங்கும் பரவிய மாணவர் கிளர்ச்சிகள், தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட, தமிழரசுக் கட்சியின் மூளையென வர்ணிக்கப்பட்ட நவரெத்தினம் அமைத்த சுயாட்சிக் கழகத்தின் தோற்றம், ரஷ்யாவில் லுமும்பா பல்கலைக் கழகத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்ட ரோகஹண விஜயவீரா இலங்கைக் கமயூனிஸ்ட் கட்சியிலும், பின்னர் தனியான கட்சியை அமைத்தும் இளம் கிளர்ச்சிக்காராகத் தோற்றம் பெற்றமை போன்ற இன்னோரன்ன நிகழ்வுகளை அந்தக் காலம் வெளிப்படுத்தியிருந்தது. இவை இந்துக் கல்லூரியில் படித்த சிவகுமாரனைப் பாதித்தது ஆச்சரியம்தான். சிவகுமாரன் கம்யூனிசக் கருத்துக்கள் கொண்ட நண்பர்களுடன் உறவுகளைப் பேணுவதிலும் சமூக நீதிக்கான செயல்பாடுகளை முன்னெடுப்பதிலும் ஈடுபாடு கொண்டவனாக இருந்தான். அதேவேளையில் தமிழர்களின் மிதவாதத் தலைமைக்கு மாற்றாகப் போர்க் குணம் கொண்ட தலைமை ஒன்றை கட்டியெழுப்ப முயற்சித்தோருடனும் இணைந்து செயற்பட்டான். ஆனாலும் அவன் பேசுவதைவிடவும் செயலாற்றுவதிலேயே அக்கறை கொண்டவனாக இருந்தான். அதனாலேயே பல செயற்பாடுகளைத் தனியாளாய் மேற்கொண்டு பொலிசாரின் கண்காணிப்புக்கு ஆளாகியிருந்தான்.

சிறையில் இருந்து வெளியே வந்ததன் பின்னர் இளைஞர்களுக்கான இயக்கம் அமைப்பதில் நான் அக்கறை காட்டிவந்தேன். ஆனால் சிவகுமாரன் அதில் அதிகம் அக்கறை கொள்ளவில்லை. நாங்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்வோம். இருவரும் யாழ்ப்பாணம் கொட்டடியில் இயங்கி வந்த மீனாட்சி வணிகக் கல்லூரியில் கணக்கியல் படித்து வந்தோம். அந்தக் காலகட்டத்தில் போராட்டத்தில் அக்கறை கொண்ட யாழ்ப்பாண இளைஞர் பலரும் அங்கு படித்தார்கள் அல்லது சிறை, பொலிஸ் என்பவற்றில் இருந்து மீள்பவர்களுக்கான புகலிடமாக அது அமைந்தது என்றும் கூறலாம். தமிழ் இளைஞர் பேரவை அமைக்கப்பட்டதும் அதன் செயல்பாடுகள் சிலவற்றில் சிவகுமாரன் முகம் காட்டாமல் பங்கேற்றும் இருக்கிறான். 1973ன் பிற்பகுதியில் மலையக மக்களுடன் உறவைப் பேணவேண்டும் என்ற வேலைத்திட்டம் முன்வைக்கப்பட்டபோது அதில் சிவகுமாரன் ஆர்வத்துடன் பங்கேற்று எங்களுடன் மலையகம் வந்திருந்தான். மலையகத்தில் இருந்து நாங்கள் யாழ்ப்பாணம் திரும்பியபோது நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டிற்கான தயாரிப்பு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் எங்களைப் போன்ற இளஞ்சமூக ஆர்வலர்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே கணிக்கப்பட்டிருந்தோம். இது எங்களுக்குச் சினத்தை மூட்டியது. சிவகுமாரன் தலைமையில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்திருந்த நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின் செயலகத்திற்குச் சென்றோம். மாநாட்டுப் பொறுப்பாளர்களைச் சந்தித்து நாங்களும் பங்களிக்கும் வகையில் செயல் திட்டத்தை வகுக்கும்படி கோரினோம். முதலில் அவர்கள் மறுத்தார்கள். அப்படியானால் எங்கள் பங்களிப்பு இல்லாமல் மாநாடு நடைபெற முடியாது எனச் சிவகுமாரன் எச்சரித்தான். அதன் பின் தொண்டர் அமைப்பில் எங்களையும் இணைப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. சிவகுமாரன் பொறுப்பாளர்களில் ஒருவனாக அறிவிக்கப்பட்டான். நானும் வேறு பல நண்பர்களும் தொண்டாராகப் பணியேற்றோம். எங்கள் பணிகள் சுமுகமாகவே நடைபெற்றன. ஆனால் இருபாலைச் சந்தியில் இருந்து புறப்பட்ட இறுதிநாள் காண்பிய ஊர்திகள் பங்கேற்ற ஊர்வலத்தில் பண்டாரவன்னியன் பற்றிய காண்பிய ஊர்தி கலந்து கொள்வதற்கு மாநாட்டு அமைப்பாளர் அனுமதி மறுத்திருந்தனர். சிவகுமாரன் தலைமையிலான தொண்டர்களாகிய நாங்கள் ஊர்வலத்தை ஒழுங்கு படுத்துபவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தோம். இந்தத் தகவல் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதும் ஊர்வலம் நகராதவாறு தெருவை மறித்தபடி நாங்கள் மறியல் செய்தோம். மாநாட்டு அமைப்பாளர்கள் எத்தனையோ விளக்கங்கள் அளித்துக் கெஞ்சினர்.

ஆனால் சிவகுமாரன் எதற்கும் மசியவுமில்லை விட்டுக்கொடுக்கவும் இல்லை. கடைசியாக பண்டாரவன்னியன் காண்பிய ஊர்தியுடன் ஊர்வலம் நடைபெற்றது.

1974 ஜன. 10 இறுதிநாள் நிகழ்வாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மாநாட்டுப் பேராளர்கள் உரையாற்றும் பொதுக்கூட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டிருநது. இந்த மாநாடு திட்டமிடப்பட்டபோது இத்தனை எழுச்சியாக மக்கள் ஆதரவு இதற்குக் கிடைக்கும் என்று அமைப்பாளர்கள் எதிர்பாத்திருக்கவில்லை. ஆதலால் சில நூற்றுக்கணக்கானவர் கலந்து கொள்ளக்கூடிய வீரசிங்கம் மண்டபத்தைப் பொதுக் கூட்டத்திற்கு ஒழுங்கு படுத்தியிருந்தனர். ஆனால் மாநாடு நடைபெறுவது தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்ட

# கண்டேன்

நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களிடையே எழுச்சியைத் தோற்றுவித்துவிட்டது. ஆதலால் யாரும் எதிர்பாராத வகையில் இறுதிநாள் நிகழ்ச்சிக்கு ஆயிரக்கணக்கணக்கில் மக்கள் வீரசிங்கம் மண்டபத்தை முற்றுகையிடத் தொடங்கி விட்டனர். மண்டப ஒழுங்கைக் கவனித்துக் கொண்டிருந்த தொண்டர்களாகிய எங்களுக்கு நிலைமையின் தீவிரம் தெரியத்தொடங்கிவிட்டது. உடனடியாகச் சிவகுமாரன் எங்களை அழைத்து மாற்று வழிகளை யோசிக்கும்படி கோரினான். அப்போதுதான் நாங்கள் கூட்டத்தை எல்லாப் பொதுமக்களும் பார்க்கவும் கேட்கவும் வசதியாக மண்டபத்திற்கு வெளியே நடத்தக் கோருவதென்று தீர்மானித்தோம். எங்கள் அழுத்தம் காரணமாக அமைப்பாளர்கள் வெளியே கூட்டம் நடாத்தச் சம்மதித்தனர். நாங்கள் வெளியே கட்டப்பட்டிருந்த சிகரத்தற்குக் கீழே வாங்குகளை அடுக்கி தற்காலிக மேடை அமைத்தோம். வீரசிங்க மண்டபக் கட்டிடத்தின் சிறு முற்றம், அதற்கும் எதிரே கோட்டைச் சுவரில் இருந்து சரிவாக அமைந்த புல்வெளி. இதனைப் பிரித்தபடி தார்ச்சாலை. நாங்கள் மேடைக்கு அருகே இருந்தோம். தார்ச்சாலை புல்வெளி எங்கும் மக்கள் தலைகளே தெரிந்தன. திருச்சி பேராசிரியர் நயினார் முகமது பேசத் தொடங்கினார். நாங்கள் பேச்சை இரசிக்க தொடங்கியிருந்தோம். அப்போதுதான் அந்த, நாமெல்லாரும் அறிந்த, துயரம் நிகழ்ந்தது. தொண்டர்கள் என்ற நிலையில் மேடையின் அருகே இருந்தோம் என்பதால் எல்லாவற்றையும் எங்களால் தெளிவாகவே பார்க்க முடிந்தது. நாங்கள் அந்த மேடை அமைக்கப்பட்டிருந்த சிறு முற்றத்தையும் தார்த்தெருவையும் பிரித்த மறிப்புக் கம்பியை ஒருவர் தொட்டபோதே எங்களைப் பார்த்து அலறியடி வீழ்ந்தார். ஆதலால் அதனைத் தொடவேண்டாம் என்று நாங்கள் கத்தித் தடுத்துக் கொண்டிருந்த போதும் அதைத் தொட்டவர்கள் அலறியபடி செத்து வீழ்ந்தார்கள். எல்லாம் அடங்கிய இறுதி நேரம் வரையில் நானும் சிவகுமாரனும் அங்கிருந்தோம். இதற்குப் பழிக்குப் பழி வாங்குவதென்று நாங்கள் இருவரும் சபதம் செய்து கொண்டோம். காலையில் சந்தித்பதற்கான இடத்தையும் தீர்மானித்துக் கொண்டோம். ஆனால் விடிவதற்கு முன்பாகவே நல்லூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் வீட்டிற்குக் காவலாக நின்ற பொலிசார் மீது சிவகுமாரன் வெடிகுண்டை வீசி விட்டான். பொலிசார் காயமடைந்தார்கள். சிவகுமாரன் தேடப்படுபவனாக மாறிவிட்டான். இது அவனது குண இயல்பை விளக்க போதுமானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

'டேவிட் குஞ்சு' என்றுதான் சிவகுமாரன் என்னை அழைப்பதுண்டு. நான் பொலிசாரின் தீவிர கண்காணிப்புக்கு உட்பட்டிருக்கவில்லை. 1974.01.10ம் திகதியில் இருந்து 1974.06.05ம் திகதி வரையில் நான் அவனுடன் கூடவே இருந்தேன். எல்லாச் செயல்பாடுகளிலும் பங்கேற்றேன். வெடிமருந்துகள் ஆயுதங்கள் தேடி சாதிய எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்றிருக்கிறோம். நானும் சாவகச்சேரியைச் சேர்ந்த ஜீவராசாவும் மருத்துவர் ஒருவரின் உதவியுடன் சைனட்டைத் தேடிப் பெற்று வந்ததும் இது எனக்கு மட்டும்தான், உங்களுக்குத் தேவையில்லை என்று சிவகுமாரன் கட்டளையிட்டதும் ஒரு முப்பதாண்டுகளுக்கு முன்னான நிகழ்வு. இனி ஒரு தடவை பொலிசின் கையில் தான் பிடிபடுவதில்லை என்பதில் சிவகுமாரன் உறுதியாகவே இருந்தான். எங்களைப் பொலிசார் பிடித்தால் எல்லாப் பொறுப்பையும் தனது தலையில் சுமத்தி விடும்படியும் கூறியிருந்தான். இந்த ஐந்து மாத காலமும் ஒரு காவியத்திற்கான சம்பவங்கள் நிறைந்து கிடக்கின்றன, எல்லாவற்றையும் இப்போது கூறுவதும் தேவையற்றதாகும். அவனது இறுதிக் கணம் வரைக்கும் நான் டேவிட்டாகவே இருந்தேன். பின்னாட்களில் எனக்கு வழங்கப்பட்ட குற்றப் பத்திரிகைகளிலும் இந்தப் பெயரே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் துயர நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக இருந்த உதவி பொலிஸ் அதிபர் சந்திரசேகராவைப் பழிவாங்குவதே எங்களின் நோக்கமாக இருந்தது. மிகச் சரியான அந்தத் திகதி எனக்கு நினைவில் இல்லை. கைலாசப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் சந்திரசேகராவை மறித்துக் கொலை செய்வது என்பது எங்கள் திட்டமாக



ஏற்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த முயற்சி எங்களுக்குப் பாரிய தோல்வியையே தேடித்தந்தது. சந்திரசேகரா உயிர் தப்பிவிட்டான். சிவகுமாரன் மிக உயர் தேடலுக்கு உரியவனாக அறிவிக்கப்பட்டான். அவனது தலைக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1974ம் ஆண்டில் அவனது ஊரான உரும்பராய்க் கிராமம் எழுநூறு பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டைக்கு உள்ளானது. இன்றைக்குப் போராட்டம் முதிர்ந்த நிலையில் இவையெல்லாம் சாதாரணமாக இருக்கக்கூடும். இந்நிலையில் சிவகுமாரனை இந்தியாவுக்கு அனுப்ப முடிவெடுத்தோம். இரகசிய கடல்வழி பயணத்திற்குத் தேவையான பணம் எம்மிடம் இருக்கவில்லை. தெரிந்தவர்களிடம் பணம் கேட்டுச் சேகரிப்பது எனது பணியாயிற்று. அப்போது புகழ்மிக்க பெண்மணி ஒருவர் 'என்னிடம் தாலிக்கொடி மட்டும்தான் இருக்கின்றது' என்ற பொன்மொழியை உதிர்த்தார். எல்லோரும் கைவிரித்து விட்டார்கள். இந்நிலையில்தான் பணம் தேடும் வேறு முயற்சிகளை ஆராயத் தொடங்கினோம். அப்போதுதான் சத்தியசீலனின் சகோதரி சத்தியசீலி பணியாற்றும் கோப்பாய்க் கிராமிய வங்கி எங்கள் கவனத்திற்கு வந்தது.

1974ம் ஆண்டு ஜுன் 5ம் திகதி காலை பத்து மணியளவில் மருதனார்மடத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட வாடகை வண்டியில் உரும்பிராயில் இருந்து நாங்கள் நால்வர் (சிவகுமாரன், மகேந்திரன், ஜீவராசா, நான்) கோப்பாய் நோக்கி பயணித்தோம்.

**கி.பி. அரவிந்தன்**

எங்கள் திட்டம் சொல்லளவில் மிகச் சிறந்ததாகவே இருந்தது. ஆனால் நடைமுறையில் இறங்கியபோது கட்டுத் தோட்டாக்கள் கொண்ட எங்கள் ஆயுதங்கள் எதுவும் ஒத்துழைக்கவில்லை. ஒன்று பிழைக்க மற்றவையெல்லாம் குழப்பமாகிவிட்டன. கார்ச்சாரதி திறப்புடன் ஓடிவிட்டான். திறப்பில்லாமல் காரை இயங்கச் செய்ய யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஊர்மக்கள் கூடிவிட்டார்கள். எங்கள் கால்களை நம்பி குடிமனைகளுக்கு ஊடாக ஓடத்தொடங்கினோம். கொள்ளைக்காரர் என்றபடி மக்கள் எங்களைத் துரத்தத் தொடங்கினர். கற்களால் எறியத் தொடங்கினர். ஊர்மனை தாண்டித் தோட்டப்பகுதிக்கு வந்துவிட்டோம். வெடிக்காத கட்டுத் தோட்டாக்கள் கொண்ட துப்பாக்கியைக் காட்டி துரத்தி வருபவர்களைத் தடுத்து நிறுத்தினோம். நாம் யார், எதற்கு வந்தோம் என்பதை விளங்கப்படுத்தினோம். சிவகுமாரன் தன்னை அறிமுகப்படுத்தியதும் சிலருக்கு அவனைத் தெரிந்திருந்தது. நாங்கள் மெதுவாக ஆசுவாசப்படுத்தியபடி நீர்வேலி நோக்கித் தோட்ட வரப்புகள் வழியே நடக்கத் தொடங்கினோம். ஊர்மக்கள் பின்னே எங்களைப் பார்த்தபடி நின்றிருந்தனர். நேரம் நண்பகலை நெருங்கிக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் எதிரே மண்பாதையில் விரைந்து வந்த பொலிஸ் வாகனங்கள் எங்களை வழிமறித்தன. பின்னால் திரும்பிய போது அங்கேயும் பொலிசார் எங்களை நோக்கி வருவது தெரிந்தது. நாங்கள் முற்றுகைக்குள் மாட்டப்பட்டோம். இப்போது எல்லோரது கைகளிலும் இருந்த குண்டுகள் இல்லாத ஆயுதங்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன. நால்வரும் ஒன்றாகப் பிடிபடாமல் நான்கு திசையில் பிரிந்து ஓடிப் போக்குக் காட்டுவதென்றும் தீர்மானித்துக் கொண்டோம். இதனால் சிவகுமாரன் உட்பட எல்லோரும் தப்ப முடியுமென்று நம்பினோம். ஆனால் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக சிவகுமாரனே பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தான். உண்மையில் அப்போது யார் சுற்றிவளைக்கப்பட்டார் என்பதனை நான் அறிந்திருக்கவில்லை. நான் ஒரு வாழைத் தோட்டத்திற்குள் மறைந்து நடந்தபடி வெகுதூரம் வந்திருந்தேன். எனது சாரத்தின் மடிப்பிற்குள் ஆயுதங்கள் கனத்தபடி இருந்தன. என்னைப் பொலிஸ் துரத்தவில்லை என்பது உறுதியாயிற்று. வேகமாக நடக்கத் தொடங்கினேன்.

## சயனைட் அருந்திய சிவகுமாரன்

நான் புன்னாலைக்கட்டுவன் வந்து சேர்ந்துவிட்டேன். என்னைக்கண்டதும் அபயமளித்தவர்கள் ஏங்கிப் போனார்கள். அப்போதுதான் என்னால் முழுத்தகவலையும் அறிய முடிந்தது. அந்த இடத்திலேயே சிவகுமாரன் பிடிபட்டதாகவும் அவனது காலில் மரவள்ளித்தடி குத்திக் காயமாகி வீழ்ந்து விட்டதாகவும் அந்த நிலையிலும் பொலிசாருடன் போரடியதாகவும் இறுதியில் அவன் சயனைட் அருந்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் மற்ற இருவரும் மாலையில் குடிமனைகள்குள் வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. நான் யாழ்ப்பாண வைத்தியசாலைக்குப் புறப்பட்டுச் சென்றேன்.

மாலை ஐந்து மணியிருக்கும். யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரி பொலிசாரால் நிறைந்திருந்தது. நான் வேறு வழியால் உள் நுழைந்தேன். ஏனெனில் வைத்தியசாலை எனக்கு மிகப் பழக்கமானது. எனது அம்மா, அம்மாவின் தோழிகள், எங்களுக்கு ஆதரவான மருத்துவர்கள், ஊழியர்கள் என என்னை அறிந்த பலர் அங்கிருந்தனர். பொலிஸ் காவலையும் தாண்டி நான் சிவகுமாரன் அருகே சென்றுவிட்டேன். சிவகுமாரனின் அம்மா அங்கு இருக்கின்றார். சிவகுமாரனின் அதே சிரிப்பு அதே மலர்ச்சி. 'டேவிட் குஞ்சு' என்று அழைக்கின்றான். 'சயனைட் பிழைச்சிட்டுது போல கிடக்குது. இவங்கட விசாரணைக்குப் போகக் கூடாது வழியைப் பார்' என்கிறான். வெளியே வந்து நண்பர்களுடன் திட்டமிடுகிறேன். திட்டமொன்று வகுக்கப்படுகின்றது. யாழ்ப்பாண மின்சார நிலையத்தில் எனது சிறை நண்பன் ஒருவன் பணியாற்றிக் கொண்டிருந்தான். அவனிடம் உதவி கோருகிறேன். நாங்கள் குறிப்பிடும் நேரத்திற்கு மின்சாரத்தைத் தடைப்படுத்துவதாக உறுதி கூறுகிறான். மற்றைய ஏற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். உங்கள் முயற்சியை நிறுத்துங்களென சிவகுமாரனது மரணச் செய்தி எங்களை வந்து சேர்கின்றது. அவனது இறுதி ஊர்வலத்திலும் சடங்கு நிகழ்விலும் நான் கலந்து கொள்ளவில்லை. ஏனெனில் சிவகுமாரன் மரணித்த மறுநாளில் இருந்து நான் தேடப்படுபவனாக மாறியிருந்தேன். பத்திரிகையிலும் பெயர் அடிபடத் தொடங்கியிருந்தது. ஆனாலும் அவனது இறுதி ஊர்வலத்தை நான் பார்த்தேன். நான் பார்க்கும் படியாக ஊர்வலப் பாதை மாற்றப்பட்டது. அவனது சிதையில் மூட்டப்பட்ட தீ தகதகதகவென இன்னமும்தான் எரிந்து கொண்டிருக்கின்றது. எனது கவிதையில் குறிப்பிட்டது போல்

முதல் வித்து நீ
முன்னறிவித்தவன் நீ
சாத்வீகப் பாதையில்
சந்தி பிரித்தாய்
கால வெளியில்
சுவடுகள் பதித்தாய்
காலக் கரைவிலும்
உந்தன் சுவடுகள்...

ஈழப்போராட்டத்தின் ஒரு முதலாய் அக்கினிக் குஞ்சாய் இளைஞர்களின் குறியீடாய் எங்கள் தலைமுறை தாண்டியும் அவன் இருப்பான்.

மேலதிக விபரங்களுக்கு:
appaal-tamil.com
kipian@hotmail.com

# வெளியேறத் தயாராகும் பெக்கம்




இளவயதினர் மத்தியில் குறிப்பாகப் பெண்களிடையே பெரும் வரவேற்பை (கவர்ச்சி) பெற்றிருக்கும் இங்கிலாந்தின் டேவிட் பெக்கம் கடந்த ஆண்டு மன்செஸ்ரர் யுனைரெட் கழகத்தில் இருந்து ஸ்பெயினின் றியல் மட்றிட்டிற்கு மாற்றப்பட்டார். இவரது வருகையால் றியல் மட்றிட்டின் விளம்பரம் சற்று ஆரம்பத்தில் அதிகரித்ததேயன்றி எந்த ஒரு வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக்கொடுக்கவில்லை. அதே சமயம் 22.4 மில்லியன் யூரோக்களை வருட வேதனமாகப் பெற்றுக்கொண்டார். இவ்வளவு பெரிய தொகையினைக் கொடுத்தும் எந்தக் குறிப்பிட்ட வெற்றியும் இல்லை என்பதுடன் பல ஆட்டங்களையும் விளையாட முடியாத நிலை (காயமுற்றதால்) ஏற்பட்டது. இந்நிலையில் இவரை உள்வாங்குவதற்கான முயற்சியில் இங்கிலாந்தின் செல்சி, ஆர்சனெல் அணிகள் ஆர்வம் காட்டுகின்ற போதும் செல்சி கழகத் தலைவரும் கோடிஸ்வரருமான ரஷ்யாவைச் சேர்ந்த றோமான் அப்பிரமோவிச் 40 மில்லியன் பவுண்ட்சிற்கு பெக்கத்தை ஒப்பந்தம் செய்ய விருப்புக்கொண்டுள்ளார். பெக்கத்தின் மனைவி விக்ரோறியா மற்றும் இரு பிள்ளைகளும் இங்கிலாந்தில் வசித்து வருவதால் அவரும் அங்கேயே இருப்பதை விரும்புகின்றார்.



## செய்திச்சரம்

### கெலி வைற்றிற்கு இரண்டாண்டுகள் தடை

ஊக்க மருந்து உபயோகித்தது உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து 100 மீற்றர், 200 மீற்றர் போட்டிகளில் 2003ம் ஆண்டு உலகச் சம்பியனான அமெரிக்காவைச் சேர்ந்த கெலி வைற் பெற்ற அனைத்துப் பதக்கங்களையும் இழந்தார். 15.12.2000 முதலான அனைத்துப் பெறுபேறுகளிற்கும் இது பொருந்தும். இதனால் 2003ம் ஆண்டு 100, 200 மீற்றர் உலகச் சம்பியன் பட்டம், 4x100 மீற்றர் முதலாவது இடம் 2001, 200 மீற்றர் 3வது இடம் 2001 என்பனவற்றிற்கான பதக்கங்களையும் இழக்கின்றார். இத்தடையானது 17.05.2003 முதல் இரண்டாண்டிற்கு அமுலில் இருக்கும் என்பதால் இவ்வாண்டு ஓகஸ்ற் மாதம் நடைபெறவுள்ள கோடைகால ஒலிம்பிக் போட்டியிலும் பங்குபற்ற முடியாது.

### நூற்றாண்டு ஆட்டங்கள்:

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தினை முன்னிட்டு கடந்த 20ம் திகதி இரண்டு ஆட்டங்கள் (ஆண்கள், பெண்கள்) பிரான்சின் சென்டெனிசில் நடைபெற்றது. ஆண்கள் ஆட்டத்தில் கலந்துகொண்ட பிரேசில்-பிரான்ஸ் அணிகள் 1930ம் ஆண்டை நினைவு படுத்தும் வகையில் சீருடை அணிந்திருந்தனர். ஆட்டம் கோல்களற்ற சமநிலையில் முடிவுற்றது.

பெண்கள் ஆட்டத்தில் 2003ம் ஆண்டு உலகச் சம்பியனான ஜேர்மனியை எதிர்த்து உலகத் தெரிவு அணி மோதியது. உலகத் தெரிவு அணி 3:2 எனும் நிலையில் வெற்றி பெற்றது. பெண்கள் உதைபந்தாட்டம் நூற்றாண்டை இன்னும் அடையவில்லை என்பது கவனத்திற்குரியது.

### ஐரோப்பியக் கிண்ணத்தை வெற்றிகொண்ட வலென்ஸ்

கடந்த 19ம் திகதி சுவீடன் நாட்டின் கொற்வேர்க் நகரில் நடைபெற்ற ஐரோப்பியக் கிண்ண (UEFA) இறுதியாட்டத்தில் ஸ்பெயினின் வலென்ஸ் அணி- பிரான்சின் மார்செல் அணியை 2:0 எனும் நிலையில் வெற்றிகொண்டது. 1962ம், 63ம் ஆண்டுகளில் இக்கிண்ணத்தை வெற்றிகொண்ட வலென்ஸ் அணி 1980 இல் (C2) இங்கிலாந்தின் ஆர்செறல் அணியை வெற்றிகொண்டுள்ளது. இவ்வாண்டு ஸ்பெயின் சம்பியனான வலென்சிற்கு இது இரட்டை வெற்றியாகும்.

## உதைபந்தாட்டம்

### 15.05.1983 கையுறைகளுக்கு ஓய்வு கொடுத்த டினோ

உலகின் தலைசிறந்த பந்துக்காப்பாளரான இத்தாலியைச் சேர்ந்த டினோ சொப் (dino zof) தனது நாற்பத்து ஓராவது வயதில் உதைபந்தாட்டத்தில் இருந்து ஓய்வு பெற்றார். நூற்றுப் பன்னிரண்டு முறை தனது நாட்டிற்காக விளையாடிய இவர் ஸ்பெயினில் நடைபெற்ற பன்னிரண்டாவது (1982) உலகக்கிண்ண இறுதிச் சுற்றில் தனது உயரிய பங்களிப்பினால் மூன்றாவது முறை இத்தாலி உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டதின் சூத்திரதாரியாகவும் விளங்கினார்.

செப்டெம்பர் 1972 முதல் யூன் 1974 வரையான காலப்பகுதியில் தனது நாட்டிற்காக விளையாடிய காலகட்டத்தில் கோல் எதனையும் விடவில்லை. அதாவது 1143 நிமிடங்கள் (13 ஆட்டங்கள்) என்ற நிலையில் சாதனை படைத்திருந்தார். இச்சாதனைக் காலத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தவர் கெயிற்றி நாட்டைச் சேர்ந்த தாக்குதல் வீரர் இமானுவேல் சனென். ஜேர்மனியில் 1974ம் ஆண்டு நடைபெற்ற 10வது உலகக்கிண்ண இறுதிச்சுற்றில் குழுநிலை ஆட்டத்தில் (3:1 இத்தாலி) இக்கோலினை அவர் அடித்தார்.

## ஜே. ஜே.




### தென் ஆபிரிக்கா

உலகத் தரத்தில் பரப்பளவில் 24வது இடத்தினையும், மக்கள் தொகையில் 27வது இடத்தினையும் பெற்றுள்ள தென் ஆபிரிக்கா சூலு, இக்சோகா, ஆபிரிக்கானை, ஆங்கிலம் உட்பட பதினொரு மொழிகளை ஆட்சி மொழியாகக் கொண்டுள்ளது. ஆறு மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வருடந்தோறும் உள்வாங்கும் தென் ஆபிரிக்கா 75.2 வீதம் கறுப்பினத்தவரையும், 13.6 வீதம் வெள்ளை இனத்தவரையும் ஏனைய இனத்தவர்கள் 11.2 வீதம் ஆகும். 37 வீதம் மக்கள் வேலையற்றவர்களாக இருந்தபோதும் வருட வருமானமாக 27.5 மில்லியன் டொலர்களை இந்நாடு பெறுகின்றது.

### உதைபந்தாட்டம்

5,24,700 உதைபந்தாட்ட வீரர்களில் 250 வீரர்களே தொழில்சார் (Professional) வீரராவார். 300 கழகங்களில் 2000 அணிகள் உண்டு. 10,000 உத்தியோகத்தர்களையும், 700 நடுவர்களையும் கொண்ட இந்நாடு 1991ம் ஆண்டு மீண்டும் தமக்கான உதைபந்தாட்டச் சம்மேளனத்தை உருவாக்கியதோடு 1992இல் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அங்கத்துவத்தையும் பெற்றுக்கொண்டது. 18வது உலகக்கிண்ண இறுதிச் சுற்றினை நடாத்தும் வாய்ப்பை ஒரு வாக்கினால் (ஜேர்மனி -12, தென் ஆபிரிக்கா -11 நியூசிலாந்து வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை) தவறவிட்ட தென் ஆபிரிக்கா இம்முறை அதனைத் தமதாக்கிக்கொண்டது.


நேசன் Cash and Carry




இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள்,
V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 3574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201

# சிறீலங்கா அரசைப்போன்று தமிழ் ஊடகங்கள் மீது றோ திட்டமிட்டு மேற்கொண்ட ஒடுக்குமுறை!



## ஆராரோ...! றோ றோவோ !



( பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர் )

## அங்கம் 11



இந்திய இராணுவம் ஈழமண்ணில் தங்கியிருந்த காலத்தில் புரிந்த அராஜகங்களுக்குச் சிகரம் வைத்தாற்போல் அவர்கள் தமிழில் இயங்கிய ஊடகத்துறையை நசுக்கிய கொடூரம் விளங்குகின்றது. ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற நூலின் ஆசிரியர் எஸ்.எம்.கோபாலரத்தினம் 'என் உரை' என்ற பகுதியில் 'அமைதி காப்பதற்காகவும் அல்லல்படும் ஈழ மக்களுக்கு ஆறுதல் அளிக்கவும் என வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறியபின் எமது மண்ணில் ஓர் இந்தியச் சிறையை அமைத்தது' என்று கூறுகிறார். மூத்த பத்திரிகையாளரான கோபாலரத்தினம் இந்தியப் படைகளின் அடக்குமுறைக்கு இலக்காகித் துயருற்றார்.

இந்தியப்படைகளின் தாக்குதலுக்கிலக்காகிப் பெரும் இழப்புக்களைச் சந்தித்த இன்னுமொருவர் சிரித்திரன் சுந்தர். 1953இல் இவர் சிரித்திரன் இதழை ஆரம்பித்தார். மனித மேன்மை, சிந்தனை வீச்சு, புதுமையான கருத்துக்கள் என்பன சிரித்திரன் ஏட்டின் இலட்சியமாக இருந்தது. 1971இல் இவர் சிரித்திரன் பிரசுரத்தை யாழ்ப்பாணத்திற்கு மாற்றினார். 'கவின்' என்ற பெயரில் தமது சொந்த அச்சுக்கூடத்தில் பிரசுரம் செய்தார். 1987இல் இந்தியப் படையின் உளவுப் பிரிவினர் இவர் மீது குறி வைத்தனர். ஐ.பி.கே.எவ். படையின் அனுமதியோடு பத்திரிகை வெளியிட வேண்டும் என்ற கடுமையான உத்தரவை இவர் ஏற்க மறுத்தார். சிறந்த ஓவியரான சுந்தரின் படைப்புகள் உள்ளடங்கலாக, அவருடைய அச்சகம், உள்ளடங்கலான பெறுமதியான ஆவணங்கள், வீடு, வாசல், வீட்டுப் பொருட்கள் யாவும் இந்தியப் படைகளால் முற்றாக அழிக்கப்பட்டன. இந்தியர்கள் வெளியேறும் வரை சிரித்திரன் வெளிவரவில்லை.

*தேவைப்பட்டால் பத்திரிகை அலுவலகங்களைக் குண்டு வைத்துத் தகர்ப்பதற்கும் றோ அமைப்பினர் தயாராக இருந்தனர். இந்திய இராணுவம் செய்யும் அடாவடித்தனங்கள் வெளியுலகை எட்டாமல் தடுப்பதே றோவின் நோக்கமாக இருந்தது.*

ஏற்கனவே வகுக்கப்பட்ட திட்டப்படி இந்திய அமைதிப் படைத் தாக்குதல்களைத் தொடங்கு முன்பே தமிழர் பகுதிகளிலுள்ள ஊடகங்கள் மீது றோ உளவுத் துறையினர் கண் வைத்துவிட்டனர். தமிழர் பகுதிப் பத்திரிகைகளையும் பிற ஊடகச் சாதனங்களையும் சுயாதீனமாக இயங்க விடக்கூடாது என்பதில் அவர்கள் மிகவும் முன்ஜாக்கிரதையாகவும் உறுதியாகவும் இருந்தனர். தேவைப்பட்டால் பத்திரிகை அலுவலகங்களைக் குண்டு வைத்துத் தகர்ப்பதற்கும் றோ அமைப்பினர் தயாராக இருந்தனர். இந்திய இராணுவம் செய்யும் அடாவடித்தனங்கள் வெளியுலகை எட்டாமல் தடுப்பதே றோவின் நோக்கமாக இருந்தது. பின்பு நடந்த சம்பவங்கள் இந்த நோக்கத்தைத் தெளிவாக நிரூபிக்கின்றன.

ஏற்கனவே சிறீலங்கா இராணுவமும் சிறீலங்காப் பொலிசாரும் இணைந்து தமிழ் ஊடகத்திற்கு 1981ம் ஆண்டு மிகவும் பாரதூரமான அடியைக் கொடுத்தனர். இரு நாட்கள் இடைவெளியில் யாழ். பொது நூலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம், வணக்கஸ்தலங்கள், தனியார் வீடுகள், நூறு வரையிலான வர்த்தக நிலையங்கள் என்பன முற்றாகத் தீயிலிடப்பட்டன. ஆனால் முதற் பக்கச் செய்தியான இந்தத் திகிலூட்டும் நிகழ்ச்சிகள் கொழும்புப் பத்திரிகைகளிலோ சர்வதேசப் பத்திரிகைகளிலோ சிறிதளவேனும் வரவில்லை. சிங்கள ஆயுதப்படையினர் இறுக்கமான பூட்டைப் போட்டிருந்தனர். இதே உத்தியை இந்தியப்படைகளும் தமது ஆக்கிரமிப்பின்போது பின்பற்றினர்.

யாழ்ப்பாணத்தில் ஓர் ஆங்கிலப் பத்திரிகை இருப்பின் கொழும்புப் பத்திரிகைகளில் தங்கியிராமல் வெளியுலகுடன் தொடர்பு கொள்ளலாம் என்ற நோக்கில் ஜனவரி 1982இல் சற்றடே றெவியு (Saturday Review) என்ற செய்திப்பத்திரிகை யாழ். நகரில் தொடங்கப்பட்டது. இதற்கிருந்த வரவேற்பை நன்கு உணர்ந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசு அதை ஜூலை 01, 1983ல் தடை செய்து முற்றாக நிறுத்தியது. இலங்கைத் தமிழர்கள் மீது ஜூலை 1983ல் மிகப்பெரியதொரு இன அழிப்பை ஜெயவர்த்தனா அரசு நடத்தியது சற்றடே றிவியூ மீதான தடை ஒரு முன்னோடி நிகழ்ச்சி என்பது புலப்படும்.

சர்வாதிகாரிகள் மக்கள் வாயைப் பூட்டுவார்கள், அவர்கள் என்னத்தைப் பேச வேண்டும், படிக்க வேண்டும், எழுத வேண்டும் என்பதை தீர்மானிப்பார்கள். தமிழர்கள் பகுதியில் இந்தியர்கள் நிறுவிய இராணுவ ஆட்சியிலும் இதுவே நடந்தது. அந்தக் காலத்தில் பூட்டிய அறையினுள் இருந்தவாறு தமிழ் மக்கள் பகிரங்கமாகப் பேசுவார்கள். இந்திய இராணுவ ஆட்சிக்கு முதற்பலியான தமிழ்ப் பத்திரிகை யாழ். நகரின் ஈழமுரசு தினசரி என்பது வரலாறு. அலுவலகம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டாலும் தலைமறைவாகிய ஆசிரியபீடம் மூன்று மாத காலமாக ஈழமுரசு பத்திரிகையை வெளியிட்டனர். அதற்குமேல் அவர்களால் இயலவில்லை. ஒரு தலைமறைவுப் பிரசுரம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மூன்று மாத காலம் வெளிவருவது வியப்பூட்டும் சங்கதி என்பதை வாசகாகள் அறிவர்.

### ஒப்பரேசன் பவான்

*ஒப்பறேசன் பவான்* ஒக்ரோபர் 10, 1987ல் தொடங்கப்பட்டது. ஆயுத நடவடிக்கை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களையும் நோக்குடன் பவான் ஆரம்பிக்கப்பட்டது. ஆயுத நடவடிக்கை தொடங்குமுன் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இயங்கிய ஊடகத்துறையை முற்றுமுழுதாக அழிக்கும் நடவடிக்கையை இந்திய இராணுவமும் றோ உளவுப் படையும் கூட்டாக மேற்கொண்டன. இது பவான் தொடங்குவதற்குச் சில மணிநேரம் இருக்கும்போது நிறைவேற்றப்பட்டது. ஈழமுரசு, முரசொலி ஆகிய நகர்ப்புறப் பத்திரிகைகளின் அலுவலகங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. எந்திர சாதனங்களும் இவ்வாறே அழிக்கப்பட்டன. அங்கு கடமையாற்றிய பத்திரிகையாளர்களும் வேறு பணியாளர்களும் கைது செய்யப்பட்டனர். தப்பியோடியோர் தலைமறைவு வாழ்க்கைக்குச் சென்றனர்.

1985ல் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான கேணல் கிட்டு *(சதாசிவம் கிருஸ்ணகுமார்)* புலிகளின் குரல் வானொலியை ஆரம்பித்தார். நிதர்சனம் என்ற பொது அமைப்பின்கீழ் புகைப்படப்பிரிவு, வானொலி, தொலைக்காட்சிச்சேவை என்பனவற்றை அவர் ஆரம்பித்தார். இந்த நிலையங்கள் யாவும் மேற்கூறிய நடவடிக்கையில் சிதைக்கப்பட்டன. தொலைத் தொடர்பு வசதிகள் அதாவது தொலைபேசி இணைப்புக்கள் உள்ளடங்கலாக, அனைத்தும் துண்டிக்கப்பட்டன. வாடகைக்கு வீடியோப் படங்களை வழங்கிய கடை உரிமையாளர்களின் கைகளைப் பின்புறமாகக் கயிற்றினால் கட்டித் தெருவால் இழுத்துச் சென்றனர். இக்காட்சிகளைக் கண்டவர்கள் இன்றும் உயிரோடு இருக்கின்றனர்.

பவான் நடவடிக்கை கூடியது மூன்று நாட்களில் முடிந்துவிடும் என்று திட்டமிட்டது. ஆனால் அது முடிவுற இரு வாரங்கள் எடுத்தன. புலிகளுக்கு எதிராகத் தொடங்கிய நடவடிக்கை தமிழர்களுக்கு எதிராக திருப்பப்பட்டது. சிங்கள இராணுவம் மேல் என்னுமளவிற்கு இந்தியர்களும் அவர்களுக்குத் துணைபோன துரோகக் கும்பல்களும் நடத்திய வன்முறைகள் தமிழர் பகுதிகளில் விரிவடைந்தன. இந்தியப் பிரச்சார ஊடகங்கள் மூடிமறைப்பையும், புலிகளுக்கும் தமிழர்களுக்கும் எதிரான பரப்புரைகளையும் மேற்கொண்டன. வான் அலைகளை இந்தியப் படைகளும் கொழும்பு அரசும் கூட்டாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தன.

பலாலி விமானத் தளத்தில் இந்தியர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சிச் சேவை ஒன்றை நடத்தினர். இவை இந்தியப் படைகளின் இராணுவ வெற்றிகளை




வானளாவப் புகழ்ந்து பாராட்டின. புலிகளின் இழப்புக்களைப் பன்மடங்காக விரித்துக் கூறின. தென்கச்சி சுவாமிநாதன் என்ற பிரச்சாரப் பீரங்கியைத் தமது பிரசாரத் தேவைக்காக இந்தியப்படைகள் தருவித்தன. இவர் 'இந்தியப் படைகள் அலை அலையாக வருவார்கள். இறந்த படையினரை மிதித்துக் கொண்டு முன்னேறுவார்கள். யாருமே 'அவர்களைத் தோற்கடிக்க முடியாது' என்ற அடிப்படையில் பிரசாரம் செய்தார். இந்தியப்படை பிரசன்னத்தின் முக்கிய அங்கமாக அவர்கள் நடத்திய பிரசாரம் அமைந்தது. படையினரின் மனவுறுதி தளராமல் இருப்பதற்காகவும் அவர்கள் பிரசாரம் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்தது. இந்தியப் படைகள் விட்ட இமாலயத் தவறுகளில், பிரசாரத்தின் மூலம் தமிழ் மக்களையும், புலிகளையும் ஏமாற்றலாம் என்ற தவறான நம்பிக்கை முதலிடம் வகிக்கின்றது.

நவம்பர் 1988 இந்திய இராணுவமும் உளவுத் துறையும் இணைந்து வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களை நடத்தின. மோசடிகள் நிறைந்த இத்தேர்தல் கேலிக்கூத்தாக அமைந்தது. தமது அடிவருடிகளான ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியினர் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கில் இந்திய இராணுவம் நடத்திய தேர்தல் கூத்துகள் அராஜகத்தின் எல்லையைத் தொட்டன. மக்கள் ஆதரவு சிறிதளவேனும் இல்லாத ஈ.பி.களை ஏகமனதாக வெற்றி பெறச்செய்வதற்காக இந்திய இராணுவம் செய்த தில்லுமுல்லுகள் சொல்லில் வடிக்க இயலாதவை. மடியில் ரூபா ஆயிரம் வைத்திருப்போர் ஒருவரும் யாழ்ப்பாணக் 'கச்சேரி' அதாவது செயலகத்திற்கு அருகாமையில் நடமாட அனுமதிக்கப்படவில்லை. கட்டுப்பணமாக ரூபா ஆயிரத்தையும் செலுத்தித் தேர்தலில் நின்றுவிடுவார்களோ அச்சம் இந்திய இராணுவத்திற்கு.


(இன்னும் வரும்)

## மனைவியை அடித்தவருக்கு 300 சவுக்கடிகள்!

மனைவியை அடித்து 300 சவுக்கடிகளுக்கு இலக்காகியிருக்கிறார் சவுதி நாட்டு பிரஜை ஒருவர். சவுதி அரேபியாவைச் சேர்ந்தவர் ரெனியா அல் பஸ். அந்நாட்டுத் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளராகக் கடமையாற்றுகிறார். இவரது கணவர் முகமது பக்கர் அல் பல்லாட்டா. இவருக்கும் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் முகமது பக்கர், மனைவியை அடித்து உதைத்தார். அவரது முகத்தைச் சுவற்றில் மோதச் செய்தார். இதில் மூக்கு உடைந்து, கன்னத்து எலும்புகளும் முறிந்தன. மயங்கிக் கீழே விழுந்த ரெனியாவை ஜெட்டாவில் உள்ள வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டுக் கணவர் தலைமறைவாகிவிட்டார். மனைவி மருத்துவமனையிற் கடந்த இரு மாதங்களாகத் தீவிர சிகிச்சை பெற்றுவருகின்றார்.

முகத்தில் 13 இடங்களில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 2 மாதங்கள் ஆகியும் இன்னும் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் அவர் முழுமையாகக் குணமடைய 70 சதவீத வாய்ப்பே இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் தலைமறைவாக இருந்த அவர் கணவர் அண்மையில் காவற்துறையினரிடம் சரணடைந்தார். இவர் மீது கொலை முயற்சிக் குற்றஞ்சாட்டிக் காவற்துறையினர் வழக்குத் தாக்கல் செய்தனர். எனினும் பின்னர் அது மாற்றப்பட்டு மனைவியைத் தாக்கியதாக வழக்குத் தொடரப்பட்டது. இவரது வழக்கை விசாரித்த நீதிபதிகள், 300 சவுக்கடிகள் கொடுக்கும்படியும் ஆறு மாதம் சிறையில் அடைக்கும்படியும் தீர்பு வழங்கினர்.



சீனாவின் கிழக்குப் பகுதியின் ஹான்சூ நகரில் ஒரு வாரமாக மிகப்பெரும் இசைவிழா ஒன்று நடைபெற்றது. இவ்விழாவின் நிகழ்வொன்றில், சுமார் 160 பியானோ இசைக் கலைஞர்கள் பிரமாண்டமான வெளியொன்றில் ஒன்றாக இணைந்து இசை வழங்கினர். பியானோக்களுடன் அதன் கலைஞர்கள் இருப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.

## அந்தரத்தில் கார் ஓடும் ஜேர்மனியர்!



ஜேர்மனி நாட்டவரான அக்ரோபட் ஜோஹான் த்ராவர் என்பவர் சாகசகங்கள் நிகழ்த்துவதில் வல்லவர். அண்மையில் தனது சாகசம் ஒன்றை ஜேர்மனியின் ஸ்ருட்காட் நகரில் நிகழ்த்திக்காட்டியுள்ளார். அந்நகரில் அமைந்துள்ள தொலைக்காட்சி நிலையக் கோபுரத்தில் இரு முனைகளுக்கு இடையே (சுமார் 53 மீற்றர் உயரத்தில்) கம்பியிலான இணைப்பு ஒன்றை ஏற்படுத்தி அதன் மீது தனது காரைச் செலுத்திச் சாதனை படைத்திருக்கின்றார்.

அந்தரத்தில் நின்ற அந்தக் காரின் மீது கைகளை ஊன்றியபடி தலை கீழாக நின்று காண்பித்தார். பின்னர் காரை இயக்கி ஒரு முனையில் இருந்து மறு முனை வரைக்கும் செலுத்தி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

# பலவும் பத்தும்

## குடிபோதையில் 3 வார்த்தைகள்

### பிரிந்தது குடும்பம்!

முஸ்லீம்கள் விவாகரத்துப் பெறுவதாயின் மூன்று தடவைகள் 'தலாக்' என்று கூறினால் அவர்கள் பிரிந்து செல்லாம் என அவர்களின் மதச்சட்டம் கூறுகின்றது. ஒரு கணவன் தன் மனைவியிடம் 'தலாக்' என்று மூன்று முறை கூறினால் விவாகரத்து ஆகிவிடும். ஆனால் இந்தியாவில் குடிபோதையில் கணவன் 'தலாக்' கூறியதால் மனைவியுடன் சேர்ந்து வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஒரிசா மாநிலம் பாட்ராக் நகருக்கு அருகில் உள்ளது கன்டாபனியா என்ற கிராமம். இங்கு வசித்து வருபவர் ஷேர்அலி. இவரது மனைவி நஜ்மா பீவி. இவர்களுக்கு திருமணமாகி 12 ஆண்டுகள் ஆகின்றன. 4 குழந்தைகளும் உள்ளனர்.

ஷேர் அலிக்குக் குடிப்பழக்கம் உண்டு. சில வாரங்களுக்கு முன்பு அலி குடிபோதையில் வந்து மனைவியுடன் தகராறு செய்தார். அப்போது அவர் தனது மனைவியை 'தலாக்' என்று மூன்று முறை கூறி விவாகரத்துச் செய்தார்.

குடிபோதையில் 'தலாக்' கூறிய பிறகு கணவன் - மனைவி இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். சில நாட்கள் கழித்து மனம் மாறிய அலி குடிபோதையில் செய்த தவறை உணர்ந்து மனம் வருந்தினார். மனைவியுடன் சேர்ந்து வாழ விரும்பினார். குடிபோதையில் 'தலாக்' கூறியதால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று சிலர் கூறியதால் கணவன் - மனைவி இருவரும் சேர்ந்து வாழலாம் என்று கூறப்பட்டது. ஆனால் முஸ்லிம் மதத் தலைவர்கள் இதை ஏற்க மறுத்து விட்டனர். "விவாகரத்துச் செய்த மனைவியை கணவன் மீண்டும் திருமணம் செய்ய வேண்டும் என்றால் அந்தப் பெண் முதலில் இன்னொருவரை மணக்க வேண்டும். பின்னர் அந்த நபரிடம் இருந்து விவாகரத்துப் பெற்ற பிறகே தனது முதல் கணவரை மணக்க முடியும்" என்று விதிகளைக் குறிப்பிட்டு மதத்தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்தப் பிரச்சினை குறித்து மனித உரிமை ஆணையகத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

வார்த்தையை அளந்து கதைத் திருந்தால் ஏன் இந்த வம்பு?

## கணவனைக் கொன்று தின்ற பெண்

உறங்கிக்கொண்டிருந்த கணவனைக் கொன்று, 'பிரஷர் குக்கரில்' வைத்து அவித்துத் தின்ற சம்பவம் ஒன்று நேபாள நாட்டில் நடந்துள்ளது. நேபாளத்தின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள மிரிகோரியா என்ற கிராமப்புறத்தில் வசிக்கும் நான்கு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு கணவனைக் கொன்று சமைத்துச் சாப்பிட்டுள்ளார்.

பெண்ணின் பெயர் இந்திரா கிளிமரே. இவளது கணவன் பெயர் கோபி கிருஷ்ணா (48). இவர்களுக்கு 3 மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். கோபி கிருஷ்ணா, நேபாள நாட்டின் உணவுக் கழகத்தில் கடை நிலை ஊழியராக வேலை பார்த்து வந்தார்.


கடந்த மே 25ம் திகதி இரவு இந்திரா கிளிமரே, உறங்கிக் கொண்டிருந்த கணவனின் கழுத்தைக் கத்தியால் வெட்டி, ஒரு பாத்திரத்தில் இரத்தத்தைப் பிடித்தாள். உயிர் அடங்கியதும், உடலின் முக்கிய பாகங்களை வெட்டி 'பிரஷர் குக்கரில்' வைத்து அவித்து, 5 நாட்களாக வீட்டின் கதவைத் திறக்காமல் கணவன் உடலை சாப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதால், அக்கம் பக்கத்தினர் காவற்துறையினருக்குத் தகவல் கொடுத்தனர். பெற்றோரைக் காணாத பிள்ளைகளும் காவற்துறையினருக்குப் புகார் கொடுத்தனர். இறுதியில், கதவை உடைத்து உள்ளே சென்ற காவற்துறையினர், வெறிபிடித்த நிலையில் இருந்த பெண்ணைக் கைது செய்து மனநல வைத்திய சாலைக்கு அனுப்பிவைத்தனர். அத்துடன் அங்கிருந்து எலும்புத் துண்டுகளையும் இரத்தம் நிரம்பிய பாத்திரம் ஒன்றையும் கண்டெடுத்தனர்.

## அல்ஜீரியர்கள் குஸ்குஸ் சாதனை!

அல்ஜீரிய மக்கள் குஸ்குஸ் என்ற உணவைத் தயாரிப்பதில் பிரபல்யமானவர்கள். எமக்குச் சோறு எவ்வாறு தேசிய உணவோ, அதுபோல் அல்ஜீரிய மக்களுக்கு குஸ்குஸ் முக்கிய உணவு வகையாக உள்ளது. இந்த உணவைத் தயாரிப்பதில் அல்ஜீரியர்கள் உலக சாதனை ஒன்றைக் கடந்த வாரம் நிகழ்த்தியுள்ளனர். மிக அதிகளவான குஸ்குஸ்சைத் தயாரித்து உலக சானை நூலான கின்னசில் இடம்பெற்றுள்ளனர்.

அல்ஜீரியாவின் முக்கிய நகரங்களில் ஒன்றான கபைலி என்ற இடத்தில் கடந்த 3ம் திகதி நிகழ்ந்த இந்தச் சாதனையில் 6500 கிலோ நிறையுள்ள குஸ்குஸ்



தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2600 கிலோ கோதுமைக் குறுனல் (ரவை போன்றது, சற்று தடிப்பானது), 100 ஆடுகளின் இறைச்சி மற்றும் 1.5 தொன் மரக்கறி என்பன உபயோகிக்கப்பட்டுள்ளன.

பிறிது பிறிதாக தயாரிக்கப்பட்டு இதற்காக உருவாக்கப்பட்டிருந்த மிகப்பெரிய தோம்பு ஒன்றில் போடப்பட்ட இக் குஸ்குஸ் 4.3 மீற்றர் விட்டம் கொண்டதாகவும், 8 மீற்றர் உயரம் கொண்டதாகவும் இருந்துள்ளது. இந்த உணவு சுமார் 22,000 பேர் உண்பதற்குப் போதுமானது என தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் 2000 கிலோ குஸ்குஸ் தயாரித்து துனிசியா நாட்டவர்கள் கொண்டிருந்த சாதனையை 6500 கிலோ தயாரித்து அல்ஜீரியர்கள் முறியடித்துள்ளனர்.



INDIAN ASTROLOGER

# சாய்பாபா

ௐ

# Laxmi Kanthswamy

**பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.**

எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்றுதலும் செய்து தருவோம்.

**சந்திக்குமிடம்:**
**(West London) South hall**
**Contact:**
**Tel: 07932724065 / 07939613067**

## விரைவில்



களத்திலிருந்து
போராளி
ஆனதி எழுதும்

# விடுதலையின் வீச்சும் வீரச் சாவுகளும்

நெஞ்சைப் பிழியும் உண்மைச் சம்பவங்களின் தொடர்....

# ஜதீஸ்வரா இசைக்குழு



உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கு
இசைமழை பொழிந்து
சிறப்பித்திட என்றென்றும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
அருமை – 0664866681
மாறன் – 0664447207
குகானந்தன் – 0664819995

Pub-Fr-506

# துயர்துடைப்பு நாட்கள்-2004

ஜூன் 01 முதல் ஜூலை 05 வரை

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்சு
Organisation Pour La Réhabilitation Des Tamouls
26, Rue Du Département, 75018 Paris, France.Tél/Fax:01 40 38 30 74
e-Mail:trofrance@trofr.com - web:http://www.trofr.com

7வது தடவையாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்ஸ் நடாத்தும் மாபெரும்



# தமிழர் விளையாட்டு விழா - 2004

## GRANDE RENCONTRE SPORTIVE - TAMOULE

மைதான
நுழைவுச் சீட்டுடன்
பெறுமதிவாய்ந்த பரிசுப்பொருட்கள்
காத்திருக்கின்றன!

# 27-06-2004

**ஞாயிறு காலை முதல் மாலை வரை**
**பரந்த le Bourget மைதானத்தில்!**




மணக்க மணக்க
சுடச்சுட
தாயகத்து
சுவையுடன்
ஒடியல் கூழ்
கொத்துரொட்டி
இன்னும்
பலவகைச்
சிற்றுண்டிகளுடன்



# தமிழீழ உணவகம்

*"புல்வெளியில் அமர்ந்து ஊர்க்கதை பேசிக் கூடிக் கூழ்குடித்து கும்மாளமிட்டு, மண்மணம் வீசும் பாரம்பரிய விளையாட்டுக்களுடன் மன மகிழ்வூட்டும் தமிழர் விளையாட்டுவிழா!"*

*L'Aire de Vents (Dugny)*
*Parc Départemental de la courneuve*
*Accès*
*Autoronte A1-Sortie LE BOURGET Direction DUGNY Centre*
*R.E.R (B) LE BOURGET Autobus 133 Arrêt de bus - LA COMÈTE*



தொடர்புகட்கு: *ORT France , 26 rue du Départment , 75018 Paris.Tél/Fax:01 40 38 30 74 , E-mail:trofrance@trofr.com , web:www.trofr.com*

# கேணல் கிட்டுப் பீரங்கிப் படையணிக்குப் பெருமை தேடிக்கொடுத்த 'மேஜர் நிர்மலா'



மாந்தோப்புகளிடையே மந்திகள் தாவித் திரிய வெள்ளலைகள் வந்து தாலாட்டும் வடதமிழீழத்தின் முத்தாய் விளங்கும் மன்னாரின் செல்வங்கள் பல நிறைந்து செழிக்கும் சிற்றூரான தம்பிராய் என்ற கிராமத்தில் செல்வரத்தினம்-புவனேஸ்வரி தம்பதிகளுக்கு மூத்த புதல்வியாக விடியலின் பூபாளமாய், விடுதலையின் புயலாய் தமிழீழ மண்ணில் பிறந்தாள். இவளுக்கு விஜயலட்சுமி என்று பெயரிட்டுப் பெற்றோர் அன்பாக வளர்த்து வந்தனர். இவளுக்கு சகோதரர்கள் அதிகம். எல்லோருடனும் அன்புள்ள அக்காவாய் தங்கையாய் இருந்தாள் லட்சுமி.

இவள் தனது ஆரம்பக் கல்வியை மன்னாரிலுள்ள பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தில் ஆண்டு 01 தொடக்கம் 11 வரை படித்தாள். உயர்தர வகுப்பைக் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தில் கற்றாள். படிப்பில் நல்ல கெட்டிக்காரி. எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பாள் விஜயலட்சுமி. நேரத்தைப் பொன் போல நினைப்பவள். எந்நேரமும் ஏதாவது வேலையில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பாள்.

பாடசாலையிலும் மாணவர்களோடு பண்பாகப் பழகுவாள். ஆசிரியர்கள் மத்தியிலும் இவளுக்கு நல்ல மதிப்பு இருந்தது. விஜயலட்சுமி தனது வீட்டிலும் எல்லா வேலைகளையும் செய்வாள். இப்படியாக வாழ்ந்து வரும் காலப்பகுதியில் சிங்கள இனவெறியாளர்களின் கொடிய ஆட்சியால் எம்மண் மிகவும் அல்லோல கல்லோலப் பட்டது. சிறீலங்கா ஆட்சியில் தமிழீழ மண்ணில் பல வேதனை மிகுந்த சம்பவங்கள் அரங்கேறின. தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வந்தனர். இவற்றைத் தணிக்க இளைஞர் கூட்டம் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கி இருந்தனர். விஜயலட்சுமியும் இதில் கவரப்பட்டவளாய் தாய் நாட்டின் விடுதலையை எண்ணிக் கொண்டாள்.

1995ம் ஆண்டில் தன்னையும் ஒரு விடுதலைப் போராளியாக இணைத்துக் கொண்டாள். இவள் தனது ஆரம்ப அடிப்படைப் பயிற்சியை யாழ். மாவட்டத்தில் இருபாலையில் அமைந்திருந்த டொச்சன் பயி-ற்சி முகாமில் எடுத்தாள். பயிற்சிகளின் போது தன்னை வருத்தி மிகவும் ஆர்வமுடன் பயிற்சியை எடுப்பாள். பயிற்சியோடு அங்கே கற்பித்தல் செயற்பாடுகளும் இடம்பெறும். அப்போதெல்லாம் பயிற்சி களைப்பைக் கொடுத்தாலும் படிப்பில் அக்கறையாய் இருந்து கற்றுக் கொள்வாள். தன்னுடைய பெயரை நிர்மலா என்றும் மாற்றிக் கொண்டாள். பயிற்சிப் பாசறையில் இவளுக்கு இடப்படும் பணிகளை விருப்போடு செய்து முடிப்பாள். பயிற்சி ஆசிரியர்களால் இவள் பல தடைவைகள் பாராட்டுப் பெற்றுள்ளாள்.

பூங்கொடியாய் வீட்டில் ஆடி அசைந்து திரிந்தவள் புலியாக மாறி புயலாய் தாய் நாட்டின் விடுதலையில் வீசினாள். தாய், தந்தை, சகோதரர் என்று இருந்த உறவு இப்போது விரிந்து நாடு, தலைவன், போராளிகள், மக்கள் என்று எல்லை கடந்து பரந்து விரிந்திருந்தன. சக போராளிகள் மத்தியில் எமது நாட்டைப் பற்றியும், நாட்டை வழி நடத்தும் தலைவரைப் பற்றியும் கதைத்துக் கொண்டே இருப்பாள் நிர்மலா. போராளிகளோடு அன்பாகப் பழகுவாள். பிறரின் துயரத்திலும் பங்கேற்பாள். சந்தோசமான கதைகளைக் கூறி அனைவரையும் மகிழ்விப்பாள். தானும் எப்போதும் சுறுசுறுப்பான தன்மையுடன் இருப்பாள்.

இவள் விடுதலைப் புலியாய் மாறிய பின்பு அங்கே 60 மில்லி மீற்றர் மோட்டார் பயிற்சியை 2 வருடம் கற்றாள். அத்தோடு 81-82 மில்லி மீற்றர் மோட்டார்ப் பயிற்சியை 3 மாதம் கற்றுத் தேறினாள். இவற்றோடு 120 மில்லி மீற்றர் பயிற்சியை 2 வருடம் பயின்றாள். பயிற்சிகள் கடினம் தான், எனினும் சளைக்கவில்லை இவள் உள்ளம். மிகவும் ஆர்வத்தோடும் விருப்போடும் பயிற்சிகளைப் பெற்றுச் சிறந்த முறையில் எறிகணைகளை ஏவக்கூடிய விடுதலைப் போராளியாகத் தெரிவு பெற்றாள் நிர்மலா.

நிர்மலா மகளிரின் பயிற்சிப் பாசறை 32ல் பயிற்சி எடுக்கும்போது கப்டன் சந்திரமதியினால் வளர்த்தெடுக்கப்பட்ட விடுதலைப்புலி. பயிற்சிப் பாசறையில் இடப்பட்ட அத்திவாரம் உறுதி பெற்றுச் சண்டைக் களங்களில் அதன் பலனை எடுத்தியம்பியது. இதற்கு ஈடாக நிர்மலா விளங்கினாள். சண்டைக்குப் போய்ச் சாதனை படைப்பதே புலிகளின் இலட்சியம். இந்த வகையில் இவளது சண்டைக்களம் கன்னிக் களமாக விரிந்தது. யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர்-01 எதிர் முறியடிப்புச்சமரே இவளது முதற் களச்சண்டையாகும்.




இதன் பின்னர் இவள் மகளிரின் பெருவிருட்சமாய் விளங்குகின்ற மாலதி படையணியில் இணைந்து கொள்கிறாள். மோட்டார் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்ட இவள் 60 மில்லிமீற்றர் மோட்டாரோடு சூரியக்கதிர்-02 எதிர் முறியடிப்பச் சமருக்குச் சென்றாள். பின் இவளின் வீரச்சுவடுகள் பதிந்த களங்களாக முல்லைத்தீவு, சத்ஜெய எதிர்முறியடிப்புச் சமர்க்களம், ஜெயசிக்குறு எதிர் முறியடிப்புச் சமர்ாக்களம் என்பவற்றை வகைப்படுத்தலாம்.

விடுதலைச்சுமை ஒருபோதும் நிர்மலாவைச் சுமைதாங்கி ஆக்கியதில்லை. 1988ல் இவள் கேணல் கிட்டு பீரங்கிப் படையணிக்கென பொறுப்பாளரால் தெரிவு செய்யப்பட அந்தப் படையணியில் சேர்ந்து கொண்டு தனது சண்டைத் திறமைகளை வெளிப்படுத்தினாள். அங்குதான் 120 மில்லி மீற்றர் மோட்டார் பயிற்சியைப் (தொடர்ச்சி 26ம் பக்கம்)

# உள்ளொளி

## என்னோடு நான்

### கந்தையா நவரேந்திரன்

ஒளி இருளை ஒழிக்கும். எம்முள் இருக்கும் ஒளியை உள்ளொளி என்றும், எமக்கு வெளியே இருக்கும் ஒளியைப் புற ஒளியென்றும் அழைக்கின்றோம். இருளிலும் இரு வகைகள் உள்ளன. எமக்குள் இருக்கும் இருள் அக இருள் என்றும், எமக்கு வெளியே இருக்கும் இருள் புற இருளென்றும் சொல்கின்றோம். புற ஒளி- புற இரு-ட்டை மறையச் செய்யும். உள்ளொளி அக இருளை நீக்கும். புற இருள் நீங்கினால் எம்மைச் சூழ்ந்திருக்கும் உலகில் வெளிச்சம் தோன்றும். புற இருளைப் புற ஒளியால் எப்பொழுது வேண்டுமானால் நாங்கள் நீங்கச் செய்யலாம். ஆனால் உள்ளொளி, உள் இருள் நீங்கினால் மட்டுமே பிரகாசிக்கும். ஆங்கிலத்தில் 'prince of darkness' - 'இருளின் இளவரசன்' என்று ஒரு சொற்றொடர் வழக்கத்தில் உள்ளது. நரகத்தின் தலைவனையே அந்தச் சொற்றொடரால் குறிப்பிடுகிறார்கள். எனவேதான் இருளை நரகமாகவும் ஒளியைச் சுவர்க்கமாகவும் குறிப்பிடுகிறார்கள். சுவர்க்கமும் நரகமும் இருக்கும் இடம் மனித மனமேயாகும். எனவேதான் சுவர்க்கத்தை நரகமாக்குவதும். நரகத்தைச் சுவர்க்கமாக்குவதும் மனிதனே என்ற யதார்த்தத்தை நாம் உணர்ந்துள்ளோம். சுவர்க்கம் மேலே உள்ளதென்றும், நரகம் கீழே உள்ளதென்றும் கூறுவது மதத்தைப் பரப்புபவர்கள் அவிழ்த்துவிட்ட ஏமாற்று வித்தைகளுள் ஒன்று. சுவர்க்கம் மேலானது. நரகம் கீழானது என்பதைத்தான் திசைகாட்டிக் கூறினார்கள்.

எந்தச் சடப்பொருளும் (matter) வெளியைக் (space) கொண்டிருக்கும். சடப் பொருளுக்கான வெளியைக் கொண்டிருத்தல் என்ற தனியான இயல்பு ஒளிக்குண்டு என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இருளைப் பருப்பொருள் இல்லை என்று ஒரு சாராரும், அது பருப்பொருளே என இன்னொரு சாராரும் கூறுகின்றனர். தத்துவஞானிகளோ இருளைப் பொருள் என்கின்றனர். விஞ்ஞான ஆராய்ச்சிகள் யாவுமே பொதுவாகச் சடப்பொருள் என்ற அளவோடு நின்றுவிடும். அதற்கு அப்பால் அவை செல்வதில்லை. இருள் ஒரு நிலையில் பொருளாகவும், இன்னொரு நிலையில் பொருள் அல்லாத ஒன்றாகவும் தோன்றும் தன்மை கொண்டது. ஒளி இருக்கும் போது இருள் இருப்பதில்லை. இருள் இருக்கும்போது ஒளி இருப்பதில்லை. இருளில் ஒளியின்மை எங்கும் படந்திருக்கும். ஒளியில் வெளிச்சம் எங்கும் படந்திருக்கும். இருளில் பார்ப்பதற்கு எமக்கு ஒளியின் உதவி தேவைப்படுகிறது. சூரியனின் படரொளியில் இருளானது பிரிந்து கலைந்து மறைந்து போய்விடுகிறது. புற இருள் கண்ணுக்கு ஒளியின்மையாகத் தெரியும். அக இருளை அவர் அவராலேயே உணர முடியுமே தவிரப் பார்க்க முடியாது. எமது மனத்தின் இருள் எமது அறியாமையால் ஏற்பட்டது. அறியாமை நீங்க உள்ளொளி சுடரும். உள்ளொளி தோன்ற ஏற்கெனவே அகத்தில் மண்டிக்கிடந்த அறியாமைக்கு என்ன நிகழ்ந்தது என்ற ஆராய்ச்சியில் நாம் ஈடுபடத் தேவையில்லை. ஏனெனில் அது ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டது. இருளைப்பற்றிக் கருத்தோ கோட்பாடோ எடுகோளோ எம்முள் உருவாக்கினோமேயானால் அது எம்மகத்தில் மேலும் மேலும் இருளைத்தான் கவ்வச்செய்யும்.

புறவொளியை நாம் மின்னொளியாய், பகலொளியாய், விளக்கொளியாய், சூரியவொளியாய், நிலவொளியாய், மின்னும் நட்சத்திரவொளியாய்க் காண்கின்றோம். சூரியனின் தோற்றத்திற்கு முன் கிழக்கிலும், சூரியனின் மறைவுக்குப் பின் மேற்கிலும், சில சமயங்களில் காணப்படும் நெடிய முக்கோணம் போன்ற வான் ஒளிப்பரப்பையும் காண்கின்றோம்.

புறவொளியை மண்ணிலும், புனலிலும், வளியிலும், வெளியிலும் காண்கின்றோம். புறவொளி அறிவற்றது. எனவே அது வெறும் சடம். புறவொளிக்கு ஆதாரமே எமது அகவொளியே. இந்த உள்ளொளியைப் பரவொளி என்றும் பரவெளி என்றும், இது. மனத்தையும், மனம் என்னும் எண்ணத்தையும், மனம் இயங்கிக்கொண்டிருக்கும் கோளப்பாதையையும் ஊடறுத்துக் கடந்து உள்ளே உள்ளதால் கடவுள் என்றும் கூறுவர். இந்த உள்ளொளி முழுமையான நுண்ணறிவேயாகும். நுண்ணறிவு (intelligence), அறியாமை முற்றாக நீங்கிய நிலையிலேயே சுடரும். அறியாமை நீங்கிய நிலையைத் தத்துவஞானிகள் `சித்' என்பர். சடம் என்ற உடம்புக்கும் `சித்' என்ற முழுமையான நுண்ணறிவுக்கும் இடைப்பட்டு இருப்பதே உயிர். அறிவற்ற புறவொளியாகிய சடத்திற்கும், அறியாமை அழிந்த `சித்' க்கும் இடையிலேயே மனிதனுடைய உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறது. உயிர் சடத்தைச் சாரும் போது அது சடலமாகவும், உயிர் `சித்' ஐச் சாரும்போது அது `சித்' ஆகவும் நிலைகொள்ளும். உயிர் எதனைச் சாருகிறதோ அது அவ்வயமாகவே ஆகும். உயிர் `சித்' ஆக இருக்கும்போது. இருளினால் விழுங்கப்படுமேயானால் அது அறியாமையால் ஆட்கொள்ளப்பட்டதாய்க் கொள்ளப்படும். உயிரை இருள் சூழ்ந்திருக்கின்றது என்றால் அங்கே அறியாமை மேலோங்கியிருக்கின்றது என்றுதான் பொருள். இந்த அறியாமை பல உருவங்களைப் படைக்கும் வல்லமை கொண்டது. ஆணவம், 'தான்' என்ற முனைப்பு, ஆசை, பற்று, பாசம், மூடநம்பிக்கை, சடங்கு, தெய்வங்கள், மதங்கள், அவித்தை போன்றவற்றைப் படைக்கும் மாஆற்றல் அறியாமையென்னும் இருளுக்கு உண்டு. அவ்விருளுக்குள் எழுப்பப்படும் இத்தகைய பிரமாண்டமான கட்டுமானங்களின் எண்ணியாங்கு எய்து சிப்பி என்னுள் இருக்கும் `நான்' தான்.

> **சுவர்க்கமும் நரகமும் இருக்கும் இடம் மனித மனமேயாகும். எனவேதான் சுவர்க்கத்தை நரகமாக்குவதும். நரகத்தைச் சுவர்க்கமாக்குவதும் மனிதனே என்ற யதார்த்தத்தை நாம் உணர்ந்துள்ளோம். சுவர்க்கம் மேலே உள்ளதென்றும், நரகம் கீழே உள்ளதென்றும் கூறுவது மதத்தைப் பரப்புபவர்கள் அவிழ்த்துவிட்ட ஏமாற்று வித்தைகளுள் ஒன்று.**


அகத்தைப் பொறுத்தமட்டில் சூதுவாதற்ற குழந்தையாகவே நாம் பிறக்கின்றோம். சூழல்களின் திணிப்பால், சமுதாயக்கட்டுப்பாடுகளின் வரையறுப்பால் எமது அகத்திற்குள் இருள் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புகுந்து விடுகின்றது. இந்த அறியாமை இருள் எங்களை ஆட்கொள்ள வைத்தவர்கள் நாமே. ஒளி-இருள்போல், நினைப்பும்-மறப்பும், நுண்ணறிவும்-அறியாமையும் உள்ளன. உள்ளொளியும் நுண்ணறிவும் ஒன்று. அக இருளும் அறியாமையும் ஒன்று. முழுமையாக நுண்ணறிவையே ஞானம்பெற்ற நிலையென்பர். இந்த ஞானம் அடைந்த நிலையை-ஐயந்தெளிந்த நிலையை- தப்பெண்ணம் அகற்றப்பட்ட நிலையை, அறியாமையிலிருந்து பக்கச் சார்பிலிருந்து, மூடநம்பிக்

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

## வாரபலன்
### சிறீலங்கா அரசு

அட்டமத்துச் சனியான
ஜே.வி.பியுடன் செவ்வாயான குழப்பீசியா நோய் பரப்பும்
ஈ.பி.டி.பி.யும் ஒரே கூட்டில் கூடியிருப்பதால் தொட்டதுக் கெல்லாம்
குழப்பமும் தடையும் இடைஞ்சலும் இருக்கும். சனி ஒத்து வந்தாலும்
செவ்வாய் பின்னால் இருந்து தூண்டிக் கொண்டிருக்கும். 'வேலியிலை போன
ஓணானை மடியிலை பிடிச்சுவிட்ட கதையாய்' தான் உங்கடை பாடு இருக்கும். வீரவன்சா வெளியடும் பிதற்றலிசத்தை
உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிட்டால் நிலைமை மோசமாகிவிடும்.
கடந்த வாரம் பெல்ஜியத் தலைநகர் பிரஸ்ஸல்சில் கூடிய நவக்கிரக மாநாட்டு முடிவு, கவலைக்கு மேல் கவலை தரும்.
கடுமையான பண நெருக்கடி ஏற்படும். விலைவாசிகளை ஏற்றவேண்டி வரும்.
இலக்கினத்துக்கு அயல் வீட்டில் இருக்கும் பாரதச் சந்திரனின் கடாட்சத்தைப் பெறுவதற்கு கோள் மூட்டுவதில் நாரதரை
மிஞ்சிய ராகு ஐயாவான கதிர்காமத்தாரின் முயற்சிகளும் உடன் பலன் தராது.
உலக நவக்கிரகங்களின் பார்வை இலங்கைத் தீவின் மீது இருப்பதால் பாரதசந்திரனார் இப்போதைக்குச் சூரிய
தேவரோடு நேரடியாக முரண்படும் போக்கைத் தவிர்த்துக் கொள்ளவே விரும்புவர்.
எல்லா விதத்திலும் கிரக நிலைகள் உங்களுக்கு மிகவும் பாதகமாகவே உள்ளன.
வன்னீஸ்வரம் சென்று இடைக்கால நிர்வாகாபிஷேகம் செய்ய முயலுங்கள்.

*- திருஞான சாஸ்திரிகள்*




### லென்னி புரூஸ் பொன்மொழிகள்

*லென்னி புரூஸ்*

**ஒவ்வொரு நாளும் மக்கள் சர்ச்சிலிருந்து வெளியேறி கடவுளிடம் மீண்டும் தஞ்சமடைகின்றார்கள்.**

✪ ✪ ✪

நீ ஏன் யேசு கிரிஸ்துவைக் கொலை செய்தாய் என்று பலர் என்னிடம் கேட்கிறார்கள். எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை இது நான் பங்கு பெற்ற, கட்டுக்கு மீறிச் சென்றுவிட்ட ஒரு பார்ட்டியில் நடந்திருக்கலாம். 'அவர் ஒரு மருத்துவராக ஆக விரும்பவில்லை. அதனால்தான் நாங்கள் அவரைக் கொன்றோம்'

(யூதர்கள் பெரும்பாலானோர் அமெரிக்காவில் மருத்துவர்கள். அதைக் கிண்டல் செய்வது இந்த வாசகம் -மொ பெ)

✪ ✪ ✪

*இடதுசாரிகள் எல்லாவற்றையம் புரிந்து கொள்கிறார்கள் –மக்களைத்தான் புரிந்துகொள்வதில்லை.*

✪ ✪ ✪

உலகத்திலேயே உண்மையான கலை என்பது சிரிப்புத்தான். நகைச்சுவை பண்ணுவதுதான். இதனை நீங்கள் போலித்தனமாகச் செய்யவே முடியாது. ஒரு மணி நேரத்துக்குள் மூன்று தடவை போலித்தனமாகச் சிரிக்க முயன்று பாருங்களேன். ஹா ஹா ஹா ஹா ஹா... அவர்கள் உங்களைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விடுவார்கள். உங்களால் சிரிப்பு வராமல் போலியாக தொடர்ந்து சிரிக்கவே முடியாது.

✪ ✪ ✪

காமெடியனின் வேலை பார்வையாளர்களை ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும் ஒரு முறை சிரிக்க வைப்பது.

## ஏங்கேயோ கேட்ட கடி

*வைஷாலி*

காகம் ஏன் தண்ணீரில் மூழ்குவதில்லை?
**அது கரையுமே**

☺ ☺ ☺

டைப்ரைட்டிங் மெஷின் பெண்பால்டா
எப்படிடா
**ரிப்பன் கட்டியிருக்கு பாரு**

☺ ☺ ☺

தயிர் ஏன் வெள்ளையாக இருக்கிறது?
**தோய்க்கிறதாலே**

☺ ☺ ☺

காதலர்கள் ஏன் எப்பவும் பொய்யே பேசுகிறார்கள்?
**அவர்கள் `மெய்' மறந்து காதலிப்பதால்**

☺ ☺ ☺

போட்டாகிராபி தொழில் செய்ய முக்கியமானது எது? திறமையா அதிரிஷ்டமா?
**இரண்டும் இல்லை, கேமரா.**

☺ ☺ ☺

ரயில் வரும்போது ஏன் கேட்டை மூடிடறாங்க தெரியுமா?
ம்...
**ஆ... இதுகூட தெரியாம இருக்க பாரு.. ரயில் ஊருக்குள்ளாற போயிரக்கூடாதுன்னுதான்**

☺ ☺ ☺

நீயும் ரெண்டு பேரும் சேர்ந்து ஒரு குண்டுசி தொழிற்சாலை துவங்கறதா இருந்தீங்களே என்னாச்சி?
**அவங்க பின் வாங்கிட்டாங்க.**

☺ ☺ ☺

தெருவில போற எல்லோரும் அந்த ஆள்கிட்ட டைம் கேட்டுட்டு போறாங்களே ஏன்?
**அவர் வாட்ச்மேனாம்**

☺ ☺ ☺

எல்லாப் பணத்திலயும் ஏன் காந்தி சிரித்துக்கொண்டே இருக்கிறார்?
**அழுதா பணம் நனைஞ்சி போயிருமே**

☺ ☺ ☺

தொலைபேசியில்: டாக்டர்! என் கணவர் ஒரு பேனாவை விழுங்கிவிட்டார்.
இன்னும் சில நிமிஷங்களில் வந்துவிடுகிறேன்
அதுவரை நான் என்ன செய்வது?
**பென்ஸிலை உபயோகியுங்கள்**

☺ ☺ ☺

நாய் வியாபாரம் பண்ணீங்களே இப்ப எப்படியிருக்கு வியாபாரம்?
**கையை கடிச்சிருச்சி**

☺ ☺ ☺

படிச்சவனா இருக்க, நீயே ரூபா நோட்டு அடிக்கலாமா?
**நான் சுயநிதிக் கல்லூரியில் படிச்சவன் சார்.**

☺ ☺ ☺

நீண்டநாள் உயிரோடு வாழ வழி என்ன?
**வேறென்ன சாகாமல் இருப்பதுதான்**

☺ ☺ ☺

நாலுநாளா எனக்குத் தாங்க முடியாத இருமல்...
**பெஸ்ட் ஆஃப் லொக்**

☺ ☺ ☺

எலெக்ட்ரிக் ஒயர்ல மூணு எறும்பு போச்சி. ரெண்டு எறும்பு ஷாக் அடிச்சிச் செத்துப் போச்சி. ஒண்ணு மட்டும் சாகலை. ஏன்?
**அது கட்டை எறும்பு.**

☺ ☺ ☺

## சிந்தி நகைச்சுவை

➲ இந்திரன் ஒருமுறை எல்லா இந்திய சமூகத் தலைவர்களையும் சந்திக்க ஏற்பாடு செய்தான். ஒருவர் பின் ஒருவராக எல்லா சமூகத்தலைவர்கள் முறை வரும்போதும், இந்திரன் மரியாதையுடன் எழுந்து நின்று வணக்கம் சொன்னான்.

சிந்தி சமூகத்தலைவரின் முறை வரும்போது மட்டும், இந்திரன் எழுந்திருக்காமல், `ம்ம்.. சரி சரி.. போய் அமருங்கள்' என்று சொன்னான்.

அங்கிருப்பவர்கள் எல்லோருக்கும் ஆச்சரியம். இந்திரன், ஆதிவாசிகள், தலித்துகள், இன்னும் எல்லா சமூகத்தினரையும் கவுரவப்படுத்திவிட்டு சிந்தியை மட்டும் இப்படி அவமானப்படுத்துகிறானே.. என்று.

கேட்டே விட்டார்கள்.

அதற்கு இந்திரன் சொன்னான் `நான் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் சொல்லியிருந்தால், அவர் அதற்குள் என்னுடைய இருக்கையில் உட்கார்ந்துவிடுவார்'

*(எதியோப்பியாவிலிருந்து க்யான்ஷாம்தாஸ் சஜானி)*

🎭 🎭 🎭

➲ *ஒரு பிச்சைக்காரன் ஒரு பணக்கார சிந்தியிடம் பிச்சை கேட்டான்.*

*பிச்சைக்காரன்:* பகவான் பெயரில் எனக்கு ஒரு ரூபாய் தாருங்கள் அய்யா...

*சிந்தி:* ஏன் ரூபாய் கேட்கிறாய். வா என்னோடு கிளப்பில் போய் ஆட்டம் போடலாம்

*பிச்சைக்காரன்:* எனக்கு எதற்கய்யா கிளப்பில் ஆட்டம் போடவேண்டும், ஒரு ரூபாய் கொடுத்தால் போதுமானது.

*சிந்தி:* சரி வா என்னோடு மதுக்கடைக்குப் போய் நன்றாகக் குடிக்கலாம்.

*பிச்சைக்காரன்:* எனக்கு மதுப் பழக்கம் இல்லை. ஒரு ரூபாய் கொடுத்தால் போதுமானதய்யா

*சிந்தி:* அப்படியென்றால் என்னோடு நிச்சயம் என் வீட்டுக்கு வரவேண்டும். இந்த காரியம் எல்லாம் செய்யாதவன் கதி என்ன ஆகிறது என்று என் மனைவிக்குக் காட்டவேண்டும்.

🎭 🎭 🎭

➲ *சிந்தி:* டாக்டர், நான் மது, மாது, பாட்டு, கூத்து எல்லாம் விட்டுவிட்டால் நிறைய நாட்கள் வாழ்வேனா?

*டாக்டர்:* அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. வாழ்வது அதேகாலம்தான். ஆனால் ரொம்பநாள் வாழ்வது போல தோன்றும் அவ்வளவுதான்.

🎭 🎭 🎭

➲ *டாக்டர்:* உடம்பில் 1000க்கும் மேற்பட்ட எலும்புகள் இருக்கின்றன என்று தெரியுமா உனக்கு?

*சிந்தி:* ஷ்.. என் நாய் வெளியே இருக்கிறது. அதற்கு கேட்டுவிடப்போகிறது.

## தேர்தல் ஸ்பெஷல் படங்கள்

*– வரதன் –*

**புதுக்கோட்டையிலிருந்து யார்...?** - கதை திரைக்கதை நெறியாள்கை ஜெ.ஜெயலலிதா

◂◂ ॥ ▸▸

**ஜுட்** - கதை இயக்கம் தி.மு.க

◂◂ ॥ ▸▸

**எங்கள் அண்ணா** - கதை இயக்கம் வைகோ

◂◂ ॥ ▸▸

**வெறு(ம்)மாண்டி** - கதை இயக்கம் திருமாவளவன்-கிருஷ்ணசாமி

◂◂ ॥ ▸▸

**வாய் ஜாலம்** - கதை: கருணாநிதி
வசனம்: ஸ்டாலின்
திரைக்கதை: தயாநிதி மாறன்
இயக்கம்: மு.க. அழகரி
*(இது ஒரு குடும்பத்தின் சித்திரம்)*

◂◂ ॥ ▸▸

**இந்தியன்** - கதை இயக்கம் காங்கிரஸ்

◂◂ ॥ ▸▸

**அந்நியன்** - கதை இயக்கம் பா.ஜ.க.


# போதை

அந்தோ !
மாபெரும் சனத்திரள்
உலர்ந்து கொண்டிருப்பதைக்
கண்ணுற்றேன்

கனவுத் தொழிற்சாலையினர்
போதையேற்றும் வாயுக்களைக்
உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள்

பெண்கள், ஆண்கள், சிறுவர்கள்
இளம்பிள்ளைகள் அனைவரையும்
பொம்மைகளாக்கி வெளித்தள்ளும்
பகீரதப்பிரயத்தனங்களில் இறங்கியிருக்கிறார்கள்.

அவர்களது உடல்களை நரம்பு வாத்தியமாகவும்
தோல் வாத்தியமாகவும், வேறு பல
பண்டங்களாகவும்
வலிந்து மாற்றுகிறார்கள்
பின்னர்,
போதை யேற்றும்
வண்ணமாய்
மீட்டுகிறார்கள்



உச்சத்துக்கு
ஏறுகிறது
விழிகளையும் குருடாக்கும் போதை,
வன்ம இசையும் போதைச் சொற்களும்
முக்கலும் முனகலொலியும் பாடாய்ப்படுத்துகிறது

அழிவு காலத்தை அண்மித்தவர்களை
ஆபத்து நெருங்கி வருகிறதைப் போன்று
மிகப் பெரிய பிசாசு
கிசு கிசு வென்று வளர்ந்து வருகிறது

வாத்தியங்களாகவும் வடிவமைக்கப்பட்ட
அவர்களின் உடல்களிலிருந்து
நிணமும் சீழும் வடிகிறது
ஊது குழல்களின் வழியாகவும்
தொலைக்காட்சி பெட்டிகளின் வழியாகவும்.
அந்தோ !
போதையின் ஊசிமருந்துகொண்டு
பாய்ந்து தாக்குகிறார்கள்

அப்பொழுதாகினும்
போதை கலைந்து சனங்களின் மத்தியிலிருந்து
அவர்களுடைய ஆத்மார்த்தமான
பாட்டும் இசையும் பண்ணும், மொழியும்
எழும்பாமலா போய் விடும்?

**தா.பாலகணேசன்**

# மாற்றம்

1987ம் ஆண்டு காலப் பகுதி. அப்போது எங்கள் பொழுதுபோக்கு கிரிக்கெட்தான். நாங்கள் வசதியானவர்கள். அதனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கிரிக்கெட் 'பாட்' வைத்திருப்போம். ஒவ்வொருவரின் உயரத்திற்கும் ஏற்றமாதிரி உயரமாகவும், கட்டையாகவும், அழகாகவும் அவை செதுக்கப்பட்டிருக்கும். ('தென்னயில ஓலையளைப் பிள்ளையள் கிடக்க விடாதுகள்' என்ற அம்மாக்களின் முறுமுறுப்பை ஓரங்கட்டி வைத்துவிடுவோம்) ஆனால் பந்து மட்டும் ஒன்றே ஒன்றுதான் இருக்கும்.

ஊரிலுள்ள கோவிலின் வீதிதான் எங்கள் விளையாட்டு மைதானம். விடுமுறையில்லாமல் தினமும் அங்கு 'மச்' நடக்கும். ஆனால் என்னவோ, அடிக்கிற பந்துதான் அடிக்கடி வீதிக்கு அருகில் உள்ள காணிக்குள் விழுந்து 'மச்'சைக் குழப்பிவிடும்..!

காரணம் காணிக்குச் சொந்தக்காரரான விஞ்ஞானியார்தான். மனிசன் காணிக்குள்ளை நின்றால், விழுந்த பந்தை எடுக்க விடாது. போனால் சேத்து மண்ணாலை அள்ளி எறியும். நாங்களும் அப்படித்தான், மனிசன்ரை வெங்காயம் பாழாய் போயிடும் என்று பாக்கிறேல்லை. அடிச்சவன் ரன் ஓடிவிடுவான் என்று, பந்து விழுந்து கிடக்கிற நேர்கோட்டிலைதான் ஓடிப்போய் எடுக்கிறது.

ஒரு கட்டத்திலை கிரிக்கெட் விளையாட முடியாத நிலை வந்தவிட்டது. நாங்களும் ஏன் பிரச்சினை என்று யாருக்கும் நெருக்கடி தராமல் கிரிக்கெட்டை கைவிட்டு தாச்சிக்கு மாறிவிட்டோம்.

* * *

இராமன் வனவாசம் முடித்து நாடு திரும்பிய கதைபோல், 14 வருடங்களின் பின் தாய் மண்ணை அடைகின்ற வாய்ப்பொன்று கிடைத்தது. பழைய நினைவுகள் அலைமோத, விளையாட்டு மைதானத்தைப் பார்த்துவரச் சென்றேன். என் கண்கள் ஆச்சரியத்தில் நிலைத்துவிட்டன. அங்கே புதிய தலைமுறை ஒன்று விளையாடிக் கொண்டிருந்தது தாச்சியல்ல, கிரிக்கெட். வீதியில் அல்ல அந்தக் காணிக்குள். ஆச்சரியத்துடன் சைக்கிளில் நின்று இறங்கி, அவர்களின் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தேன்...

'அடியடா... அடியாடா...' என்றொரு குரல்...

குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தால், அதே விஞ்ஞானியார்..!

என் கண்கள் ஆச்சரியத்தால் இரு மடங்காகியது.

சேறள்ளி எறிந்த பழைய ஞாபகங்கள் வந்து போனாலும், மெதுவாக அவர் அருகில் சென்றேன். என்னை அடையாளம் கண்டுகொண்டவர், வழமையான கேள்வி – பதில்களை முடித்துக் கொண்டார்.

'ஏன் விஞ்ஞானி அண்ணை, இப்ப தோட்டம் செய்யிறேலையோ.?' என்றேன்.

'அட... என்ரை மூண்டு பிள்ளையள் வெளியிலை இருக்குதுகள். அதுகள் அனுப்புறதே என்ரை செலவுக்கு மேலாலை வருகுது. பிறகேன் நான் உடம்பை முறிச்சுத் தோட்டம் செய்யவேணும்..?' என்று எதிர்க்கேள்வி போட்டார்.

'அப்ப சரி அண்ணை, நான் வாறன்...' என்றுவிட்டு சைக்கிளை மிதிக்கத் தொடங்கியபடி நினைத்தேன்...

ஒய்வற்ற புலம்பெயர் வாழ்க்கை, இப்படியான சிலரை எவ்வாறெல்லாம் சோம்பேறியாக்கிவிட்டதென்று...

**– செந்தூரன்**

(24ம் பக்கத் தொடர்ச்சி)

# உள்ளொளி

கைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையை, அகத்தில் உள்ளொளி ஒளிரும் நிலையை ஆங்கிலம் Enlightenment என்ற சொல்லால் குறிப்பிடுகிறது.

பௌத்தம் நிர்வாணம் என்கிறது. இந்து சமயம் முக்தி என்கிறது. கிருஸ்துவ சமயமும் இஸ்லாமிய சமயமும் சுவர்க்கத்தின் இராச்சியம் என்கின்றன. எச் சொற்பதத்தால் சொன்னாலும் அது அறியாமை என்னும் அக இருள் நீங்கிய உள்ளொளியையே சுட்டுகிறது.

எம்முள் மேலாண்மை செலுத்திக்கொண்டு இருக்கும் நான் என்ற அறியாமை எமது அழியும் உடம்புக்குச் சூட்டிய பெயர்களும் அவற்றை ஒட்டி நாம் சுமந்து கொண்டிருக்கும் போலி அடையாளங்களும் முற்றுமுழுதாக எம்முள் நீங்கிவிட்டால் மாத்திரமே எம்முள் உள்ளொளி பிரகாசிக்கும். இதனையே நிலையேறுடைமை என்றும் பேரின்ப நிலை என்றும் சொல்கிறார்கள்.

(24ம் பக்கத் தொடர்ச்சி)

# எமது விடிவிற்காகத் தமது உயிர்களை...

பெறுகிறாள். பின்பு ஓயாத அலைகள்-02 நடவடிக்கைக்குச் சென்றாள். நீண்ட காலமாய் சண்டையிலும் பயிற்சியிலும் மாறி மாறி ஈடுபட்டதால் இவளது சண்டைத்திறன் வீரியம் பெற்று கேணல் கிட்டு பீரங்கிப் படையணிக்கு பெருமை தேடிக்கொடுத்தது.

ஓயாத அலை-01, ஓயாத அலை-02 ஆகிய இரண்டு சமர்களிலும் நிர்மலாவின் செயற்பாடுகள் துல்லியமாய் இருந்தன. தன்னோடு நிற்கும் போராளிகளை வழி நடத்திச் சண்டை பிடிப்பதிலும் இவள் புலிதான். மேலும் ஓயாத அலை-03 சமர் பொங்கி எழுந்தது. நிர்மலா, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி பகுதிகளில் நின்று தனது பணியைச் செய்து கொண்டிருந்தாள்.

வன்னியில் தொடங்கிய ஓயாத அலை-03 யாழ். மண்ணிலும் வீசத் தொடங்கியது. இதன் போது நிர்மலா யாழ். மண்ணுக்கு வருகிறாள். பின்பு வடமராட்சிக் கோட்டக் குடாரப்பு பகுதியில் மோட்டாருடன் எதிரியின் அழிவை எண்ணி நிலை எடுத்துக் கொள்கிறாள். 01.04.2000ம் ஆண்டு இயக்கச்சிப் பகுதியில் நின்று சண்டை பிடித்துக் கொண்டிருக்கும் போதுதான், எதிரி ஏவிய எறிகணை ஒன்று இவளின் மோட்டார் நிலைக்கருகில் வீழ்ந்து வெடித்தது. அப்போது அதில் பறந்த எறிகணைத் துண்டொன்று இவளது மார்பிலும் பட்டு விடுகிறது.

இதன் போது நிர்மலா அன்னை மண்ணைக் குருதியுடன் முத்தமிட்டு மேஜர் நிர்மலாவாய் தமிழீழ விடுதலையில் உரமாகிக் கொண்டாள்.

ஆயிரம் ஆயிரம் மாவீரர்கள் வரிசையில் எங்கள் சகோதரி மேஜர் நிர்மலாவும் சேர்ந்து கொள்கிறாள்.

இம்மாவீரர்களின் இலட்சியக் கனவை நெஞ்சினில் சுமந்து விடுதலைப் பாதையில் இவளின் தோழர்கள் வீறுநடை போடுகினறனர்.

***– கேணல் கிட்டு பீரங்கி மகளிர் பிரிவு – முகந்தினி.***





விசேட விலைக் கழிவு

RHYTHM

Website
rhythmentertainment.com

▶ Tamil, English, Hindi Movies for Sale
▶ Tamil, English, Hindi Movies for Rent
▶ Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

▶ Telephone Cards
▶ Party Shop
▶ Video Filming
▶ Photography

# இலங்கை விவகாரம்:

# இந்தியா தொடர்ந்து பாராமுகமாக இருக்க முடியுமா?

இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா இப்பொழுது ஒரு தமிழர் சார்பு நிலையை எடுத்திருப்பது போற் தோன்றுகிறது. இது சிலரால் அவ்வப்போது வெளியிட்ட கருத்துக்களில் வெளிப்படுகிறது. தமிழரது பிரச்சினை சம்பந்தமாக நிலைமைகள் எப்படிக் காலப் போக்கில் வளர்ந்து வெளிப்படக் கூடும் என்பதைச் சிறிய அளவிற்தானும் தென்படும் அறிகுறிகளாக அவற்றைக் கொள்ளலாம். தனித்தனியாக வெவ்வேறு காலகட்டங்களில் வெளியிடப்பட்ட அவர்களது கருத்துக்களை ஒன்று சேர்த்துப் பார்த்தால் மொத்தத்தில் இந்தியாவின் சிந்தனைப் போக்கை நாம் பயனுள்ள வகையில் புரிந்து கொள்ள இயலும்.

தமிழர் பிரச்சினை மீதான இந்தியாவின் கவனம் முனைப்பு பெறும் அதேவேளையில் காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான ஜனநாயக முற்போக்கு முன்னணி அரசு, முஸ்லீம்கள் பற்றி உள்ளார்ந்தமாகக் குறிப்பிடா விட்டாலும் அவர்களது பிரச்சினையையும் கூடுதலான முறையில் வெளிப்படையாக அடையாளங் காண்கிறது. முஸ்லீம்கள் 'சமயச் சிறுபான்மையினர்' என்ற ஒரு புதிய வகைக்குள் வருகிறார்கள் என்று இந்தியா கருதுகிறது. சிறீலங்காவின் அரசியலுடன் பழக்கப்பட்டவர்கள் 'சமயச் சிறுபான்மையினர்' என்ற நிலை மட்டுமே இனப்பிரச்சினைக்கு ஓர் இடர் ஊசலாட்ட நிலையைத் தோற்றுவித்துள்ளது என்ற யதார்த்தத்தை உணர்ந்துகொள்வர். இப்பொழுது தான் முதல் முறையாகப் புதுடெல்லி தனது கொள்கை அறிக்கையில் 'சமயச் சிறுபான்மை' பற்றிக் குறிப்பிட்டுள்ளது. இதற்கு முந்திய அறிக்கைகளில் அது 'சமூகங்கள்' பற்றியே பேசியிருந்தது. இதன் மூலம் சிறீலங்கா முஸ்லீம்களை, முன்னெப்பொழுதுமில்லாதபடி, புதுடெல்கி தனது அணுகுமுறையில் அண்மைக்குக் கொண்டுவந்துள்ளது போற் தோன்றுகிறது. இப்பொழுதிலிருந்து முஸ்லீம்களுடனான இந்தியாவின் உறவு ஓர் ஆரோக்கிய நிலையிலிருக்கும்.

புதிய கொள்கையின்படி இந்தியா சரியாக எதைச் செய்ய முடியுமென்பதில் ஜனநாயக முற்போக்கு முன்னணி எதிலும் குறிப்பாகத் தங்கியிராது. தமிழர் பிரச்சினையில் ம.து.மு.க., தி.மு.க, பா.ம.க. போன்றவை இந்தியா எதையெதைச் செய்யவேண்டுமென விரும்புகின்றனவோ அவற்றிலும், வெளியுறவுக் கொள்கை ஆலோசகர்கள் எதையெதைக் கூறுகின்றார்களோ அவற்றிலும், புலனாய்வுத்துறை ஆலோசகர்கள் எதையெதைக் கூறுகிறார்களோ அவற்றிலும் இந்தியாவின் செயற்பாடுகள் தங்கியிருக்கும். ஜனநாயக முற்போக்கு முன்னணியிலுள்ள முக்கிய மூன்று கட்சிகளிலும் ம.தி.மு.க. தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கூடிய அக்கறை கொண்டுள்ளது. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இது விடயமாக

*'நோர்வேயை இடையீட்டாளராக மேற்கொள்ளப்பட்ட அமைதிப்பேச்சுவார்த்தை விடுதலைப் புலிகளைத் தமிழர்களின் 'ஏக' பிரதிநிதியென்ற நிலைக்கு உயர்த்தி அதற்கான ஒரு சர்வதேச அங்கீகாரமும் கொடுத்துள்ளது. இது ஓர் அரசியல் யதார்த்தம்.*

ஏற்கனவே பேசியுள்ளார். அவர் ஊடகவியலாளர்களிடம் பேசும்போது, இந்தியா விலகித்தூர நிற்கும் தனது மனப்பான்மையையும் போக்கையும் கைவிட்டு நோர்வேயினால் வழிநடாத்தப்பட்டு வரும் சர்வதேச ஆதரவைப் பெற்றிருக்கும் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டுள்ளார். முன்னர் நடந்த தலையீட்டின் கசப்பான அனுபவங்கள் பற்றியும், ராஜீவ் காந்தியின் கொலை பற்றியும் குறிப்பிடுகையில், இந்தியா போன்ற நாடு இறந்த காலத்தின் கைதியாக இருத்தலாகாது என்று வைகோ கூறியுள்ளார். இலங்கைத் தீவில் மீண்டும் அமைதி திரும்பவும், முற்றுகைக்கு உட்பட்டுள்ள தமிழ் மக்கள் தங்களுடைய சட்ட பூர்வமான அபிலாசைகளை அடையவும் இந்தியா ஓர் ஆதரவான பங்கை வகிக்கவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். தக்கதொரு நேரத்தில் இப்பிரச்சினையை இந்திய அரசுடன் எடுக்கப் போவதாகவும் அவர் சொல்லியுள்ளார். ஜனநாயக முற்போக்கு முன்னணியில் ம.தி.மு.க இருந்தாலும் அது அரசாங்கத்தின் ஓர் அங்கமாய் இல்லையென்றும், தமிழர் சார்பில் கடுமையாகச் செயல்முறையில் இறங்கும்படி இந்திய அரசுக்கு வைகோ அழுத்தங்கள் கொடுப்பாரேயானால், தங்களைத் தமிழ்க் கட்சிகள் என உரிமைகோரும் பா.ம.கவும், மென்போக்குடைய தி.மு.கவும் கூட ம.தி.மு.க.வுடன் இணைந்து செயற்பட வேண்டி ஏற்படும்.



வெளியுறவுக்கொள்கை ஆலோசகர்களைப் பொறுத்தமட்டில் முதலில் ஜிதேந்திரநாத் தீக்ஷித்தை எடுத்துக்கொள்வோம். அவருடைய ஆகப் பிந்திய கொள்கை முறைப்படுத்தல், அவர் மீனாட்சி ஐயருக்கு வைகாசி 2ம் திகதியில் அளித்த செவ்வியில் சொல்லப்பட்டுள்ளது. அதில் அவர் தனது பழைய நிலைப்பாட்டிலிருந்து விலகிச் செல்லும் தனது புதிய போக்கை மிகவும் தெளிவாகக் காட்டியுள்ளார்.

'இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தையை மீளத் தொடங்குவதற்குச் சிறீலங்கா அரசுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இலங்கையின் ஒற்றுமையும் பிரதேச ஒருமைப்பாடும் சீர்குலையாவண்ணம் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பெறுவதற்காக விடுதலைப் புலிகளையும் இலங்கையின் ஏனைய தமிழர்களையும் அறிவுறுத்தி இணங்க வைக்க இந்தியா ஒத்துக்கொள்ளவேண்டும். ஓர் இணக்கமான தீர்வுக்கு விடுதலைப் புலிகள் வரவேண்டுமென விடுதலைப் புலிகளை அறிவுறுத்தி இணங்கவைக்க இந்தியா ஒத்துக்கொள்ள வேண்டும்' என்று தீக்ஷித் கூற,

'ஓர் இணக்கமான தீர்வுக்கு விடுதலைப் புலிகள் வரவேண்டுமென விடுதலைப் புலிகளை அறிவுறுத்தி இணங்க வைக்கவேண்டுமானால், இந்தியா விடுதலைப்புலிகளுடன் எதிரெதிர் செயல் விளைவுகளை உண்டுபண்ணவேண்டிவருமே? இது, இந்தியாவில் விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட நிலையில் எப்படிச் சாத்தியமாகும்?' என்ற வினாவுக்கு விடையளிக்கும்போது தீக்ஷித் அவர்கள், 'இத்தடையானது, இந்தியாவின் அரசியல் நிறுவனத்தின் சில கூறுகள் விடுதலைப் புலிகளைச் சிறீலங்காவுக்குள் ஒரு சமாதானத் தீர்வுக்குத் தள்ளிச் செல்லத் தடையாய் இருக்கும் எனக் கூறமுடியாது. இந்தியாவிற்குள் எந்த வகையிலும் விடுதலைப் புலிகள் செயற்படுவதற்கு எதிராகவே இத்தடை விதிக்கப் பட்டுள்ளது' என்று பதிலளித்தார் அவர்.

1987ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டதுபோன்று எந்த விதமான இந்திய இராணுவத் தலையீடும் நடைபெறப் போவதில்லையெனத் தீக்ஷித் கூறியதோடு அவர் மேலும் கூறுகையில், 'இந்தியாவின் உதவியும் ஒத்தாசையும் அடிப்படையில் அரசியல் சார்ந்ததாகவே இருத்தல் வேண்டும். தற்பொழுது எந்தவித இராணுவ தலையீடும் விரும்பத்தக்கதல்ல. இந்தியாவின் ஐக்கியத்திற்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் நேரிடையாகவோ மறைமுகமாகவோ விடுதலைப்புலிகள் இருந்தாலோ, இந்தியாவுக்கு எதிராக விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தில் ஈடுபட்டாலோ மட்டுமே இந்தியா அத்தகைய தலையீட்டில் ஈடுபட யோசிக்கத் தூண்டப்படக்கூடும்.' என்றார்.

வைகாசி மாதத்தின் ஆரம்பத்தில் தீக்ஷித் கூறிய கூற்றுக்கு ஒத்ததான கூற்றை, தன்னிச்சையாக, கொழும்பிலிருக்கும் இந்திய உயர் ஸ்தானிகர் நிருபன் சென் சில நாட்களுக்கு முன்னர் ஓர் அறிக்கையில் கீழ்காணும் விடயத்தைக் கூறியிருந்தார்:

'விடுதலைப் புலிகளின் மீதுள்ள தடை காரணமாக அவர்களுடன் இந்திய அரசு எவ்விதத் தொடர்பும் கொண்டிருக்காது. இந்தியப் பொது நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் வரவேற்கப்பட்டால், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தங்குதடையின்றிச் செயற்படலாம். இந்தக் கொள்கை தக்க பலனளிக்குமானால், பின்னர் புதிய நெடுநீள நிகழ்ச்சித் தொடர்களும், புதிய ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படும். இதனால் முன்னம் நினைத்திருந்த கருத்துக்கள், நோக்கங்கள் யாவும் துண்டு துண்டாக நொறுங்கிப்போகும். இது இலங்கைத் தீவின் அமைதிக்கான ஒத்துழைப்புக்கு வழி அமைக்கும்.'

*ஹிண்டுஸ்டான் ரைம்ஸ், ஒகஸ்ட் 24*, 2003ல் எழுதிய தனது ஒரு கட்டுரையில் தீக்ஷித் கீழ்கண்டவாறு எழுதியிருந்தார்: 'நோர்வேயை இடையீட்டாளராக மேற்கொள்ளப்பட்ட அமைதிப்பேச்சுவார்த்தை விடுதலைப் புலிகளைத் தமிழர்களின் 'ஏக' பிரதிநிதியென்ற நிலைக்கு உயர்த்தி அதற்கான ஒரு சர்வதேச அங்கீகாரமும் கொடுத்துள்ளது. இது ஓர் அரசியல் யதார்த்தம். எனினும் விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் கடும்போக்கைக் கடைப்பிடிப்பதையிட்டுத் தன் அச்சங்களை அவர் தெரிவித்துள்ளார். தனியான தமிழீழம் அமைப்பதே விடுதலைப் புலிகளினது அடிப்படையில் 'பாரிய அளவிலான' குறிக்கோளாக இருப்பது இந்தியாவையும் இப்பிரதேசங்களிலுள்ள ஏனைய நாடுகளையும் கவலை கொள்ளச் செய்யும். அத்தகைய, 'இனத்தை' மையமாகக் கொண்ட சுதந்திரமான நாடு, மையத்துக்கு எதிர் நிலையில் செயற்படும் சக்திகளுக்கு விசையாற்றலும் ஊக்கமுமளிக்கும். இது தெற்காசிய துணைக் கண்டத்தில் அலையலையாகக் கிளைகளைப் பரப்பும். விடுதலைப்புலிகளின் சொந்த எல்லைகளுடைய தனித் தமிழ் அரசு அமைப்பதற்கான அரசியல் யாப்புச் சார்ந்த கோரிக்கையைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்காது.' என்று எழுதியிருந்தார் தீக்ஷித்.

அவரது விதியமைப்பின்படி, இந்தியா சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆதரிக்கும் அதேவேளை, விடுத

*`கொழும்பு, தமிழர்களது அபிலாசைகளுக்குத் தெளிவான- ஐயமற்ற முறையில் மறுமொழி கூறுகின்ற ஒத்துணர்வைக் காட்டவேண்டும் என்பதை இந்திய அரசு தூண்டிக்கூற வேண்டும்.'*

லைப் புலிகளுடன் ஒரு பலமான நிலையில் இருந்து கொண்டு இணக்கப்பாடு செய்யும் பொருட்டுச் சிறீலங்கா அரசை அரசியல் ரீதியாகவும், போர் வீரர்களை அணி வகுத்து நடாத்தும் கலை ரீதியாகவும் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் இந்தியா கருதுகிறது. அவர் தனது *இந்தியன் எக்ஸ்பிரஸ்*, ஏப்ரல் 18, 2002ல் எழுதிய, அதற்கு முந்திய கட்டுரையில் அவர் கருத்தைத்தூண்டும் வகையில் கூறியதையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அன்று அவர் தனது கட்டுரையிற் கூறிய கருத்து பின்வருமாறு:

`கொழும்பு, தமிழர்களது அபிலாசைகளுக்குத் தெளிவான- ஐயமற்ற முறையில் மறுமொழி கூறுகின்ற ஒத்துணர்வைக் காட்டவேண்டும் என்பதை இந்திய அரசு தூண்டிக்கூறவேண்டும்.'

இந்திய அரசுக்கான புதிய புலனாய்வு ஆலோசகர், M.K. நாராயணனின் எழுத்துக்கள் மூலம் விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில் இந்தியாவுக்குரிய கட்டுப்பாடுகளைப்பற்றி ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்.

புலனாய்வுப் பணியகத்தின் தலைவராகவிருந்து ஓய்வு பெற்ற நாராயணன் கூறியதாவது:

'ஒரு பலம் வாய்ந்த நிலையில் அல்லாத ஒரு நிலையிலிருந்து விடுதலைப்புலிகளுடன் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தை பயன் விளைவிக்காது.

'சிறீலங்காவின் வடக்கில் தோன்றியுள்ள அச்சுறுத்துகிற போக்கிற்குப் பாராமுகமாக இந்தியா இருக்கமுடியாது. சிறீலங்காவின் ஒருமைப்பாட்டைக் காத்துப்பேணுவதோடு விடுதலைப் புலிகளினுடைய பயங்கரவாதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் இந்தியா மிகவும் கடுமையாகச் செயற்படுவதோடு, தனது பிராதிய ஆதிக்கச்சக்திக்கான பொறுப்பையும் நிறைவேற்ற வேண்டும்.'

ஹிந்துஸ்தான் ரைம்ஸ் இதழில் P.K. பாலச்சந்திரன்
தமிழில்- கந்தையா நவரேந்திரன்

# வன்னியில் இருந்து...

(சென்ற வாரத் தொடர்ச்சி)

திறந்திருந்த யன்னல்க் கதவுகள் வழியாக வந்த தென்றல் காற்று, நொந்துபோய் இருந்த என் மேனியை மெல்ல வருடிவிட்டுக் கொண்டிருந்தது. ஒலித்துக்கொண்டு இருந்த அறுபது, எழுபதுகளில் வந்த நல்ல பாட்டுக்கள் காதுக்கு இனிமையாகவும், மனதுக்கு இதமாகவும் இருந்தது. ஆழ்ந்து தூங்கிவிட்டேன். திடீரெனப் பலர் கதைக்கும் சத்தமும், சன நடமாட்டமும் இடம்பெறுவதை அறிய முடிந்தது. கண்களை மெல்லத் திறந்தேன். நடு நிசியில் திறந்துவைக்கப்பட்டிருந்த சாப்பாட்டுக் கடை என அறிந்து கொண்டேன். சிங்கள மக்கள் போடும் தேனீர் என்றால் எனக்கு அலாதிவிருப்பம். பஸ்சை விட்டு இறங்கி அரைகுறைச் சிங்களத்தில் கேட்டுத் தேனீர் வாங்கிக் குடித்துக்கொண்டு இருந்தேன். நாலு ஐந்து பஸ்கள் வரை அங்கு நின்றது. அநேகமாக எல்லோரும் தமிழ்ப் பிரயாணிகள். வெளிநாட்டில் இருந்து வந்தவர்களை அதிகம் காணவில்லை. வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் தனியார் வான்களை ரூபா பதினைந்து ஆயிரம் கொடுத்து வாடகைக்கு அமர்த்தி, தாம் கொண்டுவந்த ரெலிவிசன், வீடியோ, குளிர்பெட்டி போன்ற பொருள்களையெல்லாம் ஏற்றிக்கொண்டு போவதுதான் வழக்கம் என்று எவரோ விடுதியில் பணியாளர் ஒருவர் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. அதிகாலை 4 மணி இருக்கும். வவுனியாவை பஸ்வண்டி அடைந்தது. தாண்டிக்குளத்தில் 2 மணி நேரம் தரித்து வைக்கப்பட்டு இருந்தோம். அதிகாலை 6 மணிக்கு வன்னிக்குள் போவதற்கான கதவுகள் திறக்கப்பட்டன. முண்டி அடித்துக்கொண்டு மின்னல் வேகத்தில் வாகனங்கள் பறந்தன. ஏன் இவ்வாறு அதிவேகமாக வாகனங்களை ஓட்டுகிறார்கள் என்று ஒரு வயோதிபர் சலித்துக்கொண்டார். ஓமந்தையில் உள்ள இராணுவத்தின் தடைமுகாமைச் சென்றடைந்த வாகனங்கள் வரிசை வரிசையாக நிறுத்தப்பட்டன. சுமார் 200க்கு மேற்பட்ட வாகனங்கள், அதில் வந்த சாமான்கள், ஆட்கள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு, பரிசோதனையின் பின்னர் செல்ல அனுமதித்தனர். இரண்டு மணிநேரம் அங்கு செலவாகியது. அதனை முடித்துக்கொண்டு வாகனம் புளியங்குளத்தை நோக்கிச் சென்றது. அங்கு புலிகளின் தடைமுகாம். பதிவுகள், பரிசோதனைகள், வழமைபோல் நடந்தன. அவற்றையும் முடித்துவிட்டு வானில் ஏறி நிம்மதியாக அமர்ந்துகொண்டேன். மிக மன உளைச்சலாக இருந்தது. எவ்வளவு தடைகளைத் தாண்டிப் பிரயாணம் செய்யவேண்டி இருக்கு. உள்ளூரில் வாழ்பவர்களுக்கு இது பழக்கப்பட்டுவிட்டது. வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் மிகவும் கசப்பும், வேதனையும் அடைவார்கள் என்பது நிச்சயம். புலம் பெயர்ந்துவாழும் நடுத்தர வயதுவந்த பரம்பரையினர் எல்லோருக்கும் தம் சொந்த ஊருக்குப் போவது நிச்சயம் ஓர் அதி முக்கிய நிகழ்வாக அவர்களுக்கு அமையும். மேற்கூறிய கஷ்டங்களால் பலர் தம் சொந்த மண்ணுக்குப் போக விடும்புவதில்லை என்பது ஒரு கசப்பான உண்மைதான். ஆனால் பலர் இக் கஷ்டங்களையும் தாண்டிப் பல்வேறு காரணங்களுக்காகத் தம் சொந்த மண்ணைத் தரிசனம் செய்யத் தவறுவதில்லை. புலம் பெயர்ந்து வாழும், எதிர்காலச் சந்ததியினருக்கோ புதிய தலைமுறையினருக்கோ இது ஒரு பிரச்சினையாக இருக்கப் போவதில்லை. காரணம் அவர்கள் ஈழத்திற்கு அநேகமாகப் போகமாட்டார்கள் என்பதே கசப்பான உண்மையாக இருக்கும். பஸ்வண்டியை முன்வரும் கடைமுன்னால் நிறுத்தும்படி கூறினேன். 'ஐயா இங்கேயா இறங்கப் போகிறீர்கள்?' என்று சாரதி கேட்டார். 'ஆம். இதுதான் என் சொந்த ஊர்' என்றேன். ஆச்சரியமாக பஸ்சில் இருந்தவர்கள் என்னைப் பார்த்தார்கள். எனக்கு ஏன் என்று தெரியவில்லை. கேள்விப்படாத ஊராக இருந்த இக் கிராமம், ஜெயசுக்குரு சமருக்குப் பின் 'கனகராயன் குளம்' என்று சர்வதேச ரீதியாகத் தெரியவந்துவிட்டது என்று கூறிவிட்டு, வான் சாரதிக்கு நன்றி சொல்லி மீண்டும் என் மண்ணில் என் பாதம் தரிசனம் செய்தது.





எனது திடீர்ப் பயணம் எனது உடன் பிறப்புக்களுக்குத் தெரியாது. அக்கிராமம் சற்று நேரம் குஸ் என்றிருந்தது. என்னைச் சுற்றி எல்லோரும் வந்துவிட்டார்கள். வழமைபோல் என் கையில் ஒன்றுமே இல்லை அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுக்க. ஆனால் என் உறவுகள் அவற்றை என்றும் எதிர்பார்ப்பதில்லை. அழுபவர்கள் பாதி, சிரிப்பவர்கள் பாதி, கட்டிப்பிடிப்பவர் பலர், கைகால்களை இறுகப் பிடிப்பவர் பலர், என் கண்கள் குழமாகின. பேச முடியவில்லை. நல்ல குளிப்பு. நல்ல சாப்பாடு. நல்ல சம்பாசணை, மூன்று நாட்கள் கண்மூடி முழிப்பதற்குள் போய்விட்டது. பயணம் கிளிநொச்சி, விசவமடு, முள்ளியவளை எனத் தொடர்ந்து சுகமான அனுபவங்கள்.

கடந்த வருடம் மார்கழி மாத இறுதியில் வன்னியை விட்டு நீங்கியபோது பருவமழை கொட்டிக் குளங்கள் எல்லாம் நிரம்பி வழிந்தது. விவசாயிகள் ஆவலோடு பயிர் செய்ததைக் காணமுடிந்தது. சிறு தானியங்களும் பரவலாகப் பயிர் செய்யப்பட்டு இருந்தன. மரங்கள், கொடிகள், தோட்டங்கள் எல்லாம் பசுஞ் சோலைகளாகக் காட்சி அளித்தன. மார்கழி இறுதியில் பெய்த பருவமழை தன் சேவையை நிரந்தரமாக நிறுத்திக்கொண்டது. பங்குனி மாத இறுதிவரை ஒரு சொட்டுமழை கூடப் பெய்யவில்லை எனக் கூறினார்கள். பாரிய நீர்த்தேக்கங்களுக்குக் கீழ் இருந்த விளைநிலங்கள் நன்றாக விளைந்ததாகவும், சிறிய குளங்களில் உள்ள நீர் விரைவில் வற்றியதால் அப்பயிர்ச் செய்கைகள் அழிந்துபோய் விட்டதாகவும் கூறினார்கள். சிறுதானியங்கள் எல்லாமே நன்றாக அறுவடை செய்யப்பட்டதாகவும் கூறினார்கள். எது எப்படி இருப்பினும், சோற்றுக்குப் பஞ்சமே இல்லை. மீன், இறைச்சி, மரக்கறி, பழங்கள் எல்லாமே தாராளமாகக் கிடைத்தன. அத்தோடு அரசாங்கம் வழங்கும் இலவச அரிசி, மா மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றால் பஞ்சமே தெரியவில்லை. சாதாரணமாக எல்லா மட்டத்தினரும் அவர்கள் நிலைக்கேற்ப வாழக் கூடியதாக இருந்ததைக் காணமுடிந்தது. இது வன்னியில், குறிப்பாக எனது கிராமத்தில் உள்ள நிலைமை. ஆனால் அகதிகள் முகாம்களில் வாழ்பவர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்பதை அறிய முடிந்தது. நெல் ஒரு மூடை ஆயிரம் ரூபாவுக்கும், மிளகாய் ஒரு கிலோ நூறு ரூபாவுக்கும் விற்கப்படுகிறது. வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்பன தேடுவாரற்றுத் தாராளமாகக் கிடைக்கின்றன. இறைச்சி, மீன்களுக்குப் பஞ்சமே இல்லை. நாட்டு நிலைமை சரிவந்தால் அந்த மக்களின் வாழ்வில் நிச்சயம் வசந்தம் மீண்டும் வீசும் என்பது நிச்சயம்.



மீளக் குடியமர்வுக்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 25 ஆயிரம் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் மலசலகூடம் கட்ட 25 ஆயிரம் கொடுத்துள்ளார்கள். மலசலகூடம் இல்லாத இடமே அக் கிராமத்தில் காண்பது அரிது. தற்பொழுது வீடு கட்டுவதற்கு 75 ஆயிரம் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் நடக்கிறது.

சிறு ஒழுங்கைகள், கிராமத்துத் தெருக்கள் எல்லாம் நல்லமுறையில் சீரமைக்கப்பட்டுக் கிரவல் போட்டு போக்குவரத்தை நல்ல முறையில் செய்யக்கூடியதாக இருக்கிறது. யாழ்-கண்டி வீதி, ஏனைய பெருஞ்சாலைகள், விரிவுபடுத்தப்பட்டு, செப்பமாக, ஒப்பரவாக போடப்பட்டு போக்குவரத்து மிக மிக இலகுவாக்கப்பட்டுள்ளது. பாலங்கள், குளங்கள், இடிந்த பாடசாலைகள், பொது நிறுவனங்கள் எல்லாமே புனர் நிர்மாணம் செய்யப்படுவதை இக்கிராமங்களில் காணமுடிகிறது. ஆனால் முக்கிய பிரச்சினையாக இருப்பது, தொழிலாளர் தட்டுப்பாடு. ஒரு நாளைக்கு ஒரு வேலையாளுக்கு 300 ரூபாய் வேதனமாக வழங்கப்படுகிறது. தச்சு, மேசன், போன்ற வேலைகள் செய்பவர்களுக்கு ஒரு நாளைக்கு 500 ரூபாவும், மூன்று நேர உணவும், மதுபானமும் கொடுக்க வேண்டியுள்ளது. தொழிலாளர் தட்டுப்பாட்டின் காரணமாகவும், அதிக வேதனம் வழங்கப்படுவதாலும், மலையகத்தில் இருந்து பலர் அண்மைக் காலமாக வன்னி நோக்கி வருகிறார்களென அறிய முடிந்தது. கூடுதலான வேலைகளை இயந்திரம் மூலம்தான் செய்கிறார்கள். வீதிகள் போடுவது துப்பரவு செய்வது, மண்போடுவது, அரிவி வெட்டுவது, சீமெந்து குழைப்பது எல்லாமே இயந்திரங்கள்தான் செய்கின்றன. சாப்பாட்டுக் கடைகள், தேனீர்கடைகள், பலசரக்குக் கடைகள், இறைச்சிக் கடைகள், மதுபானக் கடைகள், எல்லாவற்றிற்குமே அதிக வியாபாராமும் இலாபமும் கிடைப்பதாகப் பலரும் கூறினார்கள். ஆனால் ஒரு துன்பமான


**பயணக் கட்டுரை**

செய்தி யாதெனில், எனது கிராமத்தில், கிராமத்தின் மத்தியில் பாரிய மதுபானக் கடை திறக்கப்பட்டு -அங்கேயே இருந்து குடிக்கக் கூடிய வசதிகள் எல்லாம் அமைக்கப்பட்டு மதுபானம் அதிக அளவில் விற்கப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் அனுமதியின் பெயரிலேயே இது செய்யப்படுவதாக அறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டபோது இவ்வாறு செய்யாவிடின், கசிப்பு கண்டபடி எல்லா இடமும் காச்சப்பட்டு விற்கப்படும். அதனால் உடலுக்கு கேடு. ஆகையால்தான் மதுபானக் கடையைத் திறக்க அனுமதி வழங்குகின்றோம் என்று பதில் கூறினார்கள். நிச்சயம் இது மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டிய விடயமாகும்.

எனது கிராமத்தில் மட்டுமல்ல, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் அடிபிடி சண்டை, களவு, வழிப்பறி, கொள்ளை, கொலை, கற்பழிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. காரணம் மேற்கூறிய நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளும், அதனால் அவர்கள் அனுபவித்த தாங்கொணாத் துயரங்களுமே இவ்வாறான நிலைக்குக் காரணம் என்று கூறினார்கள். காவல்துறையின் சேவையைப் பொதுவாக எல்லோருமே புகழ்ந்து பாராட்டினார்கள். ஐந்து நாட்கள் வன்னியில் சுகமாகக் கழிந்தன. வான்மேகங்கள் கருமுகில்களைக் கட்டி அணைத்துக் கொள்வதைக் காணமுடிந்தது. சித்திரை சிறுமாரியல்லவா! கோழிகள் நிலத்தில் சரிந்து படுத்து தம் சிறகுகளை விரிக்கத் தவறவில்லை. மறைந்து கொண்டிருந்த ஆதவன் இரத்தப் பிழம்பாய்க் காட்சியளித்தது. நாளைக்கு மழை நிச்சயம் என்றார் மாமா. அதிகாலை எழுந்து வவுனியா சென்று கொழும்பு செல்ல ஆயத்தமானேன். மீண்டும் எல்லோரும் வந்து என்னைப் புடைசூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் கண்கள் குளமாவது தெரிகிறது. வானம் பொழிந்தது. கண்ணீரும், மழைநீரும் என் மேனியை வருட, மெதுவாக ஓட்டோவில் ஏறி அமர்ந்துகொண்டேன். தொண்டையில் ஈரமில்லை. நாவரண்டுவிட்டது. பேச முயல்கின்றேன். முடியவில்லை. கை அசைத்தபடி உணர்வற்ற சடலமாய்ப் பயணத்தைத் தொடர்ந்தேன்.

**மு. குணசிங்கம்.**

# ஜே.வி.யின் பேச்சுக்கள் அமைதி முயற்சிக்கு ஆபத்தானவை



## தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

(06.06.04)

ஜே.வி.பியினர், வடக்கு கிழக்கு இடைக்கால தன்னாட்சி தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்கள், சமாதான முயற்சியைப் பாரிய அளவில் பாதிக்கக் கூடும் என்றும், இவ்வாறான கருத்துக்களால், தற்போதே சமாதான நடவடிக்கைகள் கேள்விக்குரியதாகி இருப்பதாகவும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப .தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கடந்த 5ம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த தமிழ்செல்வன், இந்தப் பேச்சுக்களின் போது தமது நிலைப்பாடு தொடர்பாகவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாகவும் பேசப்பட்டதாக கூறினார்.

உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என முன்னர் வலியுறுத்தி வந்த சந்திரிகா அம்மையார், தற்போது மக்கள் விடுதலை முன்னணியின் அழுத்தத்தின் காரணமாக அந்த நகர்வுகளில் தயக்கம் காட்டி வருகிறார் என்றும் இது நிலைமையை மோசமாக்கும் செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரசல்ஸில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலும், இலங்கையில் உடனடியாகப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற விடயமே வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும், இது சிறீலங்கா அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட அழுத்தமாகும் என்பதையும் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இந்தச்சந்திப்பு தொடர்பாகக் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் ஆர். சம்பந்தன், 'மக்கள் விடுதலை முன்னணி, இடைக்கால தன்னாட்சி அதிகாரம் குறித்து வெளியிட்ட கருத்து சம்பந்தமாகச் சந்திரிகாவே பொறுப்பேற்க வேண்டும்' எனக் கூறினார். அரசாங்கத்தின் தலைவர் என்ற வகையில் தமது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும், கட்சியைக் கட்டுப்படுத்தி வைக்க வேண்டிய பொறுப்பு, அவருக்கே இருப்பதாகச் சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளோ தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரோ இது தொடர்பாக எந்த வலியுறுத்தலையும் மேற்கொள்ள முடியாது என்றும் சம்பந்தன் தெரிவித்தார். தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகளின் நிலைமை தொடர்பாக, தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மாவட்ட ரீதியாகச் சென்று மக்களுக்கு விளக்கம் அளிப்பது என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

## வெளிநாடு செல்லலாம் என்ற பொய்ப் பரப்புரையில் சிறீலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு !

ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றுவதற்கு வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக இராணுவத்திற்கு ஆள்தேவை என்ற கவர்ச்சிப் பரப்புரையில், சிறீலங்கா அரசு மீண்டும் ஆட்சேர்ப்பை முடுக்கிவிட்டுள்ளது. இதுவரை இரு சிறிய இராணுவ அணிகளை ஆபிரிக்க நாடுகளுக்கு ஐ.நா.சேவைக்கெனச் சிறீலங்கா அனுப்பியுள்ள நிலையில், அரசாங்கம் தனது உள்ளூர் தேவையை ஈடு செய்வதற்காக, இந்த சட்டவிரோத ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. வெளிநாடு செல்லும் வாய்ப்பு என்றதும் ஏராளமான சிங்கள இளைஞர்கள் தினமும் இராணுவ ஆட்சேர்ப்பிற்கு வந்து குவிவதாகத் தெரிகிறது.

இவ்வகையில் ஆட்கள் சேர்க்கப்பட்டாலும், முதலில் பயிற்சி, பயிற்சியின் பின் தெரிவாகும் ஒரு சிலருக்கே ஐ.நா. படையில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதைத் தெரிவிக்காமல், தெரிவாகும் அனைவரும் ஐ.நா.படையில் வெளிநாட்டுக்கு அனுப்பப்படவுள்ளார்கள் என்று பொய்ப்பிரச்சாரம் செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

5ம் வகுப்பு வரை கூடப் படிக்காது, வறுமையின் பிடியால் கூலி வேலை செய்யும் இளைஞர் யுவதிகளும், வேலையற்ற இளைஞர்களும் வெளிநாடு செல்லும் வாய்ப்பை எண்ணி, அதிகளவில் தற்போது படையில் சேர்வதற்கு ஆர்வம் காட்டி வருகிறார்கள். கடந்த சில வருடங்களாக, சிறீலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு முன்னெடுப்புக்கள் நாடு தழுவிய ரீதியில் பலமாக முடுக்கி விடப்பட்டபோதும், சம்பள உயர்வு, பட்டா, போனஸ், குடும்பத்தினருக்கான சலுகைகள் என்று பல கவர்ச்சித் திட்டங்கள் அறிவிக்கப்பட்டபோதும், யாரும் படையில் சேர விருப்பம் தெரிவிக்காததால், ஆட்சேர்ப்பு முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

தற்போது வெளிநாடு செல்லும் வாய்ப்பை முன்வைத்து, ஏராளமான சிங்களவர்களைப் படையில் சேர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐ.நா. படையில் சேர்வதற்காக ஆட்சேர்ப்பதாகப் பொய்ப் பிரச்சாரம் செய்து ஆட்சேர்ப்பது சர்வதேச சட்டத்திற்கு முரணானது என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். குடாவில் மனிதப் படுகொலைகளுக்கு உத்தரவிட்ட படை அதிகாரிகளை அடையாளம் காட்டத் தயார்!

*– சிறீலங்கா படையின் முன்னாள் அதிகாரி –*

(06.06.04)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளுக்கு உத்தரவிட்டவர்கள் பற்றிய தகவலை வெளியிடத் தயாராக இருப்பதாக சிறீலங்கா படையின் முன்னாள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 1996ம் ஆண்டு இடம்பெற்ற கிருசாந்தி குமாரசாமி வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் படையதிகாரி ராஜபக்ஷ என்பவரே இதைத் தெரிவித்துள்ளார். தற்போது வெலிக்கடைச் சிறையில் இருக்கும் இவர் 1996ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாக யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்கள் மீதான வழக்கில் சாட்சியமளிக்கத் தம்மை அழைக்குமாறு தனது சட்டத்தரணி மூலம் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார். தன்னை ஒரு சாட்சியாக அழைக்கும் பட்சத்தில் இந்தப் படுகொலைகளுக்கு உத்தரவிட்ட அதிகாரிகள் பற்றிய முழு விபரத்தையும் தான் நீதிமன்றில் பகிரங்கமாகத் தெரிவிக்கப்போவதாக இந்தக் கைதி தெரிவித்துள்ளார்.

96க்கும் 98க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் காணாமல் போனதாகக் கூறப்படும் 42 பேரின் பெற்றோர், இந்த ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். இந்தக் காலப்பகுதியில் 800ற்கும் அதிகமானோர் கொலை செய்து செம்மணி போன்ற இடங்களில் புதைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## கண்காணிப்பு குழு மீது குற்றச்சாட்டு

(06.06.04)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரின் நடவடிக்கைகள் பக்கச் சார்பாக அமைந்துள்ளதாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இந்தக் கடிதத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, சில வேளைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு சாதகமாக நடந்துக் கொள்வதாகவும், மட்டக்களப்பில் இடம்பெற்ற பல சம்பவங்களுக்கு இராணுவத்தினரே காரணம் என தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்துகின்றனர். இது அடிப்படையற்றது. இதனைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார். அவர் அனுப்பிய இந்தக் கடிதத்துக்கு, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இதுவரை பதிலளிக்கவில்லை.

## முன்னாள் பிரதமர் கவலையுடன் புலம்புகிறார்

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க முக்கியமான அமைச்சுப் பதவிகளான, பொதுப் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு, துணை பாதுகாப்பு ஆகியனவற்றைப் பெற்றுள்ள நிலையில் மிகவும் மகிழ்ச்சியான மனிதராய் இருப்பார் எனப் பலர் நினைக்கக்கூடும். பாதுகாப்பு அமைச்சில் தனது பொறுப்புக்களைக் கையேற்கும் வைபவத்தில் அவர் வாடிய முகத்துடன் காணப்பட்டார். தனது மற்றைய மந்திரிச் சகாக்கள் தங்களது அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்களில் தமது தொகுதியினருக்கு வேலைவாய்ப்புக்களைக் கொடுப்பது போல், தன்னால் கொடுக்க முடியாதே என்பது அவரது ஏக்கம். தன்னால் தனது ஆதரவாளர்களை இராணுவத்தில் இணையும்படி மட்டுமே அழைக்கமுடியும்! என்று கூறிப்புலம்பிக் கொண்டிருந்தாராம்.

## குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் நிதித்துறையினர் திடீர்ச் சோதனை

தமிழீழ நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த சில நாள்களாகத் திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடவடிக்கைகளின்போது பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் பல கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நகரப்பகுதி, திருநெல்வேலி, கல்வியங்காடு, தென்மராட்சி உட்படப் பல பகுதிகளில் இந்தத் திடீர்ச் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது குழந்தைகளுக்கான லக்ரோஜன் பால்மா பக்கற்றுக்கள், கேக், பேக்கிங் பவுடர், ஜாம் போத்தல்கள், கோடியல்கள், நூடில்ஸ், பிஸ்கட் வகைகள், சொக்லேட் வகைகள், இனிப்பு வகைகள் உட்படப் பல்வேறு வகையான உணவுப் பொருள்கள் காலாவதியான நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1995ம் ஆண்டுக்குப் பின்னர் யாழ். குடாநாட்டின் வர்த்தக நிலையங்களில் மக்களின் நலத்திற்குக் கேடுவிளைவிக்கக் கூடிய உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவது அவதானிக்கப் பட்டிருப்பதாகவும் இதனையடுத்தே, விடுதலைப் புலிகளின் நிதித் துறையின் விலைக் கட்டுப்பாட்டுப்பகுதியினர் பொருள்களின் விலை மற்றும் அவற்றின் தரம் என்பவற்றைப் பரிசோதித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

திடீர் சோதனைகளின்போது கண்டுபிடிக்கப்படும் தரமற்ற உணவுப்பொருள்கள் உடனடியாகச் சம்பந்தப்பட்டவர்களின் வர்த்தக நிலைய உரிமையாளரின் அனுமதியுடன் அழிக்கப்படவுள்ளதாக நிதித் துறையினர் தெரிவித்தனர்.

## தமிழீழ மாணவர்....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டான்குளம் சந்தியிலிருந்து தியாகி பொன் சிவகுமாரனின் உருவப்படம் தாங்கிய பேரணி மாணவர்களின் இசை அணிவகுப்புடன் நகர்ந்து ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையைச் சென்றடைந்து அங்கு எழுச்சிநாள் நிகழ்வுகள் மன்னார் அடம்பன் மத்திய மகாவித்தியாலய மாணவர் தலைவி செல்வி ச.ஆரோக்கியடயானாவின் தலைமையில் நடைபெற்றது. மன்னார் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள், மாணவ எழுச்சி நாள் நிகழ்வுகள் சித்தி விநாயகர் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

திருகோணமலையில் நடைபெற்ற மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் சேனையூர் மத்திய கல்லூரியில் தமிழ் மாணவர் ஒன்றிய தலைவர் தீபா தலைமையில் இடம்பெற்றது. திருகோணமலை மாணவர் அமைப்பு பொறுப்பாளர் புரட்சியின் ஒழுங்குபடுத்தலில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் திருகோணமலை தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் குட்டி தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். மாவீரர்களான பொன் சிவகுமாரன் மேஜர் முரளி ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து மாணவர்களால் வணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து சிறப்புரைகளும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றிருந்தன.

வவுனியாவில் நடைபெற்ற மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் வவுனியா சிறுவர் பூங்கா வளாகத்தில் பல்கலைக்கழக மாணவி சோபனா தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் வவுனியா கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் ஸ்ரீநாத் பொதுச் சுடரேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். வவுனியாவில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ மகளிர் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி, வவுனியா அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேள், ஆசிரியர் விந்தன், ஆசிரியர் ஜெயச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர். மட்டக்களப்பு மற்றும் வாகரை அம்பாறைப் பகுதிகளிலும் தியாகி சிவகுமாரன் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றதாக எமக்கு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.


LA CHAPELLE
இறைச்சிக் கடை
சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

அதிசயம் ஆனால் உண்மை
உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
விமல் விநியோக நிலையம்
VIMAL DISTRIBUTION
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

Asha Video Movies
உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073
Pub-Fr-39

## ஓராண்டு... நீங்காத நினைவில்!

அன்னை மடியில்: 07.10.1961



ஆண்டவன் அடியில்: 25.05.2003

### அமரர் மகாலிங்கம் கணேசரட்ணம்
(ஆடி)

அன்பானவரே !

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு மறைந்து போனதா? நம்ப முடியவில்லை. உங்கள் அழகான மலர்ந்த வதனம் எப்போதுமே எம் நெஞ்சில் நின்று நிழலாடியபடியேதான். உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி... உங்கள் அன்புத் துணைவியும் குழந்தைகளும் இதோ உறுதியுடன் உலா வருகிறார்கள். நிம்மதியாய்த் தூங்குங்கள்.

என்றென்றும் நீங்காத நினைவுகளுடன் மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்மார், மருமக்கள்.
**00442087950654** (லண்டன்)

## வீர அஞ்சலி

தோற்றம்: 17.08.1930

மண்ணின் மடியில்: 12.02.2004

### நாட்டுப்பற்றாளர் கார்த்திகேயன் - இரகர்

சைவந் தழைத்தோங்கும் நாயன்மாருரினிலே
நன்மகனுதித்தனன் இருகுநாதனே
சைவமும் தமிழும் இவனுயிராச்சே
உழைத்தனனதற்காய் உயிர்மூச்சாய்

தானைத் தலைவன் பிரபா வழிதனிலே
கால்பதித்தனன் எங்களய்யா இரகுநாதன்
விடுதலைக்குத் தன்மகவை வித்திட்டும்
சோர்ந்திடா உழைத்திட்ட நல்வீரனே

அன்புள்ளங் கொண்டோனே நாதரே
நாயன்மார் நாதனே நற்றமிழ் வீரனே
நாதியற்ற நம்மவர்க்காய் உழைத்திட்டோனே
நீங்காதைய்யா உம் நினைவு எமைவிட்டு!

**நாயன்மார் நாதனிற்கு
எமதஞ்சலிகள்**


*– நாயன்மாருரான்*

ஈழமுரசு
POOBALAM WEEKLY
"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE
**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.
**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)
**Directeur de la publication:**
A.F. Santiogu
**Redacteur:** K. Jeisanthar
**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Via - Imprimé chez I.C.T.
Z.A. de l' EPI d'Or, 94800 Villejuif.
நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்
தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com
விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291
சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72
டென்மார்க்:
அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588
பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285
இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527
நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804
அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

Restaurant Tharsana's
* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.
Restaurant Prassah
Gastronomiques Indiennes
தர்ஷனா & பிரஷா உணவகங்கள்
இங்கு சாப்பாடுகளை ஒடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

# அமெரிக்க முன்னாள் அதிபர் றொனால்ட் றீகன் காலமானார்



அமெரிக்காவின் 40வது அதிபராக இருந்த றொனால்ட் றீகன் கடந்த 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமாகியுள்ளார். கடந்த பத்து ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டிருந்த அவருக்கு இறக்கும்போது வயது 93. 1911ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ம் திகதி டாம்பிகோ என்ற இடத்தில் ஜான் றீகன் நெல்லி தம்பதியினருக்கு இளைய மகனாகப்பிறந்த றொனால்ட் றீகன், 1932ம் ஆண்டு யுரெக்கா கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். 1932 - 37ம் ஆண்டு வரை வானொலி அறிவிப்பாளராகப் பணியாற்றிய அவர், 37ம் ஆண்டு சினிமா உலகில் புகுந்து புகழ்பெற்ற நடிகரானார். 1940ம் ஆண்டு ஜான் பெயின் என்ற பெண்ணைத் திருமணம் செய்த அவர், 49இல் விவாகரத்துப் பெற்றார். பின்னர் 1952இல் அவரது தற்போதைய மனைவியான நடிகை ஜான்சியைத் திருமணம் செய்துகொண்டார்.

1981 ஜனவரி 20ல் அமெரிக்காவின் 40வது அதிபராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1994ம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் இருந்து அல்சைய்மர் என்ற கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட அவர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார். றீகனின் மறைவுக்கு உலகெங்கிலும் உள்ள தலைவர்கள் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளனர். இவர் அமெரிக்காவின் அதிபராக பதவியேற்ற காலத்தில் முன்னாள் சோவியத் யூனியனுடனான பனிப்போரில் அமெரிக்காவின் இராணுவ பலத்தை வலுப்படுத்தி, அமெரிக்காவை முதன்மை இராணுவச் சக்தியாக ஆக்கிய பெருமையும் றீகனுக்கு உண்டென்று, அமெரிக்க வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். றீகனின் மறைவையொட்டி அமெரிக்காவின் தேசியக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளன.

## படுகொலையைக் கண்டித்து அம்பாறையில் பேரணி

ஊடகவியலாளர் நடேசனின் படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து புதன்கிழமை அம்பாறை நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கங்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணி அம்பாறை மணிக்கூட்டுச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி நகரின் மத்தி வரை ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றியத்தின் தலைவர் வசந்த சந்திபால தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பெருமளவிலான தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.


அத்துடன் அம்பாறை நகரசபைத் தலைவர் அமரசேன இலங்க கமகே, முன்னாள் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க ஆகியோரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர். 'நடேசனின் படுகொலையைக் கண்டிக்கிறோம்', 'உண்மையை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்களுக்கு மரண தண்டனையா?', 'ஆயுதக் கும்பல்களே ஊடகவியலாளர்கள் மீது கை வைக்காதே!', 'அரசே நடேசனின் கொலையாளிகளை கண்டுபிடி!', 'அன்று நிமலராஜன் இன்று நடேசன் நாளை யாரோ', 'உண்மையை எழுத உரிமையில்லையா?' ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தமிழிலும் சிங்களத்திலும் இவ்வாறான கோசங்களை எழுப்பியதுடன் பதாதைகளையும் கொண்டு சென்றனர்.

## கிழக்கைப் புலிகளிடம் விடுங்கள்; சட்டம் ஒழுங்கை நிலைநாட்டிக் காட்டுகிறோம்

– சு.ப.தமிழ்ச்செல்வன்

கிழக்கு மாகாணத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியாவிட்டால் அங்கிருந்து படைகளை விலக்கிக் கொள்ளுமாறு தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். கடந்த 4ம் திகதி வெள்ளிக்கிழமை இலண்டன் பி.பி.சி. நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வியில், அரசாங்கம் இவ்வாறு செய்யுமாக இருந்தால் சட்டத்தைச் சீரான நிலை நிறுத்தி, உண்மையான சிவில் நிர்வாகத்தை நடத்திக்காட்டுகிறோம் என்று கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை, சமாதான முயற்சிகள் குழப்பமான சூழ்நிலையில்தான் உள்ளன. சிறீலங்காவின் அரசுத்தலைவர் சந்திரிகாவால் தரப்பட்ட உத்தரவாதங்களும், வாக்குறுதிகளும் தலைமையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட சூழலில், பேச்சுக்கள் மீளத் தொடங்குவதற்கான நம்பிக்கை இருந்தது. ஆனால், ஏற்கனவே இணக்கம் கண்ட விடயங்களில் தீர்க்கமான முடிவு எடுக்கப்




படாததனால், தீர்க்கமான பதிலை அரசுத் தலைவர் தராத காரணத்தால், பேச்சுக்கள் மீளத்தொடங்குவது பற்றிய முடிவு இழுபட்டுக் கொண்டு போகின்றது என்றும் அவர் அந்தச் செவ்வியில் தெரிவித்துள்ளார்

உங்கள் அடுத்த நடவடிக்கை என்ன? என்று செவ்வியாளர் கேட்டதற்குப் பதிலளித்த தமிழ்ச்செல்வன், 'நோர்வே அனுசரணையாளர்களிடம் எங்களின் நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கியுள்ளோம். ஏனெனில் கடந்த இரண்டரை வருடங்களாக இந்தப்பேச்சுக்களில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. எங்கள் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. கடந்தகாலப் பேச்சுக்கள் குழப்பமடைந்ததுக்கும், முடக்கம் அடைந்ததுக்குமான காரணங்களைக் கண்டறிந்து புதிய பேச்சுக்களை ஆரோக்கியமாகவும் வெற்றிகரமாகவும் முன்னெடுத்துச் செல்வதற்கான புதிய சூழலை உருவாக்கவேண்டும் என்பது எமது தலைமைத்துவத்தின் நிலைப்பாடு. இதற்கான அனுசரணையாளர்கள் ஊடாக நாம் இதனைத் தெரியப்படுத்தியிருக்கின்றோம்.

அந்த அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் ஆர்வமாக இருக்கிறோம். ஆகவே, சிறீலங்கா அரசின் சாதகமான பதிலைப் பெற்றுக்கொண்டுதான் எதிர்கால முன்னெடுப்புக்கள் பற்றி உறுதியான தீர்மானங்களை எடுக்கலாம் என்று கூறியுள்ளார். கிழக்கில் சமாதானம் நிலவுகின்ற நிலைமையிலும் மக்கள் பயப்பீதியில் வாழ்கின்றார்கள்.

'பத்திரிகையாளர்கள் கொல்லப்படுகிறார்கள். இந்த நிலைமையில் மாற்றம் கொண்டு வருவதற்கு நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள்?' என்று செவ்வியாளர் கேட்ட மற்றொரு கேள்விக்குப் பதிலழித்த தமிழ்ச்செல்வன், 'யுத்த நிறுத்த சூழலில் இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்வது யுத்த நிறுத்த மீறலாகத் தான் எமது தலைமைப்பீடம் கருதுகிறது. இது சம்பந்தமான அதிகாரபூர்வமான உறுதியான நிலைப்பாட்டை நாங்கள் தெரியப்படுத்தி இருக்கின்றோம். கடந்த வியாழக்கிழமை எமது தளபதிகள், படைத்தரப்பினரை நேரடியாகச் சந்தித்து முறையிட்டிருக்கின்றார்கள்.

இப்படியான நடவடிக்கைகளுக்கு இவர்கள் முடிவு கட்டாவிட்டால், இந்த யுத்த நிறுத்த சூழலையும் சமாதான முன்னெடுப்பையையும் மேற்கொண்டு தொடர்ந்து செல்வது மிகவும் கடினமாக இருக்கும் என்கின்ற எமது நிலைப் பாட்டையும் நாம் தெரியப்படுத்தியிருக்கின்றோம். எங்களைப் பொறுத்தவரை கிழக்கிலே இப்படியான ஒரு பதற்றச் சூழலை - இப்படியான ஒரு நெருக்கடிச் சூழலை உருவாக்குவது படைத்தரப்பும், படைத் தரப்பினரால் பாதுகாக்கப்படுகின்ற குழுக்களும்தான். ஆகவே, இதனைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பு படைத்தரப்புக்கு இருக்கின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தான் இந்தப் படுகொலைகளும் பதற்ற நிலையும் தொடர்கின்றன. அங்கு சட்டம் ஒழுங்கைப் பேணுகின்ற பொறுப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் படைத்தரப்பின் கையில் இருக்கின்றது.

அவர்களால் அதைச் செய்ய முடியாதுவிட்டால், அதில் இருந்து அவர்கள் விலகிக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பொறுப்பை ஒப்படைக்கலாம். அதனை நிர்வகின்ற அல்லது சட்டம் ஒழுங்கைப் பேணுகின்ற பொறுப்பு, தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளுக்கு வருமாக இருந்தால், நாங்கள் அப்பிரதேசங்களைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம். இதனையும் நாங்கள் படைத்தரப்புக்குக் கூறியிருக்கின்றோம்.' என்று கூறியுள்ளார்.

# தொண்டமான் சந்திரிகா பேச்சுவார்த்தை தோல்வி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து கொள்வது தொடர்பாகச் சிறீலங்காவின் அரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்காவுக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டைமானுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிவில் விமான சேவை, வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு உள்ளிட்ட முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் தமக்கு வழங்கப்பட வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த கோரிக்கைகளைச் சந்திரிகா ஏற்க மறுத்துள்ளதை அடுத்தே, இருதரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்துள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசுத் தலைவர் முறைமை ஒழிக்கப்படக்கூடாது, தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசார தேர்தல் முறைமை மாற்றப்படக்கூடாது, மற்றும் கொத்மலை நீர் மின்சக்தி திட்டம் கைவிடப்பட வேண்டும்போன்ற கோரிக்கைகளைப் பேச்சுவார்த்தையின் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்துள்ளது.

இத்தகைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகளைப் பாதிக்கும் ஒரு செயலாகவே அமையுமெனச் சந்திரிகா ஆறுமுகம் தொண்டமானிடம் கூறியதாகத் தெரியவருகிறது. இந்நிலையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைத் தமது பக்கம் இழுக்கும் முயற்சிகளில் முன்னின்று செயற்பட்டதாகத் தெரிவிக்கப்படும் அமைச்சர் மங்கள சமரவீர, தற்போது இம்முயற்சிகளில் இருந்து ஒதுங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## திரைப்படத்தில் நடிக்க ரூபா 400 மட்டுமே!

பிரித்தானிய திரைப்படக் கம்பனியொன்று மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக்கிக்கொண்டு இருக்கிறது. அதற்கான ஒரு படப்பிடிப்பு கொழும்பு 10, மருதானையில் அமைந்துள்ள மருதானை தொடர் வண்டி நிலையத்தில் நடைபெற்றது. அதில் மேலதிக நடிகர்களாக நடிப்பதற்குச் (சும்மா இருப்பதற்கும் ஒன்று கூடியிருப்பதற்கும் மட்டும்) சுமார் 2000 சிறீலங்கா பொது மக்கள் (குழந்தைகள் உட்பட) சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊதியமாக ரூபா 400 கொடுக்கப்பட்டது.

## பெல்ஜியம் மகாநாடு முஸ்லீம்களைப் புறக்கணித்துவிட்டது - ஹக்கீம் குற்றச்சாட்டு

பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டு தலைமை நாடுகளின் கூட்டத்தொடர் குறித்து, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தி வெளியிட்டுள்ளது. அந்த மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் சமாதான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தனித்தரப்பு குறித்து எவ்வித கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை. டோக்கியோ மாநாட்டை மேற்கோள்காட்டி இந்த மாநாட்டின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில வார்த்தை பிரயோகங்கள், வேண்டுமென்றே நோர்வே தரப்பினால் திணிக்கப்பட்டவை என முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார். கடந்த சனிக்கிழமை அம்பாறையில் முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழு கூடிய போது கருத்துத்தெரிவித்த அவர், இலங்கை தொழிலாளர் காங்கிரசும், தமது கட்சியும் இணைந்து, தேசிய அரசியலில் தமது மக்கள் எதிர் நோக்குகின்ற சவால்கள் தொடர்பில் தொடந்தும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தைப் பலவீனமாக வைத்துக் கொண்டே தமிழ், முஸ்லிம் மக்களின் இலக்குகளை அடைய முடியும் என்றும் அரசாங்கத்தைப் பலப்படுத்தி விட்டு இந்த இனங்களின் இலக்குகளை அடைய முடியாது என்றும் குறிப்பிட்டார்.

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

மேற்கு லண்டன் மாநகரில்
புதிய நிர்வாகத்தில்... புதுப்பொலிவுடன்...
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 020 8813 9126
Pub

# தமிழீழ மாணவர் எழுச்சிநாள்

## தாயகம் எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு



சிவகுமாரனின் தாயார் திருமதி பொன்னுத்துரை அன்னலட்சுமி பொதுச்சுடரை ஏற்றி வைக்கின்றார்

(07.06.04)

தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் தமிழர் தாயகம் எங்கும் கடந்த 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை எழுச்சிப் பேரணிகள், பொதுக்கூட்டங்களுடன் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. விடுதலைப் போராட்டத்தில் முதலில் ஆகுதியான மாணவரான பொன். சிவகுமாரனின் நினைவு வளாகம் அமைந்துள்ள உரும்பிராயில் பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன. உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமான பேரணியில் மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

பேரணி, நினைவு வளாகத்தை வந்தடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின. சிவகுமாரனின் தாயார் திருமதி பொன்னுத்துரை அன்னலட்சுமி பொதுச்சுடரை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். நினைவுச் சுடரினை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அதிபர் எஸ்.யோகராசா, வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.கனகராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை யாழ். மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் ஏற்றிவைத்தார். தமிழீழ மாணவர் எழுச்சிக் கீதத்தை வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் இசைத்தனர்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாலய மைதானத்திலிருந்து தியாகி சிவகுமாரனின் உருவப்படம் தாங்கிய பேரணி நகர்ந்து புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி வளாகத்தைச் சென்றடைந்தது. புதுக்குடியிருப்பு பிரதேச மாணவர் ஒன்றியத் தலைவர் ரெறன்ஸ் தலைமையில் எழுச்சி நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது. முன்னதாக பொதுச்சுடரை புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா வித்தியாலய முதல்வர் ஏற்றியதையடுத்து, தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளைப் பிரதேசத்தில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் காலை 9.00 மணி தொடக்கம் 12 மணிவரை கல்லூரியின் மாணவர் தலைவர் மதுரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச்சுடரினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்னம் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் வேழினி ஏற்றிவைத்தார்.

மன்னார் மடு கல்வி வலயத்திலும் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வு நடைபெற்றுள்ளது. இன்று காலை 10.45 இற்கு

(தொடர்ச்சி 30ம் பக்கம்)

## கிளிநொச்சியில் போர் நினைவுச் சின்னமொன்று நாட்டப்பட்டுள்ளது

(வன்னியிலிருந்து தவபாலன்)

சிங்கள இனவாதத்தின் கொடூரத்தை வெளிப்படுத்தும் வகையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் போர் நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சகலரதும் மனதில் பதியத்தக்கதாக இப்போர் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. சிங்கள இராணுவம் நிகழ்த்திய போரின் கொடுமையின் உச்ச வெளிப்பாடாகவே அமைதி தழுவ வேண்டிய மருத்துவமனையில் இந்த நினைவுச்சின்னம் அமைந்துள்ளது.

சிறீலங்கா இராணுவ உருவங்களும், துப்பாக்கிகள், எறிகணைகள், எறிகணைச் செலுத்திகள் ஆகியவை இதில் உள்ளன. நான்கு முகங்களைக் கொண்ட ஒவ்வொரு பக்கமும் செவ்வக வடிவில் இந்த நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையின் மீது எறிகணை வீசியும், வானூர்திகளிலிருந்து குண்டுகளை வீசியும் இறுதியில் ஆக்கிரமித்தும் மிக மோசமான கொடூரங்களை சிங்கள இராணுவம் புரிந்தது. இதன் வெளிப்பாடாகவே இந்த போர் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. வன்னியில் இதுவரை காலத்திலும் அமைக்கப்பட்ட போரின் கொடூரத்தை வெளிப்படுத்தும் முதல்



நினைவுச் சின்னமாக இதுவே அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

PHONE 2000
LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE
SFR
Reparation -Abonnements Telephones Mobiles -Vente en Gros et Detail - Deblocage
Internet-installation Cybercafe -Abonnement ADSL -Creation de Site web.
PHONE 2000 2, Rue Perdonnet, 75018 Paris. ☎: 01 40 05 03 43 Fax: 01 40 05 03 53 M°: La Chapelle
PHONE 2000 85, Rue des Pyrénées, 75020 Paris. ☎: 01 40 09 13 15 Fax: 01 40 09 01 31 M°: Maraîchers
PHONE 2000 19, Rue du Labat, 75018 Paris. ☎: 01 42 58 55 40 Fax: 01 42 58 55 46 M°: Marcadet Poissonniers
PHONE 2000 Informatique 87, Rue des Pyrénées, 75020 Paris. M°: Maraîchers Tél: 06 20 21 11 11
PHONE 2000 4, Rue de Cail, 75010 Paris. ☎: 01 40 05 93 28 Fax: 01 40 05 97 03 M°: La Chapelle ou Gare du Nord
PHONE 2000 5, Bld. davout, 75020 Paris. ☎: 01 43 71 40 30 Fax: 01 40 09 01 31 Mobile: 06 17 17 28 17 M°: Porte de Vincennes
Pour plus Dinformation Visitez: www.Phone2000.net -Tel: SFR Siva: 06 20 21 11 11